கல்கி

KALKI 26-4-1970 40 காசு

சிறு கதைச் சிறப்பிதழ்





ரெக்ஸ் பற்றிய மிகவும் திருப்தியளிக்கும் இரண்டு அம்சங்கள்.

ஒன்று, இதன் உன்னத தரம் — இப்போது, இதன் விலைநயம்.

ஒவ்வொருவர் சுவைக்கும் ஏற்ற ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்களின் வகைகள்.

ரெக்ஸ் ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்கள்— அதாவது, இனிமையான, இன்சுவையுள்ள, சாறு செறிந்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உன்னத பானங்கள் இவை. கவனமுடன் தேர்ந்தெடுத்த கோத்தியான பழங்களுடன் தூய கரும்பஞ் சாற்றுப் பாகும், விசேஷமான இதர சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கப்படுகின்றன. சுவைத் தறியாத புத்துணர்ச்சி தரும் பானங்கள் இவை. இப்போது ரெக்ஸ பானங்கள் சகாய விலையில் கிடைக்கின்றன. ரெக்ஸ் பானங்களைவிட அதிக திருப்தியளிக்கும் பானங்கள் வேறென்ன இருக்க முடியும்?

- ஆரஞ்சு ஸ்க்வாஷ்
- ஆரஞ்சு கிரஷ்
- லெமன் ஸ்க்வாஷ்
- லெமன் பார்லி
- லைம் ஜூஸ் கார்டியல்
- மாங்கோ ஸ்க்வாஷ்
- கோலா கான்ஸன்ட்ரேட் ஃப்ரூட் ஸிரப்
- ராஸ்பெர்ரி ஸிரப்
- ஸ்ட்ரபெர்ரி ஸிரப்
- பைனாப்பிள் ஸிரப்
- ரோஸ் ஸிரப்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி
(இந்தியா) பிரை. லிட். பம்பாய்-1.




ஸ்ரீ கடால் மாகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கோ. லிட்.,
[illegible]

சில்லறை விற்பனை நிலையங்கள் :

216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை - 1
கட்டால் வாயில்ஸ் : 2/133, மவுண்ட் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை - 6

ராபின் ப்ளூவின் பிரத்யேக திறமை



சொற்ப செலவில் உங்கள் துணிகளை அற்புதமாக வெண்மையாக்குவதே!

ராபின் ப்ளூ தூய வெண்மை அளிக்கவல்லது. அது உங்கள் துணிகளுக்கு மற்ற ப்ளூ வகைகளால் முடியாத கண்கவரும் தூய வெண்மையை ஒரே ரீதியான முறையில் கொடுக்கிறது. சிறிதளவு ராபின் ப்ளூ ஏராளமான துணிகளை வெண்மையாக்குகிறது. மற்றும் விசேஷம் என்னவெனில் அது எந்த விதத்திலும் துணிகளைப் பாதிக்காது. அது மட்டுமல்ல, உங்கள் துணிகளை எப்பொழுதும் வெள்ளை வெளேரென்று இருக்கச் செய்கிறது.



இயற்கையான கண்கவரும் தூய வெண்மைக்கு ராபின் ப்ளூ

கல்கி

சிறுகதைச் சிறப்பிதழ்

பொருளடக்கம்

சாதாரண, சித்திரை, 13 - 1970, ஏப்ரல் 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00




பம்பாய், த்ரங்கத்ரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட் சேல்ஸ் மானேஜர் ஸ்ரீ P. V. A. கிருஷ்ணன் அவர்கள் குமாரத்தி சௌ. P. A. கீதாவுக்கும், (F/Lt.) C. V. கனராஜ் அவர்களுக்கும் பம்பாயில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



புதுக்கோட்டையில் "கல்கி" "ஸ்வராஜ்யா" பத்திரிகைகளுக்கு ஏஜண்டாயிருக்கும் ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய அய்யருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் அவர்களிடமிருந்தும், ஸ்கந்தகிரி ஸ்ரீ சாந்தானந்த சுவாமிகளிடமிருந்தும் அனுக்கிரஹித்து பிரசாதங்கள் வரப்பெற்றன. வாழ்க தம்பதிகள்!


இந்த முட்டுக் கட்டையைத் தகர்க்க வேண்டும்!
தீவிரவாதிகள்
ஸுப்ரீம் கோர்ட்
நீங்கள் முறை முறைத்தீர்களோ, நில வரம்பை ஆறடி நீளம் மூன்றடி அகலமாகக் குறைத்து விடுவோமாக்கும்!
விவசாயி
தமிழக அரசாங்கம்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ✿ இதழ் 39

தார்மிகப் புரட்சி தேவை

உலகம் முழுதும் ஒரு சமுதாயமாக இயங்க வேண்டும் என்று எல்லா தேசங்களும் கூடிப் பேசுகின்றன. ஆனால் அந்த ஆசையை விட, தேசிய உணர்வு பலமடைந்து வருகிறது. ஒவ்வொரு தேசத்தையும் எடுத்துக் கொண்டால், அவற்றுக்குள் குறுகிய பிராந்திய அபிமானங்கள் வலுத்து வருகின்றன. இந்த அம்சத்தில் நமது இந்திய நாட்டுக்கு முக்கியத்துவம் பொருந்திய சில நடவடிக்கைகளைச் சோவியத் ருஷ்யாவில் காண்கிறோம்.

சோவியத் யூனியனின் ஆட்சி முறையை ஜனநாயக ரீதியில் மாற்ற வேண்டும் என வற்புறுத்தி அந்தத் தேசத்தின் விஞ்ஞானிகள் சோவியத் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியதாகச் சிறிது காலத்துக்கு முன்னர் செய்தி வந்தது. குறுகிய மாநில, தேசிய மனப்பான்மைகள் நாடு முழுவதையும் கவனிக்குமிடத்துப் பேராபத்தானவை என்று அதில் கூறப்பட்டிருந்தது. மேற்படி கடிதம் உண்மையாக இருக்கலாம், அல்லது சோவியத் ருஷியாவின் பகைவர்கள் திரித்துக் கூறியதாக இருக்கலாம். ஆனால் அதில் உள்ள புகார் கவனத்துக்குரியது. குறுகிய மாநில, தேசிய உணர்வின் ஆபத்தைச் சமாளித்துப் பொது மக்களைத் திருப்தி செய்விக்க வேண்டுமானால் விரிவான முறையில் ஜனநாயக உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் அதன் பொருள்.

கம்யூனிஸத்தின் மூல தத்துவம் எதுவாக இருந்த போதிலும் நடைமுறையில் அது சர்வாதிகாரிகளின் ஆதிக்கப் போட்டியாக மாறிவிட்டது. சோவியத் யூனியனின் வெளி எல்லையில் உள்ள வார்ஸா ஒப்பந்த நாடுகள் விடுக்கும் எவ்விதமான சுதந்திரக் கோரிக்கைக்கும் இணங்க ரஷ்ய அரசு தயாராக இல்லை. பிரெஷ்நெவ் சித்தாந்தத்தின் பொருள் இதுதான். சோவியத் விஞ்ஞானிகள் எழுதிய கடிதத்தில் உள்ளபடி ஜனநாயகம் விரிவு காண முடிந்தால் நல்லதுதான். குறுகிய பிரதேச உணர்ச்சிகளுக்கு இடம் தரக் கூடாது என்ற அச்சத்தின் காரணமாக ருஷியாவில் விரிவான முறையில் ஜனநாயகம் அமுலாகுமானால்கூட நல்லதுதான். அல்லது சீனாவின் சக்தியும் முக்கியத்துவமும் வளர்ந்து வருவதைக் கண்டு பயந்து ருஷியா ஜனநாயகத்தை விரிவுபடுத்தினாலும் நல்லதுதான். அரை நூற்றாண்டு சர்வாதிகாரம் அமுலான பிறகு ருஷ்யாவிலும் ஜனநாயக சிந்தனை தலைதூக்குகிற தென்றால், கம்யூனிஸத்தின் பலவீனத்தையும் மனித சுபாவத்தில் இயற்கையாக உள்ள சுதந்திர ஆர்வத்தையும்தான் இது மெய்ப்பிக்கிறது.

சில சமயங்களில் மாநில அல்லது தேசிய உணர்வுகள் நியாயமான அடிப்படையிலும் அமையும். அதிகாரச் செருக்குப் படைத்தவர்கள் மத்திய ஆட்சியில் இருந்து கொண்டு மக்கள்மீது நியாயமற்ற நிர்ப்பந்தங்களைத் திணிப்பதற்கு எதிரிடையாக மாநில ரீதியில் கலகங்கள் எழலாம். ஆனால் இதற்கு நேர்மாறான குறுகிய பிராந்திய மனப்பான்மையும் உண்டு. அது தேசிய ஒற்றுமைக்கே எதிரிடையானது. இந்தப் பிராந்தியவாதிகள் அடுத்துள்ள பகுதிகளின் மீதும், மத்திய அரசின் மீதும் விரோதப் பான்மை காட்டி, அதிலிருந்து தமக்கு வேண்டிய சக்தியை அடையப் பார்ப்பார்கள்.

தாய்நாட்டில் தாம் வாழும் பகுதி விஷயத்தில் பற்றுடன் இருப்பது கெடுதலாகாது. அது குறுகிய பிராந்திய அபிமானமல்ல. தேசபக்தியின் வித்து என்றே அதை மதிக்க வேண்டும். ஆனால் மேலிடத்தில் உள்ளவர்களின் அதிகார வேட்கை காரணமாக, கெடுதலற்ற தேசபக்தி கெடுதலான பிராந்திய மனப்பான்மையாக மாறுகிறது. மத்திய அரசின் வலிமை குறையக் குறைய பிராந்திய மனப்பான்மை அதிக வலுவடைகிறது. பிராந்திய நிர்ப்பந்தங்கள் காரணமாக மத்திய அரசு மேலும் பலமிழந்துபோய் அராஜகத்தில் கொண்டு போய் விடுகிறது.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் இந்த ஒழுங்கீனங்களுக்கும், சங்கடங்

களுக்கும் பரிகாரம்தான் என்ன? தேர்தலில் ஜெயித்து, ஒரு பிராந்தியம் அல்லது நாடு முழுவதன் மீதும் ஆதிக்கம் செலுத்தும் தலைவர்களின் அதிகாரத்துக்கு வரையறைகளையும் ஒழுங்கு முறைகளையும் வகுத்தால்தான், பிராந்தியங்களின் நியாயமான உரிமைக்கு விரோதமில்லாத முறையில் அகில தேசிய ஜனநாயக ஆட்சிக்கு வழிகாண முடியும். அரசியல் சாஸனத்தைத் திருத்தியோ அல்லது ஒரு தார்மிகப் புரட்சியின் மூலம் கருத்தொற்றுமை கண்டோதான் இதற்கு வழிசெய்ய இயலும். தனக்கோ தன்னைச் சார்ந்தவர்களுக்கோ, தனது கட்சிக்கோ நன்மை விளையும் வகையில் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது குற்றம் என்ற உணர்வை இந்தத் தார்மிகப் புரட்சி மூலம் ஏற்படுத்த வேண்டும். இத்தகைய தார்மிகப் புரட்சிக்கு இசைவாகப் புது தில்லியில் அபிப்பிராயம் உருவாகி வருகிறது என்று அங்குள்ள அன்பர்கள் கூறுகிறார்கள். இந்த உணர்வு ஏற்படுவது உண்மையாக இருந்து மேலும் வளர்ந்தோங்கும் என நம்புவோம்.

இந்தியாவில் நல்லாட்சி நிலவச் செய்வது என்ற ஒரே நோக்கத்துடன் அரசியல் கட்சிகள் ஒன்று சேருவதற்குக்கூட இந்தத் தார்மிகப் புரட்சி தேவை. சக்தி வாய்ந்த தார்மிக அடிப்படை இல்லாமல் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது. அரசியல் சாமர்த்தியத்தின் மூலம் முற்போக்கானவை போலத் தோன்றும் தற்காலிகப் பயன்களை அடைய இயலும். ஆனால் நிலைத்து நிற்கக்கூடிய பெரிய சாதனைகள் புரிய வேண்டுமாயின், சுயநலத்தை அறவே ஒழித்து, கடவுளைக் கருத்தில் கொண்ட புனிதமான யாத்திரையை மேற்கொண்டாக வேண்டும்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

என்ன சேதி?

சந்தோஷச் செய்தி!

சேலம் உருக்காலை நான்காவது திட்டக் காலத்திலேயே அமைக்கப்படும், அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, வேலையை உடனே துவக்கலாம் என்ற செய்தி தமிழ் மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறது. புத்தாண்டு ஆரம்பத்தில் இதைப் போன்ற நல்ல செய்தி வேறு ஒன்றும் இருக்க முடியாது. பல ஆண்டுகளாகத் தமிழ்மக்கள் ஆர்வத்துடனும் ஆவலுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நல்ல செய்தி இது. இந்தச் சமயத்தில் இந்தத் திட்டத்துக்கு வித்திட்டு வளர்த்து, ஆராய்ச்சிகளைச் செய்து, வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று ஆணித்தரமான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்த முன்னாள் சென்னை மாநில தொழில் அமைச்சர் திரு ஆர். வேங்கடராமனை நன்றிப்பெருக்குடன் தமிழகம் நினைவுப்படுத்திக் கொள்கிறது. தமிழகத்தைத் தொழிலகமாக மாற்ற திரு வேங்கடராமன் புரிந்த சாதனைகளை நினைத்து நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும். அவர் கண்ட கனவு நனவாகும் நந்நாள் வந்துவிட்டது என்பதை இப்புத்தாண்டுச் செய்தி அறிவிக்கிறது. அவருக்கு மீண்டும் நன்றி.


திரு ஆர். வேங்கடராமன்

விண்வெளி வீரர்கள்

அமெரிக்க சட்டசபை (ஸெனெட்) ஏப்ரல் 14ம் தேதியன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அப்போலோ 13-ல் சென்றுள்ள விண்வெளிவீரர்கள் பத்திரமாகத் திரும்பி வர வேண்டும் என்று எல்லா அமெரிக்க மக்களும் 14ந் தேதி இரவு 9 மணிக்கு மௌனப் பிரார்த்தனை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டது அத் தீர்மானம். அமெரிக்கர் மட்டுமின்றி உலக முழுவதுமே மக்கள் அத்தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தனர்.

விஞ்ஞானத்திலும் பொறியியல் துறையிலும் எவ்வளவு முன்னேறியிருந்தாலும், மனித சக்திக்கு மிஞ்சித் தெய்வ சக்தி ஒன்றிருக்கிறது என்பதை ஏதோ ஒரு சில அமெரிக்கர்கள் மட்டுமல்ல, அமெரிக்க சட்ட சபை அங்கத்தினர்களே உணர்ந்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பெரும் கண்டத்திலிருந்து உணர்கிறோம்.

"கேட்டினும் உண்டாங்கோர் நன்மை"

பேராபத்துக்கு உள்ளான விண்வெளி வீரர்கள் பத்திரமாகத் திரும்பி வந்தது உலக மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அதை யொட்டி ஆண்டவனுக்கு நன்றி செலுத்த வேண்டிய தினத்தையும் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் குறிப்பிட்டிருக்கிறார்.

மேல்சபைக்குச் சித்ரா

சென்னைபட்டதாரிகள்தொகுதியிலிருந்து சித்ரா திரு நாராயணசுவாமி அவர்கள், மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மெத்த மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். சித்ரா நாராயணசுவாமி அவர்கள் தமிழக சுதந்திரக் கட்சியின் பொருளாளர். சுதந்திர கட்சி தோன்றிய நாளிலிருந்து அதற்குப் பெருந் துணையாக இருந்து வந்திருக்கிறார். சுதந்திரக் கட்சிக் கொள்கைகளை இனி, மேல் சபையில் அரசாங்கத்துக்குத் தெளிவாக எடுத்துரைக்க ஒருவர் இருக்கிறார். அவர் மேல் சபைக்குச் செல்ல உதவிய அத்தனை தொண்டர்களும், வாக்களித்த பட்டதாரிகளும் பாராட்டுக்கு உரியவர்கள்.


திரு சித்ரா நாராயணசாமி

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் கட்சியானது கட்டுப்பாடின்மையினின்று பிறந்தது. எனவே அதன் பிறவிக் குணம் மாருது. தமது அமைப்பில் கட்டுப்பாட்டை மீண்டும் ஏற்படுத்தி வழி காட்ட வேண்டும் என்று அவர் செய்யும் முயற்சி பலிக்காது. பிறவியால் ஏற்பட்ட நோய் அவரது முயற்சிகளை யெல்லாம் வீணுக்கி விடும்.

✶

பதவி வகித்து அதிகாரத்தைச் செலுத்தினுல்மட்டும் போதாது, கட்டுப்பாடான கட்சி தமக்குப் பின்பலமாக இருக்க வேண்டும் என்பதை ஸ்ரீமதி இந்திரா காந்தி உணர்ந்து வருவதாகத் தோன்றுகிறது. இதை 'ஹிந்து' பத்திரிகையில் ஸ்ரீ ஜி. கே. ரெட்டி பின்வருமாறு விளக்கியுள்ளார்.

புதுதில்லி, ஏப்ரல் 15

புது காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி போர்டும், காரியக் கமிட்டியும் கூடி ஆலோசித்துள்ளன. அவை இப்பொழுது கொண்டுள்ள ராஜிய மனநிலையும், புது பிரத்யட்ச உணர்வும் குறிப்பிடத்தக்கவை. சிண்டிகேட்டுக்கு (பழைய காங்கிரசுக்கு) எதிராகப் பெருவெற்றிகளை ஸ்ரீமதி காந்தி அடைந்து வந்ததால் ஏற்பட்ட பிரகாசம் மங்கிவிட்டது. தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் மனநிலையிலிருந்து புது காங்கிரஸார் விடுபடத் தொடங்கிவிட்டனர்.

மாநிலங்களில் தமக்கு வேண்டாத மந்திரிசபைகளைக் கவிழ்க்கும் போக்கைக் கைவிட்டு, கட்சி அங்கத்தினர்களுக்குப் பயனுள்ள வகையில் வழிகாட்டக் கூடியவாறு கட்சி அமைப்பை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று வக்கிரபுத்தியுள்ள தமது சகாக்களுக்குப் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். புது காங்கிரஸுக்கு மத்திய அமைப்பிலோ, மாநிலங்களிலோ ஸ்தாபன பலம் குறிப்பிடத் தக்கவாறு இல்லை என்று அவர் காரியக் கமிட்டியிடம் கூறினர். சிரமம் நிறைந்த பணிகள் நிறையக் காத்திருக்கையில் ஸ்தாபன பலம் இல்லாத சூன்ய நிலையில் தொடர்ந்து பணியாற்ற முடியாது என்று அவர் சொன்னுர்.

✶

ஸ்ரீமதி இந்திரா காந்திக்குக் கட்டுப்பாடான கட்சி பலம் பின்னுல் இல்லை. தமது கட்சியை மேலேயிருந்து கீழ்நோக்கி அமைக்க வேண்டிய நிலையில் அவர் இருக்கிருர். இது தலைகீழ் நடைமுறை. பழைய காங்கிரஸும் தன் நிலையை உணர வேண்டும். முன்னர் சர்க்காரில் இருந்தபோது அநுபவித்து வந்த சக்தி இப்போது அதற்கு இல்லை. எனவே பழைய காங்கிரஸ், மற்ற ஜனநாயகக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாக வேண்டும். ''எல்லாம் அரசாங்க உடைமையாக வேண்டியவை'' என்ற கொள்கைக்கு எதிரிடையான ஒரு கொள்கையை அது மக்களுக்கு அளிக்க வேண்டும்.

சட்டத்தையும் அமைதியையும் கறுகறுப்பாக நிலைநிறுத்தி, பிரத்தியட்ச உணர்வுடன் நடந்து கொண்டு, ராஜ்யங்களைத் திறம்படக் கட்டுத் திட்டத்தில் வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு சர்க்கார்தான் இன்று முக்கியமான தேவை. தொழிலாளர், விவசாயிகள் ஆகியோரின் நம்பிக்கையைப் பெற்று, கம்யூனிஸ்டு அபாயத்தைச் சமாளிக்கக் கூடிய திறன் இந்தச் சர்க்காருக்கு இருக்க வேண்டும். கம்யூனிஸ்டுகள் கிளப்பி விடக் கூடிய வன்முறைக்கும், கலகங்களுக்கும் எதிரிடையான தடுப்பு நடவடிக்கைகளை அது மேற்கொள்வது அவசியம்.

✶

நில உடைமைக்குப் பதினைந்து ஏக்கரா உச்சவரம்பு விதிக்கும் தமிழக அரசாங்கத்தின் சட்டம் செல்லாது என நீதி மன்றம் தீர்ப்பளித்தால், தமிழக அரசு இதைவிடக் கடுமையான சட்டம் கொண்டு வரத் தயங்காது என்று முதன் மந்திரி திரு கருணாநிதி கூறியதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (ஏப்ரல் 9) செய்தி தெரிவிக்கிறது.

இவ்விதம் முதன் மந்திரி கூறியிருப்பாரேயாகில், இது முன்கூட்டியே நீதி மன்றத்தை நெரித்து, அது புதிய உச்சவரம்புச் சட்டத்தை மறுக்காதபடி செய்வதற்கு ஒப்பாகும். இவ்விதம் நீதிமன்றம் எடுக்கக் கூடிய முடிவைப் பாதிக்க முற்படுவது மிகவும் முறையினமாகும். முதன் மந்திரி தமது வழக்கமான சம நிலையை இழந்து, இவ்விதம் நீதிமன்ற அவமதிப்புக்கு ஒப்பான விதத்தில் பேசியிருப்பது பற்றி அதிர்ச்சியடைகிறேன்.

✶

ஹிந்துக்களல்லாதார் ஹிந்துக் கோவில்களில் உள்ள சிற்பக் கலை அழகுகளை ரசிக்க உதவ வேண்டும் என்று இன்றைய தமிழக அரசாங்கம் விரும்புகிறது. இச்சமயத்தில் சில அடிப்படை விஷயங்களில் சிந்தனை செல்கிறது.

சமயந்தானே இந்தக் கலையைப் பிறப்பித்தது? அவ்வாறெனில், சமய உணர்வுக்குள் ஒரு பெரும் படைப்பு ஆற்றல் இருப்பதாக ஆகிறது. கலைக்குப் பிறப்புத் தந்த தாயான அந்த மத உணர்வை விடலாகுமா? இந்தியாவின் மாநதிகள், மலைகள், ஹிந்து மதமும் இஸ்லாமும் உயிரூட்டிய கலைகள், இவை தவிர வேறேதேனும் ரசிகர்களான அந்நியர்களை நம் நாட்டுக்கு இழுக்குமா?

வழிபாட்டுக்குக் குந்தகமாக இல்லாமலும் ஆலயங்களைக் கண்காட்சியாக்கி விடாமலும் இருந்தால் எந்தப் பக்தியுள்ள ஹிந்துவும், முஸ்லிமும், பௌத்தரும், சமணரும் பிறர் தமது ஆலயங்களில் பிரவேசிப்பதை ஆட்சேபிக்க மாட்டார் என நம்புகிறேன்.

திரு ஆர். ராமநாதன் (மாயூரம்)

நில உச்சவரம்பை முப்பது ஏக்கரிலிருந்து பதினைந்து ஏக்கராகக் குறைத்தால் திட்டமிட்டுச் சாகுபடி செய்வது இயலாமற் போய்விடும். பதினைந்து ஏக்கரும் ஒரே தாக்காக இருந்தால் விவசாயம் சுலபம். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் பத்து, இருபது வேலி நிலம் வைத்திருப்பவர்களுக்குக்கூட இங்கு 3 'மா', அங்கு 6 'மா' என்றுதான் மூலைக்கொன்றாக இருக்கிறது. ஒரே தாக்காக நிலம் இருந்தால் டிராக்டரைக் கொண்டு உழுவது, பூச்சி மருந்து தெளிப்பது இவையெல்லாம் சௌகரியம்.

உடைமைக்கு உச்சமா? உரிமைகள் துச்சமா?



திரு ஆர். ராமநாதன்



திரு எஸ். பாலசுப்ரமணியன்



உபரி நிலத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டால், அரசாங்கமே நேரிடையாக விவசாயம் செய்துவிடப் போகிறதில்லை. விவசாயத்தில் கூட்டுறவு முறையெல்லாம் சரிப்பட்டு வராது. இரண்டு மூன்று பேர்கள் ஒத்துப் போவதே அரிது.

எனக்குள்ள சுமார் பதினைந்து ஏக்கர் நிலத்தில் விளைச்சலிலிருந்து அரசு கொள்முதல் செய்யும்போது 250 மூட்டை குறுவை நெல் கொடுக்கிறேன். அரசு நெல் கொள்முதல் செய்வதெல்லாம் பெரும்பாலும் பெரிய மிராசுதார்களிடமிருந்துதான். 5, 6 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கணிசமாக 'லெவி' ஏதும் கொடுக்க இயலாது. நிலவரி கட்டவும், விதைக்கு ஒதுக்கவும், எரு வாங்கவும், ஆட்களுக்குக் கூலி கொடுக்கவும் தேவையானது போக எஞ்சியுள்ள நெல்; சிறு நில உடைமைக்காரரின் குடும்பத் தேவைக்குத்தான் சரியாக இருக்கும்.

சம்பா அறுவடை முடிந்த பிறகு, வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை இருப்பதில்லை. சிறு தொழில்கள் ஏற்படுத்தி வயலில் வேலை இல்லாத போதும் அவர்களுக்குக் கூலி கிடைக்க ஏற்பாடு செய்தால் போதுமானது. அல்லது கோடையில் சாகுபடி செய்யக்கூடிய பயிர்களை நிலத்தின் தன்மைக் கேற்பத் தேர்ந்து சாகுபடி செய்தால் அவர்களுக்கு வருடம் முழுவதும் வேலை இருந்து கொண்டிருக்கும். சிறு அளவில் நிலம் உள்ளவர்கள் இதைச் செய்வது எளிதன்று.

பாங்கில் கடன் கேட்டால்.... அந்தக் கடன் மனு பாரத்தை நீங்கள் பார்க்க வேண்டுமே! 'கடந்த மூன்று ஆண்டுகளாக எவ்வளவு விதை வாங்கினாய்?' 'உரம் எவ்வளவு வாங்கினாய்?' என்றெல்லாம் பல கேள்விகள்! அதிலும், பாங்குகள் தேசிய மயமாகிவிட்டதல்லவா? கடன் வாங்குவதில் உள்ள சிரமங்கள் ஏராளம். சிறு நிலச்சுவான்தார்களுக்கு இதெல்லாம் மிகவும் சிரமசாத்தியமானவை.

என் நிலத்தில் பயிர்ச் செலவு செய்கிற ஓர் ஆளைக் கூப்பிட்டு, 'உனக்கு ஒரு ஏக்கர் நிலம் தந்துவிடுகிறேன். நீயே சொந்தமாகச் சாகுபடி செய்து பிழைத்துக் கொள்!' என்று நான் சொன்னால், அவன் வேண்டாமென்றுதான் சொல்லுவான். இப்போது ஆட்களுக்குக் கிடைக்கிற வரும்படியை விடச் சொந்தச் சாகுபடி லாபகரமாயிராது என்பது அவர்களுக்கே தெரியும்'' என்றார் திரு ராமநாதன்.

'' அப்படியா ?'' என்றேன் நான் வியப்புடன்.

''நீங்களே கேட்டுப் பாருங்களேன். இதோ அழைக்கிறேன்... அய்யாசாமி !... இங்கே கொஞ்சம் வந்து விட்டுப் போ!''

சுமார் ஐம்பத்தைந்து வயதுள்ள திரு வே. அய்யாசாமி படையாச்சி எதிரில் வந்து நின்றதும், ''முதலாளி சொந்தச் சாகுபடிக்கு என்று உங்களுக்கே ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கிறாராம். சம்மதமா?'' என்று கேட்டேன்.

திரு அய்யாசாமி கூறியது: ''இருபத்தைந்து வருஷமா ஐயாவிடம் வேலை செய்கிறேன். 'ஏஜண்ட்' என்று யாரையும் இவங்க நியமிக்கல்லே. ஐயாவிடம் நேரிடையா தேவை

களைச் சொல்லுவோம். அறுவடை, நடவு சமயங்களிலே அதிகப்படியா ஆளுங்க தேவைப்படும் போது நாங்களே ஆட்களைத் தேடிப் பிடிக்க வேலைக்கு வச்சுக்கிறது வழக்கம். அறுவடை முடிஞ்சதும் நியாயமா எங்களுக்குச் சேர வேண்டியதை எடுத்துக் கிட்டு மிச்சத்தை முதலாளிகிட்டே கொடுக்கிறதுதான் வழக்கம். இந்த வருஷம் பாருங்க, தாளடிப் பயிர் விளைச்சல் சரியா யில்லே. போர் அடிச்ச ஆளுங்களுக்கு ஐயா வீட்டிலிருந்து கூலி கொடுத்தாங்க!

''எனக்கு இரண்டு பையன், இரண்டு பெண். என் குடும்பத்துக்குத் தேவையானது ஐயா நிலத்திலே உழைக்கிறதிலேயே கிடைக்கிறது. உரமோ, விதையோ எது தேவையானாலும் ஐயா பொறுப்பிலே வாங்கிடுறாங்க. ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தா அதை வச்சுக்கிட்டு நான் என்ன லாபம் கண்டுவிடப் போகிறேன்? இதுவே சௌக்கியமா இருக்கு. லாபகரமா விவசாயம் செய்யணுமானா, நிறைய நிலம் உள்ளவங்களாலேதான் முடியும்.''



திரு அம்மாசாமி



திரு எஸ். பாலசுப்பிரமணியன், B.Sc.

நீடூர் (செயலாளர், ஏ.வி.வி. கல்லூரி, மன்னன்பந்தல்)

மனிதன் தனக்காக மட்டும் வாழ்ந்தால் ஐந்து ஏக்கர் நிலமே போதும். ஊர், உலகத்துக்காகவும் பயிர் செய்ய வேண்டுமெனில், போதாது. புதிய சோதனைகள் செய்து விளைச்சலைப் பெருக்கினால்தான் விவசாயத் துறை வளம் பெறும். குறைந்த அளவு நிலத்தில் சோதனைகளுக்கு வாய்ப்பில்லை. அதிக விளைச்சலைத் தரும் ஐ. ஆர். எட்டு போன்ற நெல் வகைகளைச் சாகுபடி செய்ய அதிக முதலீடு தேவை.

உபரி நிலத்தை யாருக்குக் கொடுப்பார்கள், தெரியுமா? ராணுவ சேவை புரிந்து திரும்பியவர்களுக்கு முதலிடம். அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு. முதலீடு செய்ய இவர்களுக்குப் பண வசதியிராது. தொழில் துறையிலீடுபட்டிருப்பவனுக்கும் ஒரு வோட்டுத்தான்; விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவனுக்கும் ஒரு வோட்டுத்தான். சாகுபடி நிலத்துக்கு மட்டும் உச்சவரம்பு ஏன்? நிலம் வைத்திருப்பவன் பாவியா ?

நல்ல நிலம் ஓர் ஏக்கர் சுமார் ரூ. 5000 பெறும். முப்பது ஏக்கரின் விலை ஒன்றரை லட்சம் ரூபாய் ஆகிறது. ஒரு ரூபாய் முதலீடு செய்து ஒரு டிக்கட் வாங்கினால் ஐந்து லட்சம், பத்து லட்சம் என்றெல்லாம் வாரி வழங்குகிறார்கள் ! மாதா மாதம் எவ்வளவு புதிய லட்சாதிபதிகள்! இனி 'ஐந்து லட்சாதிபதிகள்', 'பத்து லட்சாதிபதிகள்' எல்லாம் தோன்றப் போகிறார்கள். இதற்கு வருமான வரியும் கிடையாது ! ஆயிரக்கணக்கில் செலவு செய்து பயிர்த்தொழிலில் ஈடுபட்டு மழையிலும் வெயிலிலும் உழைப்பவன் 75,000 ரூபாய் மதிப்புள்ள பதினைந்து ஏக்கர் நிலம் மட்டும்தான் வைத்திருக்கலாம்! எப்படியிருக்கிறது நியாயம் ?

பதினைந்து ஏக்கராக நிலம் குறைக்கப்பட்டால், நிலச்சுவான்தார்கள் பலர் நெல்சாகுபடியைக் கைவிட்டு அதிக லாபம் தரக்கூடிய கரும்பு, பருத்தி முதலியவற்றைப் பயிரிட முன்வரக்கூடும். இதன் விளைவாக நாளடைவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். 44,000 நில உடைமைக்காரர்களைப் பாதிக்கும் இந்த விபரீதச் சட்டத்தின் விளைவாக உணவு உற்பத்தி தடைப்படுவது நிச்சயம்.

திரு கே. ஸ்ரீனிவாசன்

(ராஜகோபாலபுரம்)

எங்கள் குடும்பத்தில் பாகப் பிரிவினை ஏற்படுவதற்கு முன்பு, என் தகப்பனார் காலத்தில் மொத்தம் நூறு வேலி நிலம் இருந்தது. (1 வேலி = 6.66 ஏக்கர்) இன்று எனக்கும் என் மனைவிக்குமாகச் சேர்த்து முப்பது ஏக்கர் தான் உள்ளது. இருபது வருடத் தவணையில் கடன் வாங்கி டிராக்டர் வாங்கினேன். டிராக்டர் விலை சுமார் இருபதாயிரம் ரூபாய். இரண்டு வருடம் கடன் தவணைகள் திருப்பிக் கொடுத்திருக்கிறேன். இன்னும் பதினெட்டு வருடங்கள் கட்டியாக வேண்டும். பதினைந்து ஏக்கர் நிலத்தில் சாகுபடி நடத்த வேண்டுமானால் டிராக்டர் வைத்துக் கொள்வதில் அநுகூலமில்லை. விற்றுவிட வேண்டியதுதான். இதுவரை டிராக்டர்களை எனக்குத் தேவைப்படாத பொழுது பிற விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுத்து வந்தேன். இனி அது இயலாது.

கோயில் திருப்பணிகள், உற்சவங்கள் ஆகிய பொதுப்பணிகளுக்கெல்லாம் பெரிய மிராசுதாரர்கள் இதுவரை தாராளமாக நன்கொடை வழங்கி வந்தது போல் இனி வழங்க இயலாது. கிராமங்களில் உள்ள கோயில்கள் இனி கேட்பாரற்றுச் சீரழிந்து போனாலும் வியப்பில்லை.

கம்யூனிஸ்டுகளுக்குப் பயந்து இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது தருமம் ஆகாது. மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவது விவேகமா? **பேட்டி : ரா. பா.**

அம்மாவின் பிடிவாதம்.

அதற்கு அப்பாவின் ஆதரவு.

ஆனால் இவர் கேட்டால்தானே ?

''வேண்டாம், கண்ணா! வறுமையால் அவர்களே வாடுகிறார்கள். நாம் வேறு சுமையாக வேண்டுமா ?''



பார்வை கோணல்!

''நானும் இதையேதான் அம்மாவிடம் சொன்னேன். அதற்கு அவன் என்ன சொன்னான், தெரியுமா?''

''என்ன சொன்னான்?''

கழுத்தைத் திருப்பி என்னையே இமை கொட்டாமல் பார்க்கலானார். இப்பொழுதெல்லாம் மணிக்கணக்கில் வைத்த கண் வாங்காமல் என் முகத்தையே பார்க்கிறதென்பது அவர் வழக்கமாகி விட்டது. பேச்சுக் குறைந்து பார்வை அதிகமாகி விட்டது.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''ரத்னா! கண் படாமல் இருக்கணுமே நீ!''

''உங்கள் கண்ணிலே அது என்ன ஒட்டிக் கொண்டிருக்கிறது, பாருங்கள்!''

அவர் தம் கண்களைத் தடவிக் கொண்டார். நான் கலகலவென்று நகைத்தேன். அவரும் சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பில் சுரத்தில்லை.

'வாழ்க்கைக் குறிப்பா? தருவது மிகச் சிரமமான காரியம் ஐயா! தன்னையே ஒருவன் மிகையாகவோ குறைவாகவோ எப்படி மதிப்பிட்டுக் கொள்வது?' இப்படிக் கேட்கும் ஸ்ரீ பீசி புனை பெயரையே தம் இயற்பெயராக்கிக் கொண்டிருக்கிறார். இவரது, 'திம்மணநலே' என்ற கன்னட நகைச்சுவைப் படைப்புக்குச் சென்னை அரசாங்கமும் 'ரின்டை சாசா' என்னும் நூலுக்கு மைசூர் அரசாங்கமும் பரிசுகள் வழங்கியிருக்கின்றன.

'ஐம்பதாவது நூல் அச்சில். ஐம்பத்தோராவது நூல் கையில்.'

இப்படி இடக்காகக் கூறும் பீசி, போலீஸ் இலாகாவில் சென்னையில் இருபத்திரண்டு ஆண்டுகளும் மைசூரில் பத்து ஆண்டுகளும் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார்.

உத்தியோகத்தில் ஓய்வு பெற்றாலும் எழுத்தில் ஓய்வு கிடையாது. 'பார்வை கோணல்', கதையில் தான். எழுத்தில் பாருங்கள், எத்தனை நேரான பார்வை என்று புரியும்.





''என்னைப் பார்த்ததே இல்லையா நீங்கள்? என்னவோ அபூர்வப் பிறவி போல் இப்படிப் பார்க்கிறீர்களே!''

''ஆமாம், இப்படி ஒரு கொள்ளை அழகு உனக்கு எப்படி வந்தது ?''

அவர் கேள்விக்கு ஆண்டவன்தான் விடையளிக்க முடியும். 'கன்னி கழிந்தால் கழுதையும் மேனியுறும்' என்பது வசனம். இந்த வசனம் மற்றவர்களுக்குப் பொருந்துமோ, பொருந்தாதோ ! கட்டாயம் எனக்குப் பொருந்தாது. ஏனெனில் என் வயசையும், அழகையும் எந்தக் காலத்திலுமே தொடர்புபடுத்திக் காண வேண்டிய அவசியம் நேர்ந்ததில்லை.

நான் எங்கள் பாட்டி செத்த வருஷம் பிறந்தேனும். அதனால் எனக்கு அந்தப் பழைய காலத்துப் பெயரையே சூட்டிவிட்டார்கள். நாமகரணம் செய்த மறுநாளே அப்பா அம்மாவிடம் கேட்டாராம் :

''ரத்னம் போன்ற இந்தக் குழந்தையை 'ஹனுமந்தி' என்று கூப்பிடவாவது?''

''விடுங்கள், பெயரில் என்ன இருக்கிறது? மாமியார் பெயர் அது. அதைச் சொல்லியே மங்களமாய்க் கூப்பிடுவோம்.''

'' உன் மாமியார் பெயரில் என்ன வைத்திருக்கிறது? நான் ரத்னு என்றுதான் கூப்பிடப்போகிறேன் இவளை!''

அன்று முதல் நான் ரத்னுவாகி விட்டேன்.

''ஆமாம், உங்கள் பெண் ரத்னுவுக்கு எங்கேயாவது வரன் — கிரன் பார்த்திருக்கிறீர்களா ?'' என்று ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பார்வதத்தம்மா என் அம்மாவைப் பார்த்துக் கேட்டாள்.

''எங்கள் ரத்னுவின் கையைப் பிடிக்க எந்த அதிர்ஷ்டசாலி கொடுத்து வைத்திருக்கிறானோ? இவளை அடைகிறதென்றால் அவன் ரொம்பப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நாம் எதற்காகப் போய்த் தேட வேண்டும்? அவனாகத் தேடிக் கொண்டு வருவான் !''

என் அம்மாவுக்கு என் அழகில் ஒரு கர்வம். பிள்ளை கெட்டிக்காரனாயிருந்தால் அப்பா கர்வப்படுவார். பெண் அழகாயிருந்து விட்டால் அம்மா கர்வப்படுவாள். இதுதானே உலக இயல்பு?

அம்மா சொன்னது பொய்யாகவில்லை. இவருடைய அப்பா — அம்மா என்னைப் பெண் கேட்க எங்கள் வீட்டுப் படியே ஏறி வந்து விட்டார்கள். தங்கள் சம்பந்தம் நல்ல சம்பந்தம் என்றும் சொன்னார்கள்.

''பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் பார்க்க வேண்டாமோ? அவர்களுக்குப் பிடித்த பிறகல்லவா சம்பந்தம் எல்லாம்!'' என்றாள் என் அம்மா.

''எங்கள் பையன் உங்கள் பெண்ணைப் பார்த்து விட்டான். அவனுக்குப் பெண்ணை ரொம்பப் பிடித்து விட்டது. எனக்கு நேரிலேயே அவன் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறான் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!'' எனக்கு வரப் போகிற மாமனார் இப்படிச் சொன்னார். அவர் மனைவி—அதாவது எனக்கு வரப் போகிற மாமியார், ''பிடித்தது பிடிக்கவில்லை என்பதற்கு இடமே இல்லை. உங்கள் ரத்னுவை விட்டால் வேறு யாரையுமே கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டான். அப்புறம் அப்பீல் ஏது?'' என்று ஒரு படி மேலேயே போய் விட்டாள் !

அப்பவே என் அழகு அத்தனை அழகு!

இப்பொழுது சொல்ல வேண்டுமா? அழகு மேனிவிட?

சமாதானப்படுத்துகிறாற் போல் நான் அவருக்குச் சொன்னேன்: ''இன்னும் வேண்டிய நாள் இருக்கிறது. இப்பொழுதே என்ன அவசரம்? விடுங்கள் அந்தப் பேச்சை !''

அவர் கேட்டால்தானே? அவர் புத்தி எங்கே மேயப் போயிற்றோ, தெரியவில்லை !

''இதைச் சொல்லு, உன் அம்மா என்ன சொன்னாள்?''

''அம்மா கோபித்துக் கொண்டு விட்டாள். 'இதோ பார், ரத்னு! பெண்ணைப் பெற்ற அப்பா — அம்மா எத்தனைதான் ஏழையாயிருக்கட்டும்! முதற் பிரசவத்துக்குப் பிறந்த வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகாமலே இருக்க மாட்டார்கள்!' என்றாள். நான் வாயைத் திறக்கவில்லை!''

பாவம், அவருக்கு ஒரே ஏமாற்றமாகப் போய் விட்டது!

''அப்படியானால் ராணி அம்மா இங்கிருந்து எப்பொழுது போவதாக உத்தேசமோ?''

''ராசா உத்தரவு எப்பொழுது கிடைக்கிறதோ, அப்போ!''

''அப்புறம் எப்பொழுது பார்க்கிறதாம்?''

''இளவரசர் இவ்வுலகில் விஜயம் செய்த பிறகு!''

''அதற்கு முன்னால் உன்னை நான் பார்க்க வரவே கூடாதா?'' அவர் குரலில்தான் எத்தனை ஏக்கம்!

''வேடிக்கைக்காகச் சொன்னேன்! வாரத்துக்கு ஏழு நாட்கள் விஜயம் செய்யுங்கள். ஒவ்வொரு விஜயத்தின்போதும் இரண்டிரண்டு நாட்கள் தங்குங்கள்! உங்களை யார் தடுக்கப் போகிறார்கள் வராதே என்று!''

அவர் மனத்துக்குச் சிறிது ஆறுதல் கிடைத்திருக்கவேண்டும். இருந்தாலும் முணுமுணுத்துத் தீர்த்துவிட்டார். ''நாளுக எப்படி வருகிறதாம்? அதுவும் எனக்கு லீவு ஞாயிற்றுக்கிழமை மட்டும்தானே?''

''இருக்கட்டுமே ! சனிக்கிழமை இராத்திரியே வந்து விடுங்கள்! ஞாயிறு முழுவதும் தங்குங்கள். திங்கட்கிழமை பொழுது விடிந்ததும் குளித்துச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு புறப்படுங்களேன். கையிலேதான் கார் இருக்கிறது. எத்தனை தொலைவாக இருந்தால்தான் என்ன?''

''வந்தால் உங்கள் வீட்டில்தானே தங்க வேண்டும்? வீடா அது? புறாக் கூண்டு போலச் சின்ன அறை. ஒருவர் உள்ளே போனால் இரண்டு பேர் வெளியே வரவேண்டும். அப்பப்பா! உன் பிறந்த வீடு ரொம்பச் சின்னதம்மா!''

''வீடு சின்னதா யிருந்தால் என்ன? மனசு ரொம்ப ரொம்பப் பெரிசு!''

நாங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்த பொழுது அப்பாவிடமிருந்து கடிதம் வந்து விட்டது. ''இந்தச் சதுர்த்திக்கு ரத்னுவுக்கு ஐந்து மாதங்கள் முடிந்து விடுகின்றன. அதனால் நான் வந்து அழைத்துப் போகிறேன்!'' அப்பா எழுதியிருந்தார்.

படித்துப் பார்த்து விட்டுக் கடிதத்தை என் கையில் கொடுத்தார். அப்பொழுது அவர் முகம் போயிருந்த போக்கைப் பார்க்க வேணுமே; சகிக்கவில்லை!

''ஏழாம் மாதம் அழைத்துக் கொண்டு போகக் கூடாதா, மாமா?'' ரயிலிலிருந்து இறங்கினதும் இறங்காததுமாக அப்பாவைப் பார்த்துக் கேட்டார் அவர். அப்பா சொன்ன பதில் அவருக்கு எப்படிப் பட்டதோ? ''அப்படியே செய்தால் போயிற்று. அடுத்த பிரசவத்திலிருந்து!'' என்றார் அப்பா.

'அப்படி ஒரு பிரசவமும் வேண்டாம், இப்படி ஒரு பிரிவும் வேண்டாம்.' நாங்கள் இருவரும் இப்படித் தீர்மானித்தோம். அந்த நிலையில் இதைக் காட்டிலும் நாங்கள் வேறு என்ன தீர்மானத்துக்கு வந்திருக்க முடியும்?

ஞாயிற்றுக்கிழமை மத்தியான வேளை. அம்மா எனக்கு எண்ணெய் தேய்த்து வெந்நீர் விட்டுக் குளிப்பாட்டி யிருந்தாள். கடக்கடச் சிறிது சாப்பிட்டு விட்டுச் சிறிது படுத்தேன். நல்ல விழிப்பும் இல்லை; நல்ல தூக்கமும் இல்லை. இரண்டும் கெட்டான் நிலை.

''ரத்னு! ரத்னு!''

கூப்பிட்டது அம்மா. குரலில் ஓர் அவசரம்! ''சீக்கிரம் போடி பெண்ணே! வாசலில் உன் வீட்டுக்காரன் வந்திருக்கிறான். போய் உன்னை அழைத்துக் கொண்டு வா!''

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

271, அங்கப்ப நாயக் தெரு, சென்னை-1

தந்தி விலாசம்: ''அர்பாங்க்'' | தொலை பேசி எண்:
தபால் பெட்டி எண்: 226 | 22766, 22767, 24589

எங்கள் வங்கியில் நீங்கள் போடும் டெபாசிட்டுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும் விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

(வருடத்திற்கு)

கரண்ட் அக்கௌண்ட்	... ...	½%
சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்ட் *(மாதத்தில் நிலுவையுள்ள குறைந்த அளவு தொகைக்கு)*		3½%

சேன் டெபாசிட்: ரூ. 1,000ம் அதற்கு மேலும்

15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை	1½%
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை	2½%

பிக்சட் டெபாசிட்: ரூ. 100ம் அதற்கு மேலும்

91 நாட்களும்	அதற்கு மேலும்	6 மாதங்களுக்குள்ளாக	4½%
6 மாதங்களும்	..	12 ..	5 %
12 மாதங்களும்	..	2 வருடங்களுக்குள்ளாக	5¾%
2 வருடங்களும்	..	3 ..	6¼%
3 வருடங்களும்	..	5 ..	6¾%
5 வருடங்களும்	..	6 ..	7 %
6 வருடங்களும்	அதற்கு மேலும்		7½%

அறநிலை அல்லது மத நிறுவனங்களின் பிக்சட் டெபாசிட்டுகளுக்கு வழக்கமான வட்டி விகிதாசாரங்களை விட ½ சத விகிதம் அதிக வட்டி அளிக்கப்படும்.

ரெக்கரிங் டெபாசிட்: தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்:

மாதத் தவணை	12	24	36	48	60	72	84
ரூ. 5ம் அதன்மடங்குகளும்	ரூ. 62	128	198.50	273	355	442	535

கிளை அலுவலகம் பெயர்	முகவரி	தொலை பேசி எண்
மயிலாப்பூர்:	32-A, லஸ் சர்ச் ரோடு, சென்னை-4	71262
எழும்பூர்:	68, எழும்பூர் ஹைரோடு, சென்னை-8	86510
திருவல்லிக்கேணி:	111, பெரிய தெரு, சென்னை-5	84692
தியாகராயநகர்:	19, பாண்டி பஜார், சென்னை-17	442852
காந்தி நகர்:	78, இரண்டாவது மெயின் ரோடு, சென்னை-20	71132
ஷெனாய் நகர்:	8/1, செங்குந்த முதலித் தெரு, சென்னை-30	64834
கெல்லீஸ்:	2, மாதவாக்கம் டாங்க் ரோடு, சென்னை-10	64105
மயிலாப்பூர் டாங்க்:	10, தெற்கு மாட வீதி, சென்னை-4	73158
சாந்தோம்:	79, சாந்தோம் ஹைரோடு, சென்னை-28	74300
கிரீன்வேஸ் ரோடு:	14, கேசவபெருமாள்புரம், சென்னை-28	74215
மவுண்ட் ரோடு:	109, டி.-ஈ. மவுண்ட் ரோடு, சென்னை-18 (காமதேனு கூட்டுறவு சிறப்பு அங்காடி)	440292
சாஸ்திரி நகர்:	பி. 10, சாஸ்திரி நகர், சென்னை-20	76418
அசோக் நகர்:	273-B, 10வது அவின்யூ, அசோக் நகர், சென்னை-33	

ஆர். கனகசபை, எம்.எல்.ஏ.
தலைவர்

டி. வர்த்தமானன்
காரியதரிசி

அம்மா எப்படிப் பேசுவாள் அவரோடு? மாமியார் மாப்பிள்ளையோடு பேசுகிற வழக்கம் இருந்தால்தானே?

உள்ளே வரமுடியாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார் அவர். அதற்காக நான் கோபித்துக் கொள்ள முடியுமா? வந்தால் எங்கே உட்கார்த்தி வைக்கிறது? அவருக்கு நாற்காலி சோபாவிலேதானே உட்கார்ந்து பழக்கம்? இங்கே நம் வீடு இருக்கிறதே. அதில் ஒரே ஒரு அறை; கிளிக் கூண்டு போல. அதற்குள்ளேயே விறகு - கரி, பூசை புனஸ்காரம், சமையல் - கிமையல், படுக்கை - கிடுக்கை, அப்பா - அம்மா நான்...

வீட்டில் இடம் இல்லை என்றும் வாசலிலேயா நின்று கொண்டு பேசுகிறது? நானும் ஒரு பெண் மாதிரி...

வாசலில் நின்று கொண்டு பேசுகிறது சரியில்லை என்றும், பேசாமலே இருந்து விடலாமா? தர்மசங்கடமான நிலைமை!

''இதென்ன டாக்ஸியிலே வந்திருக்கிறீர்கள்? கார் என்ன ஆயிற்று?''

''புறப்படுகிறபோது கார் 'மக்கர்' செய்தது. அதனால் ரயிலில் வந்து அங்கே யிருந்து டாக்ஸி வைத்துக் கொண்டு வருகிறேன்.''

''அப்படியானால் சற்று டாக்ஸியிலேயே இருங்கள். நான் போய்க் காப்பி கலந்து கொண்டு வருகிறேன்!''

''வேண்டாம்! வேண்டாம்! நான் இப்பொழுதுதான் காப்பி குடித்து விட்டு வந்திருக்கிறேன்!''

''சாப்பாடு?''

''அங்கேயே போகிறேன்!''

வாசலில் வைத்து வேறு என்ன சொல்ல முடியும்?

என் முகத்தையே பார்த்துக் கொண்டு அவர் சொன்னார்: ''இரவு வண்டியிலே நான் திரும்பியாக வேண்டும். இதே டாக்ஸியை நாலு மணிக்கு அனுப்புகிறேன். வந்து விடு!''

நான் சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலை ஆட்டி வைத்தேன். ஆனால் எங்கே வரவேண்டும் என்பதைக் கேட்க மறந்துவிட்டேன்.

டாக்ஸி 'புர்'ரென்று பறந்து விட்டது.

'சீ! என்ன விளையாட்டுப் பிள்ளைத்தனம்! இந்த ஆண் பிள்ளைகளே இப்படித்தான். துளிப் பொறுமை கிடையாது! அப்பப்பா! நடுத் தெருவிலே கையை இப்படியா பிடித்து அழுத்துகிறது?'

டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஆள் முகத்திலேதான் எத்தனை குறும்பான சிரிப்பு! ஒருவேளை எதிர்த்தாற் போலிருந்த சின்னக் கண்ணாடியில் அவன் அவர் செய்கையைப் பார்த்து விட்டானோ, என்னவோ?

நாலு என்ன, மூன்று மணிக்கே நான் தயாராகி விட்டேன்! இந்தப் பொல்லாத கடிகாரம் இலேசில் நகர்ந்தால்தானே? மனித மனம் மாதிரி இல்லை அது!

ஹாரன் ஒலி கேட்டது; நான் ஓடினேன்.

இல்லை; அது டாக்ஸி இல்லை. இரும்பும் கல்லும் சுமந்து கொண்டு போகிற லாரி அது!

எனக்கோ பற்றிக்கொண்டு வந்தது! வியர்த்துக் கொட்டிய வியர்வையிலே முகத்துக்குப் போட்டிருந்த பவுடர் 'ஸ்நோ'வாகிவிட்டது!

கடைசியிலே என் பொறுமையைச் சோதித்த பின் டாக்ஸி வந்து சேர்ந்தது.

''ஏன் அப்பா! ஏன் இத்தனை நேரம்?''

''நாலு அடிக்க இன்னும் பத்து நிமிஷம் தான் அம்மா பாக்கி!'' — டிரைவரின் நண்பன் பல்லைக் காட்டினான்.

டாக்ஸி ஓடிக் கொண்டிருந்தது. '''அவர்' எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டேன் நான்.

''ஏழாம் நம்பர் அறை; பாப் மஹால்.''

அங்கு போன பிறகுதான் தெரிந்தது, அது பாவஞ்சேரி மணாச்சாமியாரின் மாளிகை என்று!

''தாலூத்!'' என்றார் இவர்.

''எசமான்!'' — டிரைவரின் நண்பன் குரல் கொடுத்தான்.

''சரியாக எட்டு மணிக்கு வந்துவிடு. நான் ரயிலைப் பிடிக்கணும்!''

எங்கள் அறைக் கதவைச் சற்று முன்னுக்கு இழுத்துச் சாத்திவிட்டு அவன் போய் விட்டான். அவன் உதடுகளில் ஒரு குறுநகை.

''சுத்த நாட்டுப்புறத்தானாக இருப்பான் போலிருக்கிறதே, யார் இந்த ஆளு?''

''எனக்கு என்ன தெரியும்? நான் இங்கே வந்தபொழுது இவன் இந்த ஹோட்டலுக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். நான் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்டு எனக்குச் சிறிது உதவி செய்தான்.''

கதவு தட்டும் ஒலி கேட்டது.

மேஜையின் மீது வைத்திருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டு அவர் கூறினார்: ''ஒரு வேளை தாலூத் வந்திருப்பான். மணி எட்டு!''

''இத்தனை சீக்கிரமா எட்டு அடித்துவிட்டது!'' என்னை அறியாமலேயே இந்தச் சொற்கள் என் வாயிலிருந்து நழுவிவிட்டன.

அவசரம், அவசரமாக முகம் கழுவித் தலை வாரிக் கொண்டோம். டாக்ஸி ரயில்வே ஸ்டேஷனை நோக்கி விரைந்தது.

அவர் வண்டியில் ஏறி உட்கார்ந்தார். தாலூத்தின் கையில் ரூபாயைக் கொடுத்து என்னைச் சுட்டிக் காட்டி, ''இவர்களை வீடு வரை கொண்டு சேர்த்துவிடு!'' என்றார்.

''இவர்களை வீடுவரை கொண்டு விடாமல், நான் எங்கும் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டேன், சார்!''

வீடு நெருங்கியது. அப்பொழுதுதான் நினைவு வந்தது. 'என் புத்தியை என்னவென்பது? இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்தோமே, குழந்தைக்கு என்ன பெயர் வைக்கிறது என்பதைக் கேட்க மறந்து போய்விட்டோமே?'

டாக்ஸி வீட்டுக்கு எதிரில் போய் நின்றது. நான் இறங்கிக் கொண்டேன்.

''வரேன், தங்கச்சி! வணக்கம்!''

''வணக்கம்!''

அவன் போகவில்லை. மெதுவாகக் கூப்பிட்டான்:

''தங்கச்சி!''

''என்ன?''

''எத்தனை கொடுத்தான்?''

''யாரு?''

''அந்தக் கருமிப் பயல்தான்!''

அதற்குப் பிறகு அவர் பத்து முறையாவது வந்திருப்பார். ஆனால் அந்த பாப் மஹாலில் நான் அப்புறம் அடிகூட எடுத்துவைக்கவில்லை. இடத்துக்கு இப்படி ஒரு மதிப்பா?

- தமிழாக்கம் : அசுவம்

வினோபா அடுத்த மாதத் தொடக்கத்தில் தமிழகம் வர விருக்கிறார். அவருக்கு நல்வரவு கூறுகிறது இக் கட்டுரை.

நீள நடப்பார்; நினைத்ததை முடிப்பார்!

வினோபாவுடன் ஒரு நாள் தங்க வேண்டும் என்றால் அவருடன் சமதையாக வேகமாக நடக்க முதலில் தெரிந்திருக்க வேண்டும். நடை என்றால் அவருக்கு அலாதி குஷி. இவருடன் ஒரு நாள் முழுதும் தங்கியிருக்கும் பாக்கியம் பதினான்கு வருடங்களுக்குமுன் எனக்குக் கிடைத்தது.

வினோபாஜி அதிகாலையில் எழுந்து விடுகிறார். உலாவச் சென்று வந்த பின்பு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுகிறார். அவருடைய முக்கிய ஆகாரம் தயிருடன் தேனைக் கலந்து உண்பது தான். நடந்து செல்லும்போதுகூட இவர் ஆகாரம் உட்கொள்வது சர்வ சகஜம்.

நினைத்ததை நடத்தி முடிப்பதில் பேராற்றல் உள்ளவர் இவர். கணிதம் என்றால் மிகப் பிடித்தம் இவருக்கு.



1894ஆம் ஆண்டு செப்டம்பர் 11ம் தேதி அவர் பிறந்தார். இவர் பெயர் விநாயக் நரஹரி பாவே. 1916ல் தாம் பெற்ற 'டிகிரி' பட்டங்கள், சர்டிபிகேட்டுகள் எல்லா வற்றையும் தீயிலிட்டுக் கொளுத்தி விட்டார். காந்திஜியைக் காண வந்தார். அப்போது வினோபா பூனாவில் படித்துக் கொண்டிருந்தார். படிப்பு முடிக்க இன்னும் ஓர் ஆண்டு காலம் இருந்தது. ஆகவே, மகாத்மா இவரை ஓர் ஆண்டு காலம் கழித்து வரச் சொன்னார். இதை காந்திஜி மறந்தே விட்டார். ஆனால் வினோபா குறித்த நாளில் ஆசிரமத்தில் ஆஜராகி விட்டார். இவருடைய தொண்டு ஆர்வமும் அடக்கமும் காந்திஜியைக் கவர்ந்து விட்டன. காந்திஜி எதிர்பார்த்த வகையில் சபர்மதி ஆசிரமத்தை மிகத் திறமையாக நிர்வகித்தார் வினோபாஜி.

1921 முதல் 1947 வரை இவர் ஆத்மிகத் துறையிலும் குடிசைத் தொழிலிலும் பல பரிசோதனைகளை நடத்தி வந்தார். 1923ல் நடைபெற்ற நாகபுரிக் கொடி சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டார். 1924ல் குருவாயூரில் நடந்த ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தில் காந்திஜியின் விருப்பப்படி இவர் பங்கு பெற்றார். 1940ல்தான் அவர் பெருமையை நாடு அறிந்தது. தனிநபர் சத்தியாக்கிரகத்தின் முதல் சத்தியாக்கிரகியாக இவர் மகாத்மாவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

வினோபாஜிக்கு அநேகமாக முக்கிய பாஷைகள் எல்லாமே தெரியும். அவருக்கு வினோபா என்ற பெயரை வைத்ததே காந்திஜி தான். வார்தாவுக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள பவ்னார் என்ற இடத்தில் இவர் தம் ஆசிரமத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்.

காந்திஜி மறைவுக்குப்பின் 1949ல் சர்வோதய சமாஜம் உதயமாயிற்று. அதற்கு மிகவும் பாடுபட்டவர் வினோபாஜி. 1951 மார்ச் 8ந் தேதி ஆசிரமத்திலிருந்து கால்நடையாக இவர் பாரத சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். தெலுங்கானாவில் அப்போது கலவரம். அன்புப் பிரசாரம் செய்துகொண்டு கால் நடையாக எவ்வித பாதுகாப்பும் இன்றி அவர் கிராமம் கிராமமாகச் சென்றார். 1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ந் தேதி நலகொண்டா ஜில்லாவில் போச்சம்பள்ளி கிராமத்தில் பூதான இயக்கம் உதயமானது.

தமிழ் நாட்டில் பூதான இயக்கம் 1952 அக்டோபர் 2ந்தேதி காந்தி பிறந்த தினத்தன்று ராமேசுவரத்தில் ஆரம்பமானது. ஆரம்பித்து வைத்தவர் சங்கரராவ் தேவ். சென்ற முறை வினோபா தமிழ் நாட்டில் பதினொரு மாதங்கள் பாத யாத்திரை நடத்தினார். தமிழ் நாட்டில் முதல் சர்வோதய கிராமமாக விளங்கியது உத்திர மேரூருக்கு நாலு மைல் தூரத்தில் உள்ள வயலூர்.

1917ல் காந்திஜி தீனபந்து ஆண்ட்ரூஸுக்கு வினோபாவை அறிமுகப்படுத்தும் போது கூறியதாவது: ''இந்த ஆசிரமத்தில் உள்ள சில நல் முத்துக்களில் இவர் ஒருவர். இங்கு பிறரைப்போல் வினோபா ஆசிர்வாதம் பெற வரவில்லை. ஆசிர்வதிக்க வந்திருக்கிறார்.''

வினோபா இந்த ஆசிரம வாழ்க்கையினால் தமக்கு என்ன கிடைத்தது என்பதுபற்றிக் கூறுவதாவது: ''அந்தக் காலத்தில் ஒரு இங்கிலீஷ்காரனையாவது கொன்றுவிட்டு மறுவேலை பார்க்க வேண்டும் என்கிற துடிப்பு எனக்கிருந்தது. பாபுஜி என் துடிப்பை அடக்கியதுடன் மட்டுமின்றி என் மனத்திலிருந்து ஆத்திரம், கோபம் எல்லாவற்றையும் சுட்டெரித்துவிட்டார். என்னை அடியோடு மாற்றியவர் பாபுஜிதான்.''

— நஜன்

தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு நற்செய்தி

கல்கியில் இடம் பெறும் சிறப்புச் சிறுகதைகள்

மொழிபெயர்ப்புத் திட்டம்

கல்கி காரியாலயத்துக்கு வரும் சிறுகதைகளில் மிகவும் உயர் தரமானவற்றுக்குச் சிறப்புச் சிறுகதை என்று விசேஷ மதிப்பளித்து கல்கி பிரசுரித்து வருவதை அனைவரும் அறிவர்.

'சாதாரண' ஆண்டில் கல்கியில் இடம்பெறும் எல்லாச் சிறப்புச் சிறுகதைகளும் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்படும். இந்த இரு மொழிபெயர்ப்புகளுக்கும் பல நகல்கள் எடுத்துப் பிற மாநிலங்களில் உள்ள பல பத்திரிகைகளுக்கும் அவை அனுப்பி வைக்கப்படும். பின்னோடு தமிழில் அச்சான மூலக் கதையும் போகும். இந்த மொழிபெயர்ப்புகளுக்கு ஆகும் செலவையும் பிற மொழிப் பத்திரிகைகள் பலவற்றுக்கு அனுப்பிவைக்க ஆகும் தபால் செலவுகளையும் கல்கி காரியாலயமே ஏற்கும். இக்கதைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கல்கி ஆசிரியரின் வேண்டுகோளும் அப்பத்திரிகைகளுக்குச் செல்லும்.

பிற மொழிப் பத்திரிகைகளில் இக்கதைகள் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ அல்லது வேறு பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டோ பிரசுரமானால் அதற்காக அந்தப் பத்திரிகை மூலக் கதாசிரியருக்கு அளிக்கும் சன்மானத் தொகை முழுவதும் நேரடியாகக் கதாசிரியருக்கே வந்து சேரும்.

இதர பாஷைகளில் மொழிபெயர்க்கும் பொறுப்பை அந்தந்தப் பத்திரிகைகளே ஏற்க வேண்டும். ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கும் பொறுப்பை மட்டுமே கல்கி காரியாலயம் ஏற்கிறது.

பிற மொழிக் கதைகளைத் தமிழாக்கம் செய்து கல்கி சிறுகதைச் சிறப்பிதழ்களில் வெளியிடுவதுபோல் தமிழில் எழுதப்படும் சிறந்த சிறுகதைகளைப் பிறமொழி வாசகர்களும் படித்து மகிழ வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம். தமிழ் எழுத்தாளர்கள் இந்த அரிய வாய்ப்பை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ளக் கோருகிறோம்.

'சாதாரண' ஆண்டில் கல்கியில் இடம் பெறும் சிறப்புச் சிறுகதைகளுள் மிகச்சிறந்த ஒரு சிறப்புச் சிறுகதைக்கு ரூபாய் ஆயிரம் விசேஷப் பரிசாகக் கல்கி காரியாலயம் வழங்கவிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த விசேஷப் பரிசுக்குரிய சிறுகதையைத் தேர்ந்தெடுப்பதில் கல்கி வாசகர்களின் அபிப்பிராயங்கள் கோரிப் பெறப்படும்.

ஆசிரியர், கல்கி



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் 39

கஜேந்திர மோட்சம்

இத்தனை நேரமும் வானதி சிவிகையிலேயே இருந்தாள். சிவிகையை இப்போது இறக்கிப் பூமியில் வைத்தார்கள். வானதி பல்லக்கிலிருந்து வெளியே வந்து நின்றாள். நெருங்கி வந்த ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள். காளாமுகர்களும் அதே திசையைப் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார்கள். தண்ணீர் ததும்பிய கழனிகளில் தவளைகள் இட்ட சத்தமும் வாடைக் காற்றில் மரக் கிளைகள் அசைந்த சத்தமும் மட்டுமே கேட்டன.

ஓடித் தப்பிக்கலாம் என்ற எண்ணமே வானதிக்குத் தோன்றவில்லை. அது இயலாத காரியம் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. இந்தக் காளாமுகர்களிடமிருந்து ஏதேனும் யுக்தி செய்து தப்பினாலும் தப்பலாம். அன்பில் அநிருத்தரிடமிருந்து தப்புவது கனவிலும் நினைக்க முடியாத காரியம். அவருடைய அறிவாற்றலும் இராஜ தந்திரமும் சூழ்ச்சித் திறனும் உலகப் பிரசித்தமானவை. அதோடு, சக்கரவர்த்தியிடம் அவர் மிகச் செல்வாக்கு உடையவர் என்பதும் உலகம் அறிந்தது. பழையாறையிலிருந்த அரண்மனைப் பெண்டிர் சோழ சாம்ராஜ்யத்தின் மற்ற அதிகாரிகளையும் சிற்றரசர்களையும் பற்றி வம்பு பேசுவார்கள். ஆனால் அநிருத்தரைப் பற்றி எதுவும் பேச மாட்டார்கள். அந்தப்புரத்தின் உள் அறைகளிலே மிக மிக அந்தரங்கமாகப் பேசினாலும் அவருடைய காதுக்கு எட்டி விடும் என்று பயப்படுவார்கள். சக்கரவர்த்தி வேறு எதைப் பொறுத்தாலும் தம் அந்தரங்கப் பிரியத்துக்கும் மரியாதைக்கும் உரிய முதன் மந்திரியைப் பற்றி யாரும் அவதூறு பேசுவதைப் பொறுக்க மாட்டார் என்று அனைவரும் அறிந்திருந்தார்கள்.

இவையெல்லாம் வானதிக்கும் தெரிந்திருந்தன. இளவரசி குந்தவையும் அவரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்ததை அவள் அறிந்திருந்தாள். ஆகையால் அவரிடமிருந்து தனக்கு உதவியும் பாதுகாப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாள். இந்தக் காளாமுகர்கள் வேறு விதமாகச் சொன்னதும் அவளுடைய மனோதிடம் குலைந்தது. அவர் எதற்காக இந்த அநாதைப் பெண்ணைக் கைப்பற்றச் சொல்லியிருக்க வேண்டும்?.... ஒருவேளை இவர்கள் பொய் சொல்லுகிறார்களோ, என்னமோ!

வருவது ஒருவேளை பழுவேட்டரையர்களாக இருக்கலாம். அல்லது மதுராந்தகரும் அவருடைய பரிவாரங்களாகவும் இருக்கலாம்.... யாரா யிருந்தாலும், ஒன்று நிச்சயம். இளவரசரைப் பற்றித் தனக்குத் தெரிந்த செய்தியை எவரிடமும் சொல்லக்கூடாது. அதனால் தனக்கு என்ன நேர்ந்தாலும் சரிதான்! தன் உயிரே போவதா யிருந்தாலும் சரிதான்!... இதைப் பற்றி எண்ணியதும் வானதி குலைந்த மனோதிடத்தை மீண்டும் பெற்றாள். வரட்டும், யாராயிருந்தாலும் வரட்டும். நான் கொடும்பாளூர் வேளிர் வீர பரம்பரையில் வந்தவள் என்பதை நிலைநாட்டுகிறேன். குந்தவைப் பிராட்டியின் அந்தரங்கத் தோழி என்பதையும் காட்டிக் கொடுக்கிறேன்.





ஊர்வலத்தில் ஒரு பல்லக்கு மட்டும் பிரிந்து முன்னால் வந்தது. மற்ற யானை, குதிரை பரிவாரங்கள் எல்லாம் சற்றுப் பின்னால் நின்றன.

முன்னால் வந்த பல்லக்கு வானதியின் அருகில் வந்ததும் பூமியில் இறக்கப் பட்டது. அதனுள்ளிருந்து முதன் மந்திரி அநிருத்தர் வெளியே வந்து நின்றார்.

அவர் சமிக்ஞை காட்டவே, சிவிகை சுமந்தவர்களும் காளாமுகர்களும் அப்பால் நகர்ந்து சென்றார்கள்.

அநிருத்தர் வானதியை மேலும் கீழும் உற்றுப் பார்த்து, ''இது என்ன விந்தை! நான் காண்பது கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது கொடும்பாளூர் இளவரசிதானே? ஈழத்துப் போரில் வீர சொர்க்கம் எய்திய பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி வானதிதானே?'' என்று கேட்டார்.

''ஆம், ஐயா! நான் காண்பதும் கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது சோழ சாம்ராஜ்ய மக்களின் பயபக்தி மரியாதைக்குரிய அன்பில் அநிருத்தப் பிரம்மராயர்தானே? சக்கரவர்த்தியின் அந்தரங்க அபிமானத்தைப் பெற்ற முதன் மந்திரியார்தானே?'' என்றாள் வானதி.

''தாயே! நான் யார் என்பதை நீ அறிந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். இதனால், என்னுடைய வேலை எளிதாகும். உனக்கும் அதிக கஷ்டம் கொடுக்க வேண்டி ஏற்படாது!''

''ஆகா! அதைப் பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டாம். தங்களைப் போன்ற அமைச்சர் திலகத்தினால் எனக்குக் கஷ்டம் நேர்ந்தால் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். அதைக் கஷ்டமாகவே கருத மாட்டேன்.''

''உன் வார்த்தைகள் மேலும் எனக்குத் திருப்தி அளிக்கின்றன. உன்னை அதிகமாகக் கஷ்டப்படுத்தும் உத்தேசமும் எனக்கு இல்லை. இரண்டொரு கேள்விகள் உன்னிடம் கேட்கப் போகிறேன். அவற்றுக்கு மறுமொழி சொல்லி விட்டால் போதும். பிறகு...''

''ஐயா! நீங்கள் என்னைக் கேள்வி கேட்பதற்கு முன்னால் நான் கேட்பதற்குச் சில கேள்விகள் இருக்கின்றன....''

''கேள், அம்மா! தயக்கமில்லாமல் கேள். நான் உன் தந்தையையொத்தவன். உன்னை என் மகளாகவே கருதுகிறேன். சில நாளைக்கு முன்பு உன் பெரிய தகப்பனார் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியை மாதோட்டத்தில்



சந்தித்தேன். உன்னை என்னுடைய மகளைப் போல் பாவித்துக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார். அப்படியே வாக்களித்தேன்....''

''வந்தனம், என் தந்தையே! குழந்தைப் பிராயத்தில் தகப்பனை இழந்த எனக்குத் தந்தையாயிருப்பதாக முன்னொரு தடவை சக்கரவர்த்தி வாக்களித்தார்; இப்போது தாங்கள் ஒரு தந்தை தோன்றியிருக்கிறீர்கள். இனி எனக்கு என்ன குறை?''

''நீ என்னிடம் கேட்க விரும்பியதைச் சீக்கிரம் கேள், அம்மா! வானம் கருத்து இருள் சூழ்கிறது. மழை வரும் போலத் தோன்றுகிறது.''

''தந்தையே! சாலையோடு பல்லக்கில் பிரயாணம் செய்து கொண்டிருந்த தங்கள் அருமை மகளை இந்தக் காளாமுகர்களை விட்டு வழிமறித்து இவ்விடம் பலவந்தமாகக் கொண்டு சேர்க்கும்படி செய்தது தாங்கள்தானா? இந்த அபலைப் பெண்ணின் கையைத் திவர்த்திப் பிழம்பில் காட்டி எரிக்கும்படி சொன்னதும் தாங்கள்தானா? இந்தப் பயங்கரமான மனிதர்கள் அவ்வாறு தங்கள் மீது குற்றம் சாட்டினார்கள். நான் அதை நம்பவில்லை.....''

''குழந்தாய்! இவர்கள் கூறியது உண்மையே. நான்தான் இவர்களுக்கு அவ்விதம் கட்டளையிட்டேன். அது குற்றமாயிருந்தால், அதற்குப் பொறுப்பாளி நானே....''

''மூன்று உலகமும் புகழ் பெற்ற சோழ நாட்டு முதன் மந்திரியே! தங்கள் பேச்சு எனக்கு வியப்பு அளிக்கிறது. 'குற்றமாயிருந்தால்' என்றீர்களே! தாங்கள் சகல தர்ம சாஸ்திரங்களையும் நீதி சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர். சோழ சாம்ராஜ்யத்தின் சட்டதிட்டங்களையெல்லாம் நடத்தி வைக்கும் பொறுப்பு வாய்ந்தவர். நீதிக்கு மாறாகச் சக்கரவர்த்தியே காரியம் செய்தாலும் அதைக் கண்டித்து நியாயமாக நடக்கச் செய்யும் உரிமை வாய்ந்தவர். ஒரு காரியம் குற்றமா, இல்லையா என்பது தங்களுக்குத் தெரியாவிட்டால், வேறு யாருக்குத் தெரியும்? சாலையோடு பிரயாணம் செய்யும் அபலைப்பெண் ஒருத்தியைப் பலவந்தமாக வழிமறித்துத் தனி இடத்துக்குக் கொண்டு சேர்ப்பதும், அந்தப் பெண்ணைச் சித்திரவதை செய்வதாகப் பயமுறுத்துவதும் குற்றமா, இல்லையா என்று தங்களுக்குத் தெரியாமற் போனால் வேறு யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள்? சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இராஜ்யத்தில் வழிப் பிரயாணத்தில் எவ்வித பயமும் இடையாது என்று கேள்விப்பட்டிருந்தேன். அதிலும் பெண்களைத் துன்புறுத்தும் துஷ்டர்களுக்குக் கடுந் தண்டனை உண்டு என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அது குற்றமா, இல்லையா என்றே தங்களுக்குச் சந்தேகம் தோன்றியிருப்பது மிக வியப்பான காரியம் அல்லவா?''

முதன் மந்திரி அநிருத்தர் திணறிப் போனார். இடையில் குறுக்கிட்டுப் பேச அவர் இரண்டு தடவை முயன்றும் பயன்படவில்லை. இப்போது அவர் குரலைக் கடுமைப்படுத்திக் கொண்டு, ''பெண்ணே! கொஞ்சம் பொறு! உன் பேச்சுத் திறமை முழுவதையும் காட்டி விடாதே! 'குற்றமா, இல்லையா?' என்று நான் சந்தேகப்படுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. அது நான் கேட்கும் கேள்விக்கு நீ சொல்லும் விடையைப் பொறுத்திருக்கிறது. முக்கியமான இராஜாங்க இரகசியம் ஒன்றை அறிந்த பெண் ஒருத்தி நாகைப்பட்டினம் சாலையில் போவதாக நான் கேள்விப்பட்டேன். அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்தும்படி என் மனிதர்களுக்குக் கட்டளையிட்டேன். அவர்கள் என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதாக எண்ணிக் கொண்டு செய்திருக்கிறார்கள். ஒரு வேளை அவர்கள் தவறு செய்திருக்கலாம். இராஜாங்க சதி வேலையில் ஈடுபட்ட பெண்ணுக்குப் பதிலாகக் குடந்தை சோதிடரிடம் சோதிடம் கேட்டுவிட்டுத் திரும்பிய உன்னைக் கைப்பற்றியிருக்கக் கூடும். மகளே! நீ சொல்! குடந்தையிலிருந்து பழையாறைக்குத் திரும்புவது தான் உன் நோக்கமா? சிவிகை தூக்கிகள் தவறாக உன்னை நாகைப்பட்டினம் சாலையில் கொண்டு போனார்களா? இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்த ஒருவனை அந்தரங்கமாகப் பார்க்கும் நோக்கத்துடன் நீ நாகைப்பட்டினத்துக்குப் புறப்படவில்லையே?.... இல்லையென்று நீ சொல்லி நிரூபித்தாயானால், இவர்கள் செய்தது குற்றமாகும். அதில் எனக்கும் பங்கு உண்டுதான்! என்ன சொல்கிறாய், பெண்ணே? இன்னும் தெளிவாகவே கேட்டுவிடுகிறேன். இளவரசன் அருள்மொழி வர்மனை இரகசியமாகச் சந்திப்பதற்காக நீ நாகைப்பட்டினத்துக்குப் புறப்படவில்லையே?'' என்றார்.

இளவரசி இப்போது கதி கலங்கிப் போனாள். முதன் மந்திரி அநிருத்தரை எரித்து விடலாமா என்று அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்தது. ஆனால் ஆத்திரத்தை வெளியில் காட்டுவதில் பயனில்லை என்று உணர்ந்தாள். கள்ளங் கபடம் அறியாதிருந்த அந்தச் சாதுப்

பெண்ணுக்கு அப்போது எங்கிருந்தோ ஆழ்ந்து சிந்திக்கும் சக்தியும் சூழ்ச்சித் திறனும் ஏற்பட்டிருந்தன. ஆகையால், முதன் மந்திரியின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், "ஐயா! இது என்ன வார்த்தை! இளவரசர் அருள்மொழி வர்மரையா இராஜாங்கத்துக்குவிரோதமாகச் சதி செய்தார் என்று சொல்கிறீர்கள்? சக்கரவர்த்தியின் அருமைக் குமாரரைப்பற்றி நீர் இவ்விதம் பேசுவது குற்றம் அல்லவா? சோழ குலத்துக்கு எதிரான சதி அல்லவா? ஆகா! இதைப்பற்றி நான் உடனே குந்தவைப் பிராட்டியிடம் சொல்லியாக வேண்டும்!" என்றாள்.

"பேஷாகச் சொல், தாயே! என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லி விட்டால், பிறகு ஒருகணங்கூட இங்கே தாமதிக்க வேண்டிய அவசியமில்லை. நானே உன்னை இளையபிராட்டியிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்...."

"தங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லா விட்டால்?...."

"சொல்லாவிட்டால் என்பதே இடையாது, தாயே! இந்தக் கிழவனிடமிருந்து அவ்வளவு சுலபமாக யாரும் தப்ப முடியாது. என் கேள்விக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும்" என்றார் அமைச்சர்.

"ஐயா! சர்வ வல்லமை படைத்த முதல்மந்திரி அநிருத்தப் பிரம்மராயரே! ஒரு சக்தியும் இல்லாத இந்த ஏழை அபலைப் பெண்ணிடமிருந்து தாங்கள் இளவரசரைப் பற்றி எதுவும் அறிய முடியாது. இந்த யமகிங்கரர்கள் சற்று முன் பயமுறுத்தியது போல் என் கையைத் தீயிலிட்டு எரித்த போதிலும் நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை."

"கொடும்பாளூர் வீரவேளிர் குலத்துதித்த கோமகளே! உன்னுடைய மன உறுதியைக் கண்டு மெச்சுகிறேன். ஆனால் இளவரசரைப் பற்றி ஒரு விவரமும் சொல்ல மாட்டேன் என்று நீ கூறினாயே, அது அவ்வளவு சரியன்று. ஏற்கனவே சில விவரங்கள் நீ சொல்லி விட்டாய். இன்னும் ஒரு விவரத்தையும் சொல்லிவிட்டால், அதிக நஷ்டம் ஒன்றும் நேர்ந்து விடாது. என் வேலையும் எளிதாய்ப் போய் விடும்...."

வானதி மறுபடியும் திடுக்குற்றாள். வாய் தவறி ஏதாவது சொல்லிவிட்டோமோ என்று நினைத்த போது அவளுடைய நெஞ்சை யாரோ இறுக்கிப் பிடிப்பது போலிருந்தது. உடம்பெல்லாம் பதறியது. இல்லை, 'நான் ஒன்றும் சொல்லி விடவில்லை, இந்தக் கிழவர் என்னை ஏமாற்றப் பார்க்கிறார்' என்று எண்ணிச் சிறிது தைரியம் அடைந்தாள்.

"ஐயா! வேதம் சொல்லும் உம்முடைய வாயிலிருந்து பொய் வரலாமா? சுந்தர சோழரின் முதல் அமைச்சர் இல்லாததைக் கற்பித்துச் சொல்லலாமா? நான் இளவரசரைப் பற்றி எதுவும் கூறவில்லையே? நான் ஏதோ கூறியதாகச் சொல்கிறீரே?" என்றாள்.

"யோசித்துப் பார், தாயே! நன்றாக எண்ணிப் பார்! ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசாமலேயே அதைப் பற்றிய விவரத்தைத் தெரிவிக்கமுடியாது என்று நீ கருதினால், அது பெரிய தவறு. நீ சொல்லாமற் சொன்ன விவரத்தைக் குறிப்பிடுகிறேன்; கேள்! இளவரசர் அருள்மொழிவர்மர் கடலில் மூழ்கி இறந்துவிட்டதாக உலகமெல்லாம் பேச்சாக இருக்கிறது. குடிமக்கள், அதிகாரிகள் அனைவரும் சோகக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். உனக்கும் அந்தச் செய்தி தெரியும். அப்படியிருக்கும் போது, நீ இளவரசரைப் பற்றி ஒரு விவரமும் சொல்ல மாட்டேன் என்று கூறினாய். அதிலிருந்து வெளியாவது என்ன? இளவரசர் இறக்கவில்லையென்பது உனக்குத் தெரியும் என்று ஏற்படுகிறது. அவரைப் பார்ப்பதற்கு நீ நாகைப்பட்டினம் போகிறாய் என்று நான் சொன்னதையும் நீ மறுக்கவில்லை. 'இறந்து போன இளவரசரை நான் எப்படிப் பார்க்க முடியும்?' என்று நீ திருப்பிக் கேட்கவில்லை. 'நாகைப்பட்டினம் போகவில்லை, வேறு இடத்துக்குப் போகிறேன்' என்றும் நீ சொல்லவில்லை. ஆகையால் நாகைப்பட்டினத்தில் இளவரசர் உயிரோடு இருக்கிறார் என்பதையும், அவரைப் பார்க்கப் போகிறாய் என்பதையும் ஒப்புக் கொண்டு விட்டாய்! மிச்சம் நீ சொல்ல வேண்டிய விவரங்கள் இரண்டே இரண்டுதான்; நாகைப்பட்டினத்தில் இளவரசர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல வேண்டும்; அந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது என்றும் கூற வேண்டும். இந்த இரண்டு விவரங்களையும் நீ கூறிவிட்டால், அப்புறம் ஒரு கணங்கூட இங்கே தாமதித்து இந்தக் கிழவனோடு பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உனக்கு எங்கே போக விருப்பமோ, அங்கே போகலாம்."

வானதியின் உள்ளம் இப்போது அடியோடு கலங்கிப் போய் விட்டது. முதன் மந்திரி கூறியது உண்மை என்றும், தன்னுடைய அறியாமையினால் இளவரசரைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகவும்

உணர்ந்தாள். தான் செய்து விட்ட குற்றத்துக்குப் பிராயச்சித்தம் உண்டா? கிடையவே கிடையாது! உயிரை விடுவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

''ஐயா! தாங்கள் என் பெரிய தந்தையின் ஆப்த நண்பர் என்று சொன்னீர்கள். என்னைத் தங்கள் மகள் என்றும் உரிமை கொண்டாடினீர்கள். தங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நான் நாகைப்பட்டினம் போகவும் விரும்பவில்லை; பழையாறைக்குப் போகவும் விரும்பவில்லை....''

''கொடும்பாளூருக்குப் போக விரும்புகிறாயாக்கும். அது நியாயந்தான். அங்கேயே உன்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்.''

''இல்லை, ஐயா! கொடும்பாளூர் போகவும் நான் விரும்பவில்லை. இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக விரும்புகிறேன். தங்களுடைய ஆட்களிடம் சொல்லி அதோ தெரியும் பலி பீடத்தில் என்னைப் பலி கொடுத்து விடச் சொல்லுங்கள்! நான் தயாராக இருக்கிறேன்!'' என்று சொன்னாள்.

''தாயே! உன்னுடைய விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றி வைப்பதாகச் சொன்னேன். ஆகையால் மறு உலகத்துக்குத்தான் நீ போக வேண்டும் என்றால், அங்கேயே அனுப்பி வைக்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் என்னுடைய கேள்விகளுக்கு விடை சொல்லியாக வேண்டும்.''

''ஐயா! என்னை வீணில் துன்புறுத்த வேண்டாம். நான் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லப் போவதில்லை. என்னைத் தங்கள் மகளாகக் கருதுவதாகச் சற்று முன் தாங்கள் சொன்னது உண்மையாயிருந்தால்....''

''மகளே! அதில் யாதொரு சந்தேகமுமில்லை. உன்னை நான் பெற்ற மகளாகவே கருதுகிறேன். உன் குடும்பத்தார் எனக்கு எவ்வளவு வேண்டியவர்கள் என்பது ஒரு வேளை உனக்குத் தெரிந்திராது! உன் பெரிய தந்தையும் நானும் நாற்பது ஆண்டுகளாகத் தோழர்கள். ஆனால் இராஜாங்கக் காரியங்களில் சிநேகம், உறவு என்றெல்லாம் பார்ப்பதற்கில்லை. பெற்ற தந்தை என்றும் பார்க்க முடியாது; அருமைக் குமாரி என்றும் பார்க்க முடியாது. ஏன்? சக்கரவர்த்தியின் காரியத்தையே பார்! தமது சொந்தக் குமாரன் இராஜாங்கத்துக்கு விரோதமான சதி செய்தபடியால், அவனைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிடவில்லையா?''

''ஐயா! பொன்னியின் செல்வரைப் பற்றியா இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள்? அவர் இராஜாங்கத்துக்கு விரோதமாக என்ன சதி செய்தார்?''


''ஓகோ! உனக்கு அது தெரியாது போலிருக்கிறது. இலங்கைக்குப் போர் செய்யப் போவதாகச் சொல்லி விட்டுப் பொன்னியின் செல்வர் போனார். அங்கே நமது வீரப் படைகள் இலங்கைப் படைகளை முறியடித்தன. அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்ளப் பார்த்தார். இது இராஜாங்கத்துக்கு விரோதமான சதி அல்லவா? இதை அறிந்ததும் சக்கரவர்த்தி தமது திருக் குமாரரைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்குக் கட்டளை அனுப்பினார். இளவரசர் அக்கட்டளையை மீறிக் கடலில் வேண்டுமென்று குதித்துத் தான் இறந்துவிட்டதாகப் பொய்ச் செய்தியைப் பரப்பச் செய்தார். பிறகு, கரையேறி எங்கேயோ ஒளிந்து மறைந்திருக்கிறார். இந்த விவரங்கள் உனக்குத் தெரியாதபடியால் அவர் இருக்குமிடத்தை நீ சொல்ல மறுத்தாய் போலும். அப்படிப்பட்ட இராஜாங்க விரோதியை நீ மறைத்து வைக்க முயன்றால், அதுவும் பெரிய குற்றமாகும். ஆகையால், சொல்லி விடு, அம்மா!'' என்றார் முதன் மந்திரி.

வானதி இது வரை அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் இப்போது பொங்கிப் பீறிக் கொண்டு வெளி வந்தது. பொன்னியின் செல்வரைக் குறித்து முதன்மந்திரி கூறிய தூஷணைகளை எல்லாம் அவளால் பொறுக்க முடியவில்லை. அந்தச் சாதுப் பெண் வீராவேசமே உருவெடுத்தவள் போலாகிக் கூறினாள்:

''ஐயா! தாங்கள் கூறியது ஒன்றும் உண்மையில்லை. இளவரசர் மீது வீண் அபாண்டம் கூறினீர்கள். இலங்கையில் நமது படைகள் சோர்வடைந்திருந்த காலத்தில் இளவரசர் அங்கே சென்றதினாலேயே உற்சாகம் கொண்டு போராடினார்கள். பொன்னியின் செல்வர்தான் இலங்கையில் நம் வெற்றிக்குக் காரணமானவர் என்பது உலகமறிந்த உண்மை. அவருடைய வீரத்தையும் மற்ற குணாதிசயங்களையும் பார்த்து இலங்கை மக்கள் அவர் மீது அன்பு கொண்டார்கள். போரில் புறமுதுகிட்டோடி ஒளிந்து கொண்ட தங்கள் அரசனுக்குப் பதிலாக இளவரசரைத் தங்கள் அரசனாக்கிக் கொள்ள விரும்பினார்கள். புத்த குருமார்கள் இலங்கைச் சிம்மாசனத்தைப் பொன்னியின் செல்வருக்கு அளித்தார்கள். பொன்னியின் செல்வர்

சிம்மாசனம் தமக்கு வேண்டாம் என்று மறுதளித்தார். அத்தகைய நேர்மையானவரைக் குறித்துத் தாங்கள் இவ்வளவு அவதூறு சொல்லியிருக்கிறீர்கள். இளவரசர் தந்தையின் கட்டளை என்று அறிந்ததும் தாமே சிறைப்பட்டு நேரே தஞ்சைக்குப் புறப்பட்டு வந்தார். அவர் கடலில் வேண்டுமென்று குதிக்கவில்லை. தம் அருமைச் சிநேகிதரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே குதித்தார். சக்கரவர்த்திக்கு விரோதமாக அவர் சதி செய்யவும் இல்லை. இந்த அபாண்டங்களையெல்லாம் கேட்க என் செவிகள் என்ன துர்ப்பாக்கியம் செய்தனவோ தெரியவில்லை!....''

முதலமைச்சர் கொடுக்கும் டிபன் பாக்ஸில் என்ன இருக்கிறது?



(53ம் பக்கம் பார்க்கவும்)

அநிருத்தர் இலேசாகச் சிரித்துக் கொண்டே, ''பெண்ணே! அருள்மொழிவர்மருக்காக நீ இவ்வளவு ஆத்திரமாகப் பரிந்து பேசுவதைக் கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? நீங்கள் இருவரும் காதலர்கள் என்று நினைப்பார்கள்!'' என்றார்.

''ஐயா! தாங்கள் இப்போது கூறியதில் பாதி மட்டும் உண்மை. நான் அவருக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பது மெய்தான். இதைத் தங்களிடமிருந்து நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால் அவர் இந்த அநாதைப் பெண்ணுக்குத் தன் உள்ளத்தில் இடங்கொடுத்திருப்பதற்கு நியாயம் இல்லை. வானத்தில் ஜொலிக்கும் சந்திரன் மீது அன்றில் பறவை காதல் கொள்ளலாம். ஆனால் சந்திரனுக்கு அன்றில் பறவை ஒன்று இருப்பதே தெரிந்திராது.''

''ஆஹா! என் அருமைச் சிநேகிதரின் மகள் இவ்வளவு சிறந்த கவிதா ரஸிகை என்பது இதுவரை எனக்குத் தெரியாமற் போயிற்று. இளையபிராட்டி குந்தவையின் அந்தரங்கத் தோழி அல்லவா நீ?'' என்றார் முதன் மந்திரி.

''போதும் போதும்! தங்கள் புகழ்ச்சியைக் கேட்க நான் விரும்பவில்லை. ஒன்று என்னை என் வழியே போவதற்கு விடுங்கள். இல்லாவிடில் உங்கள் ஆட்களை அழைத்துக் கட்டளையிடுங்கள்.''

''பெண்ணே! கொஞ்சம் பொறு! பொன்னியின் செல்வரைப் பற்றி உனக்கு எவ்வளவோ விவரங்கள் தெரிந்திருக்கின்றன. ஆகையால் அவர் இப்போது இருக்குமிடமும் உனக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அதை மட்டும் சொல்லிவிடு. உன்னை உடனே உன் பெரிய தந்தையிடம் அனுப்பிவைக்கிறேன். அவர் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார். இத்தனை நேரம் மதுரைக்கு வந்திருப்பார்.''

''ஐயா! தங்களைப் போன்ற வஞ்சகம் நிறைந்த மனிதருடன் சிநேகமாயிருப்பவர் என்னுடைய பெரிய தந்தை அல்ல. எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. இளவரசரைப் பற்றி எல்லாரும் அறிந்திருப்பதையே நான் சொன்னேன். வேறு எதுவும் என்னிடமிருந்து தாங்கள் தெரிந்து கொள்ள முடியாது. வீண் தாமதம் செய்ய வேண்டாம்....''

''தாமதம் செய்யக் கூடாதுதான். பலமாக மழை வரும் போலிருக்கிறது.''

''மழை மட்டுந்தானா வரும்? தங்களைப் போன்றவர்கள் உள்ள இடத்தில் இடி, மின்னல், பிரளயம் எல்லாம் வரும்.''

வானதியின் கூற்றை ஆமோதிப்பது போல் அச்சமயம் ஒரு நெடிய மின்னல் வானத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் பாய்ந்தோடி ஜொலித்துவிட்டு மறைந்தது. மின்னல் மறைந்து இருள் சூழ்ந்ததும் அண்டகடாகங்கள் அதிரும்படியான பேரிடி ஒன்று இடித்தது.

''பெண்ணே! இளவரசன் அருள்மொழிவர்மன் எங்கே இருக்கிறான் என்று சொல்ல மாட்டாயா?''

''சொல்ல மாட்டேன்.''

"நான் ஊகித்தது ஊர்ஜிதமாகிறது. இளவரசன் மறைந்திருக்கும் இடத்துக்கு நீ ஏதோ இரகசியச் செய்தி கொண்டு போவதற்காகப் புறப்பட்டாய். இது உண்மையா, இல்லையா?"

"ஐயா! வீண் வேலை! தங்கள் கேள்வி எதற்கும் இனி நான் மறுமொழி சொல்ல முடியாது."

"அப்படியானால், இராஜாங்கத்துக்குத் துரோகமாகச் சதி செய்பவர்களுக்கு அளிக்க வேண்டிய கடுந் தண்டனையை உனக்கும் அளிக்க வேண்டியதுதான். வேறு வழி இல்லை."

"தண்டனையை ஏற்பதற்குக் காத்திருக்கிறேன், ஐயா! பலிபீடத்தில் என் தலையை வைக்க வேண்டும் என்றால், அப்படியே செய்கிறேன்."

"சேச்சே! நீ கொடும்பாளூர் வேளிர் மகள்! உனக்கு அவ்வளவு அற்பமான தண்டனை கொடுக்கலாமா? அதோ பார், அந்த யானையை!"

வானதி அவர் காட்டிய திசையைப் பார்த்தாள். கன்னங்கரிய குன்றினைப் போல் யானை ஒன்று நின்றுகொண்டிருந்தது. கருங்கல்லினால் செய்து கரிய மை பூசப்பட்ட உருவத்தைப் போல் அது தோன்றியது. அதன் கருமையை நன்கு எடுத்துக் காட்டிக் கொண்டு இரண்டு வெள்ளைத் தந்தங்கள் நீண்டு வளைந்து திகழ்ந்தன.

"பெண்ணே! கஜேந்திர மோட்சம் என்று கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா? யானையின் அபயக் குரல் கேட்டுத் திருமால் ஓடி வந்து முதலையைக் கொன்று கஜேந்திரனை மோக்ஷத்துக்கு அனுப்பினார். அதற்குப் பதிலாக, இந்தக் கஜேந்திரன் எத்தனை எத்தனையோ பேரை அந்தத் திருமால் வாசம் செய்யும் மோட்ச உலகத்துக்கு அனுப்பியிருக்கிறது. நீ இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக வேண்டும் என்று சொன்னாய் அல்லவா? உன் விருப்பத்தை இந்த யானை கண் மூடித் திறக்கும் நேரத்தில் நிறைவேற்றி வைக்கும். அது தன் துதிக்கையினால் உன்னைச் சுழற்றி எடுத்து வீசி எறிந்தால் நீ நேரே மோட்ச உலகத்திலேயே போய் விழுவாய்!"

இவ்விதம் கூறிவிட்டு முதன் மந்திரி அநிருத்தர் சிரித்தார். அந்தச் சிரிப்பு வானதிக்கு ரோமாஞ்சனத்தை உண்டாக்கிற்று. இந்த மந்திரி மனிதரல்ல, மனித உருக் கொண்ட அரக்கன் என்று எண்ணினாள்.

"கோமகளே! முடிவாகக் கேட்கிறேன். பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைச் சொல்கிறாயா? அல்லது இந்தக் கஜேந்திரனுடைய துதிக்கை வழியாக மோட்சத்துக்குப் போகிறாயா?" என்ற வார்த்தைகளைக் கேட்டதும், வானதி மீண்டும் மனோ திடம் பெற்றாள்.

"ஐயா! கஜேந்திரனை என்னிடம் வரச் சொல்கிறீர்களா? அல்லது நானே கஜேந்திரனிடம் போகட்டுமா?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

அநிருத்தர் கையினால் சமிக்ஞை செய்தார். அத்துடன் அவர் வானதிக்கு விளங்காத பாஷையில் ஏதோ சொன்னார். யானை பூமி அதிரும்படி நடந்து வந்தது. வானதியின் அருகில் வந்தது. தன்னுடைய நீண்ட துதிக்கையினால் வானதியின் மலரினும் மிருதுவான தேகத்தைச் சுற்றி வளைத்தது. அவளைப் பூமியிலிருந்து தூக்கியது.

அந்தச் சில கண நேரத்தில் வானதியின் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் அலை அலையாய்ப் பாய்ந்து மறைந்தன. தான் அச்சமயம் அவ்வளவு தைரியத்துடன் இருப்பதை நினைத்து அவளுக்கே வியப்பாயிருந்தது. இளைய பிராட்டி குந்தவை தேவி என்னைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் அடிக்கடி சொல்லுவாரே? அவர் இச்சமயம் இங்கிருந்து என்னுடைய தைரியத்தைப் பார்த்திருந்தால் எத்தனை ஆச்சரியப்படுவார்? அவருக்கு என்றாவது ஒரு நாள் இச் சம்பவத்தைப் பற்றித் தெரியாமலிராது. பொன்னியின் செல்வருக்காக நான் தீரத்துடன் உயிரை விட்டது பற்றி அறிந்து கொள்வார். அதை இளவரசரிடமும் சொல்லியே தீருவார். அப்போது இளவரசர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? அந்த ஓடக்காரப் பெண்ணைக் காட்டிலும் கொடும்பாளூர் வேளார் மகள் தைரியசாலி என்று அப்போதாவது அறிந்து கொள்வார் அல்லவா?

யானையின் துதிக்கை மெள்ள மெள்ள மேலே எழுந்தது. அத்துடன் வானதியும் மேலே ஏறினாள்! ஆம்! ஆம்! அந்தப் பிரம்மராட்சதர் கூறியது உண்மைதான். இந்தக் கஜேந்திரன் என்னை நேரே மோட்சத்துக்கே அனுப்பிவிடப் போகிறது! அடுத்த கணம் என்னை வீசி எறியப் போகிறது! எத்தனை தூரத்தில் போய் விழுவேனோ தெரியவில்லை. ஆனால் விழும்போது எனக்குப் பிரக்ஞை இராது. அதற்குள் உயிர் போய்விடும்!

வானதி இப்போது யானையின் மத்தகத்துக்கு மேலேயே போய்விட்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள். யானை தன் துதிக்கையைச் சுழற்றியது. வானதியை விசிறி எறிவதற்குச் சித்தமாயிற்று. அந்தச் சமயத்தில் கடவுள் அருளால் வானதி தன் சுய நினைவை இழந்து விட்டாள். (தொடரும்)



everest/900j/PP tm

ராமாயணம்

ராஜாஜி

இப்படி லக்ஷ்மணன் சொன்ன போதிலும், சீதை கண்கள் சிவந்து போய்ப் பெருங் கோபமடைந்து சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொன்னாள்:

''அண்ணன் ஆணை என்று சமாதானம் சொல்லி, அண்ணன் கதறிக் கூவினாலும் போகாமல் அவனைச் சாக விடுகிறாயா? ஆகா, உன்னை நம்பி என்ன மோசம் போனோம் ராமனும் நானும்! நீசனே! துஷ்டனே! ராமனுக்குப் பகையாய் வந்த வஞ்சகனே! ராமனுக்கு ஆபத்து வந்தது என்று மகிழ்ச்சி அடைகிறாயா? ஏமாற்றப் பார்க்கிறாயா? ராமனோடு நீ வனத்துக்கு வந்த நோக்கத்தை இப்போது நான் கண்டு கொண்டேன். அடே, பாவி! பரதனுடைய தூண்டுதலா இது? எல்லாரும் என் நாயகனுடைய சத்துருக்கள் ஆகிவிட்டீர்களா? நீங்கள் எல்லாரும் சேர்ந்து என்ன செய்ய யோசிக்கிறீர்கள்? ராமனோடு வாழ்ந்த நான் உங்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பேனா? ராமன் இறந்தபிறகு ஒரு நிமிஷமும் உயிருடன் இருக்கமாட்டேன். அறிவாய்!'' என்றாள்.

மயிர்க்கூச்சமெடுக்கும்படியான இந்த வார்த்தைகளைக் கேட்டு லக்ஷ்மணன் இரண்டு கைகளையும் கூப்பி, ''தாயே! என் தெய்வமே! ஜனகருடைய புத்திரியே! இத்தகைய மொழிகள் உன் வாயிலிருந்து வரலாமா? பழுக்கக் காய்ச்சின இரும்பு போல் காதுகளில் புகுகின்றனவே! நீ எண்ணுவது அநீதி, பொய். பார்த்துக் கொண்டிருக்கும் தேவர்கள் சாட்சியாகச் சொல்லுகிறேன். வனதேவதைகள் சாட்சியாகச் சொல்லுகிறேன். என்னைச் சந்தேகப்பட்டுப் பேசினாயே! ஆகா! இன்று பெண்களுடைய குணக் குறைவு உன்னிடம் இருப்பதைக் கண்டேன். எனக்குப் பாப எண்ணம் சூட்டினாயே, அடடா! அது உன்னுடைய கெட்ட காலம் என்று எண்ணுகிறேன். பெரிய விநாசம் உன்னைத் தாக்கி விடுவது நிச்சயம்'' என்றான் அப்பாவி லக்ஷ்மணன். பயத்தால் நடுங்கினான்.

''இதோ உயர்ந்த கட்டைகள் இருக்கின்றன. நீ மூட்டி அதில் விழப் போகிறேன். கோதாவரியில் விழுந்து உயிர் நீப்பேன். அல்லது தூக்குப் போட்டுக் கொண்டு சாவேன். மலையிலிருந்து கீழே குதித்தோ அல்லது விஷம் குடித்தோ சாவேன்! என்ன நினைக்கிறாய்? ராமன் கூக்குரலிட்ட இடம் போவாயா, இல்லையா?'' என்றாள் சீதை.

இவ்வாறு சொல்லிச் சீதை வயிற்றில் அடித்துக் கொண்டு கதறி அழுதாள். இதைக் கண்டு பொறுக்க முடியாமல் லக்ஷ்மணன் கைகூப்பி நமஸ்கரித்து, ''சீதையே! சரி, நீ சொல்லுகிறபடி அண்ணன் ஆணையை மீறி உன்னைத் தனியாக விட்டுச் செல்கிறேன். உனக்கு மங்களம்! வனதேவதைகள் உன்னைக் காப்பார்களாக! நீ சொல்லுகிறபடியே போகிறேன். ஐயோ, கெட்ட நிமித்தங்கள் காண்கிறேனே! பயமாகத் தானிருக்கிறது. நான் வந்து மறுபடியும் உன்னை ராமனுடன் பார்ப்பேனா! சந்தேகமாக இருக்கிறது. ஆயினும் இதோ போகிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

போகும் போது அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே, கொஞ்சங்கூட மனமில்லாமல் சென்றான்.

லக்ஷ்மணன் மனத்தைக் கோபமும் துயரமும் சேர்ந்து வாட்டின. சீதை சொன்ன கோரமான மொழிகளை அவன் எப்படிச் சகிப்பான்? அல்லது மறப்பான்? அனைத்தையும் விட்டுவிட்டு அண்ணனுடன் வனத்துக்கு வந்த ராஜகுமாரன் மனத்தை அந்த மொழிகள் மிகவும் துன்புறுத்தின.

ராமன் போன வழியிலேயே லக்ஷ்மணன் சென்றான். அந்தச் சமயத்துக்காகக் காத்துக் கொண்டிருந்த ராவணன் சுத்தமான காவித் துணி அணிந்து, இருப்பிடமின்றி பிக்ஷை எடுத்துத் திரியும் சந்நியாசியாகத் தன்னை மாற்றிக் கொண்டு, மனத்தில் நீச எண்ணமும் வாயில் வேத மந்திரங்களும் சொல்லிக் கொண்டு ராமனுடைய ஆசிரமத் தண்டை சென்றான்.

குடிசை வாயிலில் வைதேகி தனியாக நின்று கொண்டிருந்தாள். ராமன் வருவானா என்று வனத்தைப் பார்த்த வண்ணமாக நின்றாள். ராவணன் சீதையைப் பார்த்தான்.

பார்த்ததுமே சூர்ப்பனகை எழுப்பிய ஆசை அவன் உள்ளத்தில் ஊர்ஜிதப்பட்டு நன்றாக உருக் கொண்டு விட்டது. எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்று நீசன் தீர்மானித்துவிட்டான்.

காஷாயம் தரித்து, கமண்டலமும் திரிதண்டமுமாக வந்த பரிவ்ராஜ சந்நியாசி ஆசிரமத்தண்டை நின்றபடியால் ஆசார முறைப்படி சீதை அவனுக்கு உபசாரம் செய்தாள். கடமைப்படி ஆசனம் அமைத்து, பழமும் கிழங்கும் அவன் முன் வைத்தாள். அந்தக் காலத்தில் இது தவறக் கூடாத பண்பாடு.

அமைத்த ஆசனத்தில் சந்நியாசி உட்கார்ந்து சீதையைப் பார்த்தான். அவன் ஆசை இன்னும் அதிகரித்து முற்றிப் போயிற்று.

கேவலம் மிருகாநுபவத்துக்குமட்டும் ராக்ஷசேந்திரன் ஆசைப்படவில்லை. பாவியாயிருந்தாலும், பச்சை ஊன் தின்னும் அரக்கர் குலத்தவனாக இருந்தாலும், அவனுடைய எண்ணம் சீதையின் காதலைப் பெற்று அவளை



மனைவியாக்கிக் கொண்டு மேலான இன்பத்தை அநுபவிக்க வேண்டும் என்பது. லங்கேசனுடைய ஆசை அவளுடைய சம்மதத்தைப் பெற வேண்டும் என்பது. வனவாசத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்

ஏழை ராமனை விட்டுவிட்டுச் சம்பத்தும் சக்தியும் வாய்ந்த தன்னிடம் சந்தோஷமாகச் சீதை வந்துவிடுவாள் என்றும், அதுவே ராமனுக்குச் சரியான அவமானமுமாகும் என்றும் ராவணன் எண்ணினான். தான் கண்ட மற்ற ஸ்திரீகளைப் போல் சீதையும் இருப்பாள் என்று எதிர்பார்த்தான்.

இலை முன் உட்கார்ந்த சந்நியாசி கூச்சமில்லாமல் சீதையின் அழகைப் புகழ்ந்து பேசினான்.

''நீ யார்? மிருகங்களும் ராக்ஷசர்களும் நிறைந்த இந்தப் பயங்கரமான காட்டில் தனியாகவா இருக்கிறாய்?'' என்று கேட்டான்.

ஆசார முறைப்படி செய்ய வேண்டிய உபசாரத்தைச் செய்து கொண்டும் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டும் வந்தாள். ஆயினும் ராஜகுமாரர்கள் சீக்கிரம் வரமாட்டார்களா என்று வாயில் பக்கம் பார்த்தவண்ணமாகவே இருந்தாள்.

அரக்கன் மெள்ள மெள்ளத் தான் யார் என்பதைச் சொல்ல ஆரம்பித்தான். தன் குலத்தின் பெருமையை எடுத்துச் சொன்னான். தன் சக்தி, தன் ஐசுவரியம் இவற்றையெல்லாம் சொன்னான். தன்னுடைய பிரதாபத்தைச் சொல்லி ராமனை இகழ்ந்து பேசினான்.

''எனக்கு மனைவியாவாய்; லங்கையில் சுகமாக இருக்கலாம், போவோம்'' என்று முடித்தான்.

இப்படி எதிர்பாராத சங்கட நிலை அடைந்ததும் சீதையானவள் கற்பின் சக்தியால் அபார தைரியமடைந்து, அரக்கனை லட்சியம் செய்யாமல், ''நீசனே! துஷ்டனே! உன் விநாசம் நெருங்கிற்று! நீ மடிவாய். விலகிப் போ. உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஆசிரமத்தை விட்டுப் போ!'' என்று சீறினாள்.

அரக்கனுக்குக் கடுங் கோபம் உண்டாகி விட்டது. மாறுவேஷம் நீக்கிவிட்டுத் தன் நிஜ ரூபத்தைத் தரித்துக் கொண்டான். அவள் தலைமயிரை ஒரு கையில் பற்றி மற்றொரு கையால் அவளைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வனத்துக்குள் வேகமாகச் சென்று ஆயத்தமாக இருந்த தேரில் சீதையைத் தூக்கியவாறு ஏறி ஆகாயத்தில் கிளம்பி விட்டான்.

''ஹா என் நாதனே! ராமா! எங்கே போய்விட்டாய்? லக்ஷ்மணா! தலைசிறந்த பக்தனே! பிடிவாதம் செய்து உன்னைத் துரத்தினேனே!'' என்று கதறிஅழுதாள். அரக்கன் அவளை அசையாமல் அழுத்திப் பிடித்துத் தேரை வேகமாகச் செலுத்தினான். கீழே காட்டில் உள்ள செடிகளையும் மரங்களையும் கூவிக் கூவி, ''ராமனிடம் சொல்லுங்கள்'' என்று சீதை கதறினாள்.

அப்போது ஒரு மரத்தின் மீது அரைத் தூக்கமாக உட்கார்ந்திருந்த ஜடாயு வேகமாகச் சென்றுகொண்டிருந்த ரதத்தைப் பார்த்தான். சீதையின் குரலைக் கேட்டு யார் என்று தெரிந்து கொண்டான். சீதையும் ஜடாயுவைக் கண்டாள்.

''நீ என்ன செய்வாய் பறவையே! லங்கேசன் என்னைத் தூக்கிச் செல்கிறான். இந்தக் கொடிய அரக்கன் எல்லா ஆயுதங்களோடும் இருக்கிறான். நீ எதிர்த்தால் உன்னைக் கொன்றுவிடுவான். உன்னால் என்னை மீட்க முடியாது. விஷயத்தையாவது ராமனிடம் சொல்!'' என்று அழுதாள்.

ஜடாயு தேரில் ராவணனைப் பார்த்து ''ஏ லங்கேசனே! நான் ஜடாயு, கழுகு ராஜன். நீண்ட நாள் உன்னைப் போல் நானும் அரசனாக வாழ்ந்தவன். தம்பி! தகாத காரியத்தைச் செய்யாதே! நில்! அரசன் என்று சொல்லிக் கொள்ளுகிற நீ இத்தகைய காரியத்தைச் செய்யலாகாது. பெண்களைக் காப்பதல்லவா அரசனுடைய கடமை? அதிலும் ராஜ ஸ்திரீயை இவ்விதம் செய்யலாமா? அழிந்து போவாய்! ஜாக்கிரதை! உடனே அவளை விட்டு விட்டுத் திரும்பிப் போ! அவனுடைய கோபப் பார்வையில் நீ சுட்டெரிந்து மாண்டு போவாய்! அவன் யாரென்று எண்ணுகிறாய்? விஷப் பாம்பை மடியில் கட்டிக் கொள்ளாதே. காலனுடைய பாசம் உன் கழுத்தின் மேல் விழுந்து உன்னை இழுத்துப் போக ஆயத்தமாக இருப்பதை நீ அறிவாய். துஷ்டனாக நடந்து கொள்ளாதே. தாங்காத பாரத்தைச் சுமந்து போகப் பார்க்காதே. விஷத்தைத் தின்று பிழைக்கப் பார்க்காதே. நான் கிழவன்; நீ யுவன். கவசம் பூண்டு தேரும் வில்லுமாக இருக்கிறாய். ஆயினும் என் கண் முன்னால் நீ வைதேகியை எடுத்துப் போக விட மாட்டேன். ராமன் இல்லாத சமயமா சீதையை எடுத்துப் போகிறாய்? ராமன் பேரில் உனக்குக் கோபம் இருந்தால் நின்று ராமனுடன் போர் செய். உனக்கு அந்தத் தைரியமில்லை என்பது எனக்குத் தெரியும். கோழையே! இதோ நான் இருக்கிறேன். இறங்கி என்னுடனாவது போர் செய். நான் உயிருடன் இங்கே இருக்க நீ ராமன் மனைவியைத் தூக்கிப் போக முடியாது. ரதத்திலா இருக்கிறாய்? தப்பலாம் என்று எண்ணுகிறாயா? பார், உன் தலைகள் பனம் பழம்போல் கீழே உதிர்ந்து விழப் போகின்றன. ஓடாதே, நில்!'' என்றான். (தொடரும்)

அத்தியாயம் மூன்று

"ஓ, இதுவா? நான் பின் சக்கரமாக்கும்னு நினைச்சுக்கிட்டேன்!'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்ன அருணகிரி, ''வெய்யில்லே நிக்கிறீங்களே? அப்படிப் போய் நிழல்லே நில்லுங்க! இதோ, ஒரு நிமிஷத்திலே காத்து அடிச்சுக் கொடுத்திடறேன்!'' என்றவாறு அவளிடமிருந்து சைக்கிளை வாங்கி ஸ்டாண்டு போட்டு நிறுத்தினான். பிறகு, அதன் முன் சக்கரத்துக் காற்றுக் குமிழில் துருத்தியின் ரப்பர்க் குழாயைப் பொருத்தி வெகு உற்சாகமாக எம்பி எம்பிக் குதித்துக் காற்றடிக்கலானான்.

அவன் சொன்னதைக் காதில் வாங்காதவள் போல் அலட்சியமாக இடது கையை இடுப்பில் ஊன்றிக் கொண்டு சற்றுப் பின்னால் நகர்ந்து நின்றாள் அவள்.

'ப்சிக்! ப்சிக்! ப்சிக்!'

கிராப்புக் கேசம் கலைந்து நெற்றியில் சரிய, அரைக் கை பனியன் விலாவுக்கு மேல் ஏற, உட்குழிந்து ஒடுங்கிய வயிற்றிலிருந்து கால்சராய் தளர்ந்து நழுவி இடுப்பெலும்பு மூட்டில் தொற்றி நிற்க, துருத்தியின் மிதி வளையத்தை இடது கால் முன் பாதத்தால் மிதித்துக் கொண்டு வலது காலைப் பின்புறமாக மடித்துத் தரையில் ஊன்றி எம்பி எம்பிக் குதித்து ஒரு தாளலயத்தோடு கைப்பிடியை இழுத்து அழுத்தி அவன் காற்றடிக்கும் 'அழகை'க் காண ரொம்ப வேடிக்கையாயிருந்தது.

உள்ளார்ந்த வியப்புடன் கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டு நின்ற அந்தப் பெண்



காணக் கிடைக்காத தங்கம்

ஜெகசிற்பியன்

ணுக்குக் குபீரெனச் சிரிப்பு வந்து விட்டது. சிரிப்பொலியை வெளியே விடாமல் சட்டென்று கைக் குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டு உள்ளுக்குள் பொங்கிப் பொங்கிச் சிரித்தாள். அப்படிச் சிரிப்பைஅடக்கி அமுக்கியதாலோ என்னவோ, அவளது முகம் குங்குமக் குழம்பு பூசினாற்போல் சிவந்து கண்களில் நீரும் துளிந்து விட்டது.

'ப்சிக்! ப்சிக்!'

தொய்ந்து கிடந்த முன் சக்கர டயர் காற்றைக் குடித்து 'விண் விண்' என்று விங்கிப் புடைக்க, அவ்வப்போது அதை விரல் நுனியால் தட்டி அழுத்திப் பார்த்த அருணகிரி ஓர் அளவை நிதானித்துக் கொண்டு துருத்திக் குழலைப் பிடுங்கிவிட்டு நிமிர்ந்தான். அவன் உடலெங்கும் வியர்வை வழிந்து கொட்டியது. 'வேலை முடிந்தது. எடுத்துச் செல்லலாம்' என்று சொல்வதுபோல் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

அவளும் முதன் முறையாக அவன் முகத்தை — அல்ல, அல்ல; அற்புதக் கவர்ச்சி பொருந்திய அவனுடைய கண்களை — நேருக்கு நேர் பார்த்தாள். மறுகணம், காணக் கிடைக்காத மகா அதிசயம் ஒன்றைக் கண்டு விட்டாற் போன்ற ஒரு பிரமிப்பு அவளது பார்வையில் ஒளி வீசியது. அத்துடன் இவ்வளவு நேரம் அவளிடமிருந்த அலட்சிய பாவம், செருக்கான பார்வை, குரூரமான நகைச்சுவை உணர்ச்சி எல்லாம் இப்போது போன இடம் தெரியாமல் ஒடுங்கி ஒருவித வியப்பார்ந்த வினயம் அவளைச் சூழ்ந்து கொண்டதாகவும் தோன்றியது.

சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்ட அவள் தன் பார்வையை வெடுக்கென்று வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, ''காற்றடிக்க அஞ்சு பைசாவா? பத்து பைசாவா?'' என்று கேட்டவாறு சைக்கிளில் தொங்கிய பிரம்புக் கூடையிலிருந்து மிட்டாய் டின் ஒன்றைத் திறந்து பத்து பைசா நாணயத்தை எடுத்து அவனைப் பார்க்காமலே நீட்டினாள். பதிலேதும் சொல்லாமல் காசை வாங்கிக் கொண்டான் அருணகிரி.

மறுகணம் அவள் வேகமாகச் சைக்கிளைத் தள்ளி ஏறி அமர்ந்து கொண்டு சிட்டாய்ப் பறந்து விட்டாள்.

''டேய், சோங்கு! மணி ஒன்னாச்சுடா! டிபன்பாக்ஸிலே சோறு வைச்சிருக்கிறேன்; போய்ச் சாப்பிடு!'' என்றான் ஏழுமலை.

அருணகிரிக்கு மதிய உணவு ஏழுமலையின் வீட்டிலிருந்தே வரும். இரண்டு பேருக்குமாகச் சேர்த்து ஓரே காரியரில் சோறு, குழம்பு, பதார்த்தங்கள் அனுப்பி வைக்கப்படும். முதலில் கடை முதலாளி ஏழுமலை சாப்பிடுவான்; பிறகு அருணகிரி போய் உண்பான். இதற்கென்று அவனுடைய கூலியில் பிடிப்பதில்லை; இலவசம்தான். ஆனால் வாரத்தில் ஆறு நாட்களும் சாப்பாடு கிடைக்கும் என்பது நிச்சயம் இல்லை. இரண்டொரு தினங்கள் ஏழுமலைக்கு மட்டுமே வரும். அந்த நாட்களில் அவன் இவனுக்கு நாலணா கொடுத்து ஹோட்டலில் நாஸ்தா பண்ணிக் கொள்ளச் சொல்லி விடுவான்.

இரட்டைப் பின்னல்காரி சைக்கிள் ஓட்டிச் செல்லும் அழகை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அருணகிரி, ஏழுமலையின் குரல் கேட்டுச் சட்டென்று திரும்பி,



''இதோ வர்றேம்பா!'' என்றவாறு தெருக் குழாயடிக்கு ஓடி முகம் கை கால்களைக் கழுவிக் கொண்டு வந்து சாப்பிட உட்கார்ந்தான்.

பத்தே நிமிடங்களில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்துவிட்ட அவன் உற்சாகத்தோடு மீண்டும் வேலையில் இறங்கியதைக் கண்ட ஏழுமலைக்கு உள்ளூறக் கொஞ்சம் வியப்பாயிருந்தது. 'பையன் இன்றைக்கு ரொம்பச் சுறுசுறுப்பாய் இருக்கிறானே, என்ன சமா





சாரம்?' என்று தனக்குள் எண்ணியவனாய், "டேய், சோங்கு! காக்கா கடைக்குப் போய் ஒரு கட்டு காஜா பீடி வாங்கிக்கிட்டு வாடா!" என்று விரட்டினான்.

சைக்கிள் சக்கரம் ஒன்றில் உடைந்து போய் இருந்த ஸ்போக்ஸ் கம்பிகளை எடுத்துவிட்டு வேறு புதிய கம்பிகள் பொருத்திக் கொண்டிருந்த அருணகிரி அந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு எதிர்ச் சாரியிலிருந்த 'பங்க்' கடையை நோக்கி விரைந்தான்.

"ஏண்டா, தம்பி! உன் அக்கா இங்கே வந்திச்சே, பார்த்தியா?" என்று கேட்டான் அந்தப் பங்க் கடைக்காரக் காக்கா.

"இல்லையே! எப்ப வந்தது?" என்று சற்றே வியப்புடன் விசாரித்தான் அருணகிரி.

"பந்தரண்டரை மணி இருக்கும். அப்ப நீ கடையிலே இல்லா."

"ஓ.... ஆமாம்; நான் வெளியே போயிருந்தேன்!" என்று புன்முறுவலுடன் சொன்னான் அருணகிரி.

தன் அக்கா தன்னை 'வேலை மேல்' பார்க்க வருவதானால் நேரே சைக்கிள் கடைக்கு வரமாட்டாள் என்பதும், இந்தப் பங்க் கடையண்டை வந்து ஒதுங்கி நின்று கொண்டு, தானே அவளைப் பார்த்துவிட்டு வரும்வரையில் காத்திருப்பாள் என்பதும் அவனுக்குத் தெரியும். தன் கடை முதலாளி ஏழுமலையின் முசுடு குணத்தை நன்கு புரிந்து வைத்திருப்பதாலேயே அவள் அங்கு வருவதில்லை என்பதையும் அவன் அறிவான். எனவே, "என்ன சமாசாரம் காக்கா? எதுக்கு வந்ததாம் என் அக்கா?" என்று சாதாரணமாகக் கேட்டான்.

"அந்த அம்மே வேலை பார்க்கிற விட்டு எஜமானரோட மகளுக்குச் சாப்பாடு எடுத்துக்கிட்டுப் பள்ளிக்கூடத்துக்கு வந்ததாம். ஓர் ஐஞ்சு நிமிஷம் லேட்டாயிடவே அந்தப் பொண்ணு சாப்பாடு வேண்டாம்னு சொல்லிட்டு வீட்டுக்கே புறப்பட்டுப் போயிடுச்சாம். பணம் காசு மெதப்பிலே செல்லமா வளர்ற பொண்ணு யிருக்கும்; அதான் அவ்வளவு திமிரு! பாவம், அந்த அம்மே பயந்துக்கிட்டே திரும்பிப் போகுது எசமானியம்மா திட்டுவாங்களேன்னு! போற வழியிலே உன்னைப் பார்த்துப்பிட்டுப் போகலாம்னு இங்கே கொஞ்ச நேரம் நின்னுது. நீ கடையிலே இல்லான்னு தெரிஞ்சுக்கிட்டுப் பேசாம கிளம்பிப் போயிடுச்சு."

இந்த விவரங்களைக் கேட்டு அப்படியே மரமாய் நின்றான் அருணகிரி.

சற்று முன் அவனிடமிருந்த உற்சாகம், மகிழ்ச்சி எல்லாம் இப்போது போன இடம் தெரியாமல் மறைந்து போயின. கடைக்காரனிடம் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் ஏழுமலையின் கணக்கில் ஒரு கட்டுப் பீடி வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான்.

அதன் பிறகு அவனுக்கு வேலையில் கவனம் ஓடவில்லை. மந்தமாகவும் சோர்வாகவும் காரியங்களைக் கவனிக்கலானான். அரை மணி நேரத்தில் முடியக்கூடிய அந்த வேலையை இரண்டு மணி நேரம் இழுத்துப் பறித்துச் செய்து கொண்டிருப்பதைக் கவனித்த ஏழுமலை அவனை வாய்க்கு வந்தபடி அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தான். இதெல்லாம் சகஜமான அர்ச்சனைகளே. அதனால் அந்த வசவுகளையெல்லாம் அவன் அவ்வளவாகச் சட்டை பண்ணிக் கொள்ளவில்லை.

மாலை மணி ஐந்து ஆகியது.

வழக்கம்போல் கொஞ்சம் 'தண்ணி' போட்டுச் சுதி ஏற்றிக் கொண்டு கால் மேல் கால் போட்டவாறு அரைக் கண் மூடிய நிலையிலே சுவர் மீது சாய்ந்த ஏழுமலை பீடி பற்ற வைக்கத் தீப்பெட்டியைத் தேடினான். கிடைக்கவில்லை. "ஏண்டா சோங்கு! இங்கே பயர் பாக்ஸ் இருந்துச்சே எங்கேடா?" என்று அதட்டிக் கேட்டான். "நீ 'தம்' அடிக்க எடுத்துக்கிட்டுப் போயிட்டியா?"

"இல்லேப்பா!" என்றவாறு எழுந்து வந்த அருணகிரி, ஏழுமலையின் மடியிலேயே கிடந்த தீப்பெட்டியை எடுத்து அவன் கையில் கொடுத்தான்.

பீடியைப் பற்ற வைத்துப் பல்லில் கடித்துக் கொண்டு வெகு சுவாரசியமாகப் புகைக்க ஆரம்பித்த ஏழுமலை, யாரோ பெரிய மனிதர் ஒருவர் வருவதைப் பார்த்துவிட்டவன் போல் வாயிலிருந்த பீடியை இடது கையால் வெடுக்கென்று பிடுங்கித் தரையில் தேய்த்து அணைத்து விட்டு, விலகிக் கிடந்த தன் லுங்கியை அவசரமாக இழுத்துவிட்டுச் சரிசெய்து கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். இதைக் கவனித்த அருணகிரியும் பரபரப்புடன் திரும்பிப் பார்த்தான்.

டைட் பாண்டும், டெரிலின் ஸ்லாக்குமாக வெகு நாகரிகக் கோலத்துடன் விளங்கிய ஓர் இளைஞன் சைக்கிளை விட்டு இறங்கி, அமர்த்தலாகக் கடைக்குள் வந்தான்.

அவனுக்கு அருணகிரியின் வயசுதான் இருக்கும். — நல்ல வாட்டசாட்டமான வளர்ச்சி. மாநிறமாக இருந்தாலும் கவர்ச்சியான முகம்.

''வா, தொரே! இப்பத்தான் காலேஜிலேயிருந்து வர்றயா?'' என்று ஒருவிதப் பணிவு கலந்த அன்புடன் கேட்ட ஏழுமலை தரையில் குந்துக் காலிட்டு உட்கார்ந்தவாறே சுவரில் மடக்கிச் சாத்தியிருந்த ஒரு ஸ்டீல் நாற்காலியை எடுத்துப் பிரித்துப் போட்டான்.

டைட்ஸ் அணிந்திருந்த அவ்விளைஞன் உட்காரத் தயங்குவது போல் சுற்று முற்றும் பார்த்துவிட்டுப் பிறகு நாற்காலியின் முனையில் நாசுக்காக அமர்ந்து கொண்டான்.

பாசமும் பெருமையும் கண்களில் ஒளிர அவனை ஏறிட்டுப் பார்த்த ஏழுமலை,''எதனாச்சும் டிபன் சாப்பிடறயா, தொரே? வாங்கியாறச் சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

''வேண்டாம்பா! நான் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுக்கிறேன்'' என்றான் அந்த இளைஞன் அமைதியாக.

''பின்னே போம்மா கண்ணு! பத்திரமாப் போ!'' என்று சொன்ன ஏழுமலை கல்லாப் பெட்டியின் டிராயரைத் திறந்துவிட்டு, ''கைச் செலவுக்குப் பணம் வேணும்னா எடுத்துக்க தொரே!'' என்றான்.

இளைஞன் குனிந்து மூன்று ஒற்றை ரூபாய் நோட்டுக்களை எடுத்துத் தன் ஜேபியில் போட்டுக் கொண்டு, ''வரேம்பா!'' என்றவாறு எழுந்து வெளியே வந்து வாடகைக்கு விடுவதற்கென ஸ்டாண்டில் நிறுத்தியிருந்த சைக்கிளில் புதிதாக ஒன்றைப் பார்த்து எடுத்து அதில் ஏறிச் சென்று விட்டான்.

இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த அருணகிரி தனக்குத் தானே ஏதோ முணுமுணுத்து மெல்லப் பெருமூச்சு விட்டான்.

''டேய் சோங்கு! நம்ம புள்ளாண்டான் கொண்டாந்து விட்டுட்டுப் போன சைக்கிளை நல்லாத் துடைச்சு எண்ணெய் போட்டு வையுடா!'' என்று உத்தரவிட்டான் ஏழுமலை.

''ஆகட்டும்பா.''

அந்தப் பிள்ளையாண்டான் வேறு யாருமல்ல; ஏழுமலையின் மூத்த மகன் தான் அவன். பெயர் செல்லத்துரை. அவனுக்குப் பின்னல் இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். முதல் பெண்ணுக்குக் கல்யாணமாகி விட்டது. இளைய பெண்ணுக்குக் கால் கொஞ்சம் ஊனம். விந்தி விந்தி நடப்பாள். அதனால் இன்னமும் மாப்பிள்ளை கிடைக்காமல் வீட்டோடு கிடக்கிறாள்.

ஏழுமலைக்குப் படிப்பு வாசனை அவ்வளவாகக் கிடையாது. இரண்டாம் வகுப்போ, மூன்றாம் வகுப்போ தான் படித்திருக்கிறான். அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் இவ்விஷயத்தில் அவனுக்குப் பின்னல் நிற்பவர்களே. இந்தக் குறையைத் தன் பிள்ளையைக் கொண்டு எப்படியும் போக்கி விடவேண்டும் என்பது அவனுடைய ஒரே இலட்சியக் கனவு. இதற்காக அவன் எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருந்தான். ஆனால் அந்தக் கனவு நனவாகும் என்று அவனுக்கு முதலில் நம்பிக்கை இல்லை. அவ்வளவுக்கு அவனுடைய பிள்ளையாண்டான் படிப்பில் 'உலக்கைக் கொழுந்தாக' இருந்தான். எப்படியோ எட்டாம் வகுப்பு வரை நெட்டித் தள்ளிக் கொண்டு வந்துவிட்டபின், ஆச்சரியப்படக்கூடிய விதமாகப் பையன்

இதுவரை.........

பெங்களூரில் ஒரு சைக்கிள் கடை. அதன் முதலாளி ஏழுமலை. அவன் கீழ் வேலை கற்றுக் கொள்ளும் இளைஞன் அருணகிரி. ஏழுமலை கண்டிப்புப் பேர்வழி. கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவான். கூலியும் அதிகமாகக் கண்ணில் காட்ட மாட்டான். சிறு தவறுகளுக்குக்கூடக் கோபிப்பான். அடித்தும் விடுவான். இப்படிப் பட்டவனிடம் வரும் யார்தான் அதிக நாள் வேலையில் நீடிப்பார்கள்? அருணகிரி நீண்ட காலமாக அந்தச் சைக்கிள் கடையில் வேலை பார்ப்பது ஏழுமலைக்கே அதிசயமாயிருக்கிறது.

ஒரு நாள் ஒரு சைக்கிளில் பேரிங்கேல்லாம் மாற்றிய அருணகிரி சைக்கிள் சரியாக இயங்குகிறதா என்று பரிசோதித்துப் பார்க்க அதனை ஓட்டிச் சென்றான். ஏற்றமான பாதை. சிரமப்பட்டு பெடலை மிதித்ததால் அவன் தலை குனிந்திருந்தது. கவனம் சக்கரத்தின் இயக்கத்தில் இருந்தது.

சைக்கிள் தன் மீது மோதிவிடக் கூடாதே என்று சட்டென்று ஒதுங்கிய கூடைக்காரி ஒருத்தி நடைபாதை மேட்டில் கால் இடறி விழுந்து விட்டாள். அதே சமயம் எதிரில் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்த நவநாகரிகத் தோற்றமுடைய இளம் பெண் ஒருத்தியும் சட்டென்று பிரேக் போடவே நிலை தடுமாறி விழுந்துவிட்டாள்.

அப்பெண்ணின் சைக்கிளை நேராக்கிக் கொடுத்துக் கீழே விழுந்த புத்தகங்களையும் பொறுக்கி எடுத்துத் தந்து அனுப்பி வைத்தான் அருணகிரி. ''செம்மறி ஆடு மாதிரி தலையைக் குனிஞ்சுக்கிட்டா வரது? கத்தி நான்சென்ஸ்!'' என்று அவள் கோபக் கடுப்புடன் கூறிச் சென்றாள்.

அடுத்தாற்போல் அருணகிரி கூடைக்காரிக்கு உதவினான். ''என்னாலே உங்களுக்கு வீணு திட்டுக் கிடைச்சது, மன்னிச்சுடுங்க'' என்று கூறி அவள் விடுவிடென்று நடந்தாள்.

இரு பெண்களின் தோற்றம் குணம் இவற்றில் உள்ள வேறுபாட்டினை நினைத்துக் கொண்டே கடைக்குத் திரும்பி வந்து சேர்ந்தான் அருணகிரி. அங்கே தன் சைக்கிளுக்குக் காற்றடித்துக் கொண்டு போகக் காத்திருந்தாள் அந்த நவநாகரிக நங்கை.

படிப்பில் ஆர்வமும் அக்கறையும் காட்டத் தொடங்கினான். இதையறிந்த ஏழுமலைக்குச் சந்தோஷம் பிடிபடாமல் போயிற்று. பிள்ளையை 'ஏந்து ஏந்து' என்று ஏந்தலானான். அவனை 'டா' போட்டுக் கூப்பிடுவதையும் நிறுத்திக் கொண்டு, 'அப்பா, ஐயா, கண்ணு, ராஜா, துரை' என்றெல்லாம் மரியாதையாக விளிப்பதை வழக்கமாக்கிக்கொண்டான். பிறரிடம் தன் பிள்ளையைப் பற்றிப் பேசும்போது, 'அவர், இவர்' என்றே குறிப்பிடுவான். அப்புறம் செல்லத்துரை பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுக் கல்லூரிப் படிப்பில் கால் வைத்த அன்றே, அவன் ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணிக் கலெக்டராகிவிட்டது போல் மனம் பூரித்துப் போனான் ஏழுமலை. அந்தக் கற்பனைப் பெருமையை நாளாவட்டத்தில் நிஜம் என்று பாவித்துக்கொண்டதாலோ என்னவோ, இப்போதெல்லாம் அவனிடம் இவனுக்கு ஒருவித பயபக்தியே ஏற்பட்டுவிட்டது. அதனால் அவனை நேருக்கு நேர் முகம் பார்த்துப் பேசவும், அவன் எதிரில் நாற்காலியிலே உட்காரவும் கூட அஞ்சினான்; கூச்சப்பட்டான்.

இப்படி ஏழுமலை தன் பிள்ளையிடம் நடந்து கொள்வதைப் பார்க்கும்போதெல்லாம் அருணகிரிக்குச் சிரிப்பு சிரிப்பாய் வரும்; விநோதமாகவும் இருக்கும். ஆனால் இப்போது தன் மகனின் எதிரில் பீடி குடிக்கக் கூட அஞ்சி அதை அணைத்து மறைத்துப் போட்டதைக் கண்டு அவனுக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது.

'என்ன இது வேடிக்கை! தான் பெற்ற பிள்ளைக்கே தகப்பன் இவ்வளவு மரியாதை கொடுக்கிறானே? தன் மகன் அதிகம் படித்து விட்டான், அறிவாளியாகி விட்டான் என்ற பிரமிப்பில் கிளர்ந்த தாழ்வு மனப்பான்மையினால் இவ்வாறு நடந்து கொள்ளுகிறானா?'

அருணகிரிக்குத் திடீரென்று சிறு பிள்ளைத்தனமான ஓர் ஆசை பிறந்தது. தானும் படித்தவன் என்பதை இன்று ஏழுமலைக்கு எப்படியும் தெரிவித்து விட வேண்டும் என்ற ஆசையே அது. அவன் இவ்வாறு ஆசைப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

'நான் படித்தவன் என்பதைத் தெரிந்து கொண்டால் ஏழுமலை என்னை அசிங்கம் அசிங்கமாகத் திட்ட மாட்டார்; அடிக்க மாட்டார்; கேவலமான வேலைகளையெல்லாம் செய்யச் சொல்லி விரட்ட மாட்டார். எனக்கும் மரியாதை கொடுத்து அன்போடும் பண்போடும் நடந்து கொள்வார்.'

விர்ரென்று சுழன்று வந்த ஒரு ஸ்பானர் அருணகிரியின் முட்டிக் காலைப் பதம் பார்க்கவே, துடித்துப் பதறிப் பின்னால் திரும்பினான்.

"ஏண்டா சோமாறி! வேலை மேலே கெவனம் வைக்காம எங்கேடா பிராக் பார்த்துக்கிட்டு இருக்கிறே? அரப்பு அடிச்சுட்டுப் போறதுக்கா இங்கே வந்தே?" என்று கூவினான் ஏழுமலை.

திடுமென்று எழுந்து நின்ற அருணகிரி என்றுமில்லாத விரைப்புடன் தன் முதலாளியை வெறித்துப் பார்த்து, "ஏ, பீஸ்ட்! வொய் ஆர் யூ பீட்டிங் மீ? ஐ யாம் வொர்க்கிங், காண்ட் யூ ஸீ? நான்சென்ஸ்!" என்று அழுகையும் ஆத்திரமும் அடைத்த குரலில் அதட்டிக் கேட்டான்.

சுவரில் முதுகைச் சாய்த்துப் படுத்திருந்த ஏழுமலை ஏதோ மின்அதிர்ச்சியால் தாக்குண்டவன் போல் திடுமென்று நிமிர்ந்து உட்கார்ந்து பரபரப்புடன் கழுத்தை நீட்டி அவனை அதிசயமாக ஏறிட்டுப் பார்த்தான்.

முட்டியில் நன்றாக அடிபட்டு விட்டதால் வலி தாள மாட்டாமல் அருணகிரிக்கு அழுகையே வந்து விட்டது. இடது கையால் கண்களைத் துடைத்தவாறு குனிந்து முட்டியைத் தடவி விட்டுக் கொண்டான் அவன்.

தனக்கு ஏற்பட்ட வியப்பின் அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட ஏழுமலை, அசட்டுச் சிரிப்புடன், "என்னடா தம்பி சொல்றே? அடிபட்டுப் போச்சா?.... சும்மா அந்த ஸ்பானரைத் தூக்கிப் போட்டேன், அது உறைப்பா விழுந்திடுச்சாக்கும்! சரி, சரி; வேலையைப் பாரு!" என்று தாஜா செய்வது போல் குரலைத் தாழ்த்திச் சொன்னான்.

தன் முதலாளியின் இந்தக் குழைவான பேச்சைக் கேட்டதும் அருணகிரிக்கு வலியெல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது. அத்துடன் உள்ளூற ஒருவித அச்சக் குறுகுறுப்பும் அதைத் தொடர்ந்து வியப்பு உணர்ச்சியும் தோன்றி அவனைத் தலை குனிய வைத்தன. இந்தச் சைக்கிள் ரிப்பேர்க் கடையில் வேலைக்கு வந்த நாள் முதல் சற்று முன்வரை ஏழுமலை அவனிடம் இவ்விதமாகத் தணிந்தும் குழைந்தும் பேசியதை அவன் கேட்டதேயில்லை. எதிர்பாராத விதமாகத் தான் ஆங்கிலத்தில் பேசியதைக் கேட்டுத் தானும் படித்தவன் என்பதைப் புரிந்து கொண்டதாலேயே ஏழுமலையிடம் இத்தகைய திடீர்க் குழைவும் பணிவும் ஏற்பட்டன என்று எண்ணி மனத்துள் நகைத்தபடி தன் காரியத்தில் கவனமானான்.

(தொடரும்)



காலமெதுவாயினும் கோலாகலம் தரும் கோகா-கோலா!

ஒழிந்த நேரம்...உல்லாசப் பொழுது! அதை மேலும் இன்பமாகக் கழிக்க கோகா-கோலாவின் துணை [illegible] இன்றே! கோகா-கோலாவின் சுவை, உள்ளத்தைக் கிறுகிறுக்க வைக்கும் விறுவிறுப்பான சுவை... பருகப் பருகத் தெவிட்டாத [illegible]! கோகா-கோலா ...மீண்டும் கோகா-கோலா...மறுபடியும் கோகா-கோலா! உலகெங்கும் கோகா-கோலா அருந்துவோரின் எண்ணிக்கை பெருகி வருகிறது. ஏனெனில், கோகா-கோலாவைப் போல புத்துணர்ச்சியூட்டுவது வேறு எதுவுமே இல்லை!

Enjoy Coca-Cola

கோகா-கோலா, கோகா-கோலா கம்பெனியின் ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்.

CMCC-15-162 TM

மனைவி குழந்தைகளைக் கண்டிக்கும்போது கணவனும் அந்தச் சொல்லை மதிக்க-வேண்டும்.



முடியாது? முடியாது!

பெண்களால் முடியாது...!

திரு ஆர். பத்மநாபன்
அச்சக மானேஜர்

குழந்தையைத் தாலாட்டிக் கொண்டிருக்கும்போதே பெண்கள் தங்களுக்குள்ள அதிகாரத்தைச் சொல்லிக் காட்டுகிறார்கள்! எப்படி?

அழுகின்ற குழந்தையிடம்

அடிச்சாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்

என்கிறார்கள் இந்தப் பெண்கள்.

ஆக்கினை என்றால் உத்தரவு இடுதல். ஆக, அதிகாரம் செய்ய முடியாமல் பெண்களால் இருக்க முடியாது.

அன்றைய அல்லி ராணி முதல் இன்றைய இந்திரா காந்தி வரையில் எத்தனையோ பெண்கள் அதிகாரம் செய்வதைப் பற்றி அத்தியாயம் அத்தியாயமாக எழுதலாம்.

'அதற்குச் செலவு செய்யாதீர்கள்...இதற்குப் பணத்தைக் கொட்டாதீர்கள்' என்று கணவனுக்கு உத்தரவு இடுகிறாள் மனைவி.

கணவனிடம் அதிகாரம் செலுத்த முடியாவிட்டால், அதை வீட்டு வேலைக்காரர்கள் வேலைக்காரிகளிடம் காண்பிக்கிறார்கள் பெண்மணிகள்.

''காலம் மாறிண்டிருக்கு... பட்டணத்தில் வேலைக்காரிகள் நல்லபடியா நிடிக்க நிலைக்கிறது அபூர்வம்.... சிடுசிடுன்னு பேசி வேலை வாங்காதே'' எனச் சொன்னால்,

''இந்த விஷயத்தில் நீங்கள் தலையிடவேண்டாம்! உங்கள் ஆபீஸ் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்!'' என அதிகார தோரணையில் ஆணை பிறப்பிப்பார்கள்.

எத்தனை ஆண்கள் மனைவியின் வீட்டு அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுத் திண்டாடுகின்றனர்! தாயாருக்கு மாதா மாதம் பணம் அனுப்புவதைக்கூட மனைவியின் அதிகாரத்துக்கு உட்படுத்தி விடுகிறார்களே!

'தாய்க்குப் பின் தாரம்' என்பது அச்சமயத்தில் ரொம்பப் பேருக்கு மறந்துதான் போய் விடுகிறது!

திரு ஆர். வெங்கட்ராமன்
தொழிற்சாலை ஊழியர்

ராமாயணத்தில் வரும் கைகேயி என்னும் கதாபாத்திரம் நமக்கு எதை உணர்த்துகிறாள்? ராமாயண காலத்திலிருந்தே அதிகாரம் செய்யப் பெண்கள் முனைந்திருந்தார்கள் என்பதைத்தானே!

''வேலை முடிந்தவுடன் நேரே வீட்டுக்கு வந்து சேருங்கள். ஊரெல்லாம் சுற்றிவிட்டு 'லேட்'டா வரக்கூடாது!'' எனப் பெண்கள் உத்தரவிடுவதை அடிக்கடி பல இடங்களில் கேட்க நேருகிறது அல்லவா?

திரு என். எஸ். ராஜன்
பொறிஇயல் நிபுணர்

'தனக்கு உரிமை இருக்கிறது. அதைக் காட்டிக்கொள்ளாவிடில் தன்னை யாரும் மதிக்க மாட்டார்கள்' என்ற எண்ணத்தில்தான் பெண்கள் அதிகாரம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

பல குடியிருப்புக்களில் வீட்டுக்கார அம்மாளின் அதிகாரம் அளவுக்கு அதிகமாக இருக்கும். வீட்டைக் கட்டிய மகானுபாவர் சாதுவாக இருக்கலாம்! குடியிருப்பவர்களைப் பற்றிய குறைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார். அவர் கண்டும் காணாத மாதிரியே போய்விடுவார்.



அடுக்கடைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கக் காண்கிறோமே!

ஆனால், அந்த அம்மாள் குடித்தனக்கார வீட்டுப் பெண்களிடம் தன் அதிகாரத்தைப் பிரயோகிப்பாள். ''ஒரே குப்பையாக அடிக்கிறீர்களே வீட்டை; சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்பாள்.

'சரி' எனக் குடித்தனக்கார அம்மாள் ஒதுங்கிப்போனாலும் பிழைத்தது. ஒரு வார்த்தை பதில் பேசிவிட்டாலோ ''உங்களுக்கு இங்கே சௌகரியப்படாது!... இடத்தைக் காலி பண்ணுங்கள்!'' என்று சொல்லுவாள் வீட்டுக்கார அம்மாள்.

''நான் சொன்னதைக் கேட்கப் போகிறீர்களா இல்லையா?'' என்று கணவனிடம் பேச்சை ஆரம்பிக்காத மனைவியைக் காண்பது அபூர்வம்!

திரு பார்கவான்

தினசரியில் விளம்பர இலாகா

குழந்தைகள் நல்வழியில் செல்ல, 'அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே' எனத் தாயார் சொன்னால் அதைத் தகப்பனும் ஏற்கத்தான் வேண்டும்.

மனைவி தன் குழந்தைகளைக் கண்டிக்கும் போது கணவனும் அந்தச் சொல்லை மதிக்கத் தான் வேண்டும். குடும்பத் தலைவன் குடும்பத் தலைவியை மதிக்காவிடில், குழந்தைகள் தாயாரை மதிக்காதே!

திரு வி. கிருஷ்ணன்

ஸ்டுடியோ நிர்வாகி

ஒரு வீட்டில் நியாயமான காரியத்தைச் செய்யப் பெண் அதிகாரம் செய்ய ஆரம்பித்தால் கணவன் விட்டுக் கொடுக்கலாம். எல்லாவற்றுக்கும் ஆண் 'ஆமாம்' போட்டால் அவன் நிலை பரிதாபத்துக்குரியது.

ஆண்களால் முடியாது...!

ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி சாஸ்திரி

வீடு கட்டிக் கொண்டே இருக்கும்போது திடீரெனச் செலவுகள் வளர்ந்து திட்டமிட்டதைவிட அதிகச் செலவாகும்போல் தெரிந்தால் ஆண்கள் அங்கு வதில்லை. நண்பர்களிடமோ, வேறு லேவாதேவி செய்யும் இடங்களிலோ துணிவுடன் கடன் வாங்கி வந்து விடுவதைச் சர்வ சாதாரணமாகப் பார்க்கிறோம்.

பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது, தேதி நெருங்கிவிட்டது என்றால் தயக்கமின்றி யார் மூலமாவது ஐயாயிரம், பத்தாயிரம் புரட்டிக் கல்யாணத்தை நடத்தி விடுகிறார்கள்.

ஸ்ரீமதி சாவித்திரி ராஜன்

வாங்கும் சம்பளம் போதாமல் இருப்பதால் நண்பர்களிடம் கடனாக ரூபாய் வாங்குபவர்கள் இருக்கிறார்கள். குடும்பச் செலவைச் சமாளிக்க இப்படி நேரிடுவது உண்டு. ஆனால் கடன் வாங்காமல் குடும்பத்தை நடத்த முயலாமலே அலட்சியமாயும் சர்வ சாதாரணமாயும் கடன் வாங்கும் ஆண்கள் உண்டு.

மனைவிக்குத் தெரியாமல் கடன் வாங்கிச் செலவு செய்பவர்களும் இருக்கிறார்கள்.

கல்யாணமான புதிதில் மனைவியை மகிழ வைக்க வேண்டும் என்பதற்காகப் பரிசுப் பொருள்கள் வாங்கி வருவார்கள். ''வரும் போது கடையில் பார்த்தேன்...இந்த டாய்லட் செட் எப்படி?'' என்பார்கள்.

''நன்றாயிருக்கிறதே...!'' என்று சொல்லி விட்டால் போதும். தொடர்கதை போலப் பல பொருள்கள், உடைகள் இப்படி வந்து கொண்டே இருக்கும். ரொம்ப நாளைக்குப் பிறகுதான் தெரியும் அவ்வளவும் கடனுக்குக் கடையில் வாங்கியவை என்று!

ஸ்ரீமதி பத்மா கிருஷ்ணன்

பெண்கள் கடன் வாங்குவது என்பது சொற்பமான பொருள்களைத்தான். தட்டுப்பாடு ஏற்பட்டால் காப்பிப் பொடி, சர்க்கரை இப்படி ஏதாவது அக்கம் பக்கத்து வீட்டிலிருந்து வாங்கி வருவோம். அதுவும் ஒரு கரண்டி அல்லது ஒரு கப் அளவுதான்.


ஆனால் ஆண்கள் பெரிய அளவில் கடன் வாங்கத் தயங்குவதே யில்லை. 'கிரடிட்' பில் போடு என்று கூசாமல் சொல்பவர்கள் ஆண்கள்.

தொழில் வர்த்தக ரீதியில் தமது திருப்பித் தரும் சக்தியைச் சரியானபடி உணர்ந்து கடன் வாங்கினால் பரவாயில்லை. ஆனால் மத்தியதர வகுப்பினர் எவ்வளவு பேர் சினிமாவுக்கு, ரேஸுக்கு என்று கடன் வாங்கி வாங்கி இறுதியில் அதன் சுமை தாங்காமல் சீரழிகிறார்கள்! கட்டிக்காரனைக் கண்டு பதுங்குவோர்தான் எத்தனை எத்தனை பேர்! அடகுக் கடைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவதைப் பார்க்கிறோம். கண்மண் தெரியாமல் இப்படிக் கடன் வாங்கும் பெண்களைச் சாதாரணமாக யாரும் சந்தித்திருக்கவே முடியாது. ஆண்களுக்கே கைவந்தகலை(!)இது.

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**

ஐந்து வருட நீண்ட பாதை

ஸ்ரீமதி அம்ருதா ப்ரீதம்



அவன் உள்ளத்தில் பலப் பல நினைவுகள்; தேனடை வைத்தமாதிரி! தேனீக்கள்போல் எண்ணங்கள் பறந்து வந்து மொய்த்தன; விந்தையான நறுமண மலர்களை நுகர்ந்தன; இனிய மதுவைச்சேகரித்தன.

பல முறை அவன் எண்ணங்களைக் கைவீசிக் கலைத்தான்; விரட்டினான். எண்ணங்கள் சேமித்து வைத்திருந்த மதுவினும் இனிய தேனைப் பருகினான். பல முறை எண்ணங்களும் தேனீக்களைப் போலவே கொட்டின. கொட்டுவாயைத் தேய்த்துக் கொடுக்கை அகற்ற முயன்றான்; வேதனையைக் குறைக்க முயன்றான். ஆனாலும் சில கொட்டுக்கள் ஆழமாகப் பதிந்து வேதனையைக் கொடுத்தன; கொட்டு வாயில் எரிச்சல் தணியவில்லை. வீங்கிச் சிவந்தது கொட்டுவாய். சில தினங்களுக்கு முன்பு அப்படியொரு கொட்டு கொட்டி விட்டது எண்ணமென்கிற தேனீ. அதன் வேதனை கிறிஸ்துமஸ் பெரு நாள் வரைக்கும் வருத்திக் கொண்டிருந்தது.

'மாயா கோவஸ்கி ஏன் தற்கொலை செய்து கொண்டாள் ?' — கவிதையின் தலைப்பு இது.

மாயா கோவஸ்கி என்னும் கவிதைத் தேனை மாந்திக் கொண்டிருந்த பொழுது. ஒரு நாள் திடீரென்று இந்த எண்ணம் அவனைச் சரியாகக் கொட்டி விட்டது.

இதே போன்ற ஒரு நினைவு ஜெர்மனியில் இருந்த போதும் அவனைக் கொட்டியதுண்டு. ஓவியக்கூடம் ஒன்றில் அவன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் ஆளுயர உருவப் படத்தைக் கண்டான். அவன் கண்கள் கலங்கிச் சிவந்து விட்டன; நெஞ்சு வலித்தது. நினைத்துக் கொண்டான்: 'சுபாஷ் சந்திரபோஸ் இன்று உயிருடன் ஏன் இல்லை?'

இன்னும் அவன் கை 'விண் விண்' என்று தெறித்தது. வேதனையில் எண்ணிப் பார்த்தான்: 'ஏன்தான் அவன் தன் அறையின் ஒரு சாவியை அந்தப் பெண்ணிடம் கொடுத்தானோ?'

பல ஆண்டுகளுக்கு முன்பு. ஓர் இளம் பெண்ணிடம் அவன் தன் அறையின் மறு சாவியைக் கொடுத்து வைத்தான். அந்த நினைவு அவனைப் பலமுறை தேனீயாகக் கொட்டித் துளைத்திருக்கிறது.

அன்று அவன் ஏதோ கவிதை படித்துக் கொண்டிருந்தான். அலுவலகத்தில் பணி புரியும் பெண் ஒருத்தி வந்து கதவைத் தட்டி, படிக்க ஏதாவது புத்தகம் வேண்டினாள். இப்படி அவள் அடிக்கடி வருவதுண்டு. அன்

கதாசிரியை >

பஞ்சாபி மொழியிலே மிகச் சிறந்த எழுத்தாளர் என்று பெயர் பெற்றவர் ஸ்ரீமதி அம்ருதா பீரிதம். எழில்மிகு கவிதைகள் எழுதி எண்ணிறந்த இலக்கிய ரசிகர்களைத் தமக்கென்று தேடிக் கொண்டவர். கவிதை, கதை, நாவல் - எத்துறையிலும் பஞ்சாபி இலக்கியத்துக்கு முன்னோடியாகத் திகழ்கிறார். இலக்கிய உலகுக்கு இது வரை இவர் அளித்துள்ள கவிதைத் தொகுப்புகள் 14. நவீனங்கள் அதே அளவும் ஐந்து சிறுகதைத் தொகுதிகளும் வெளி வந்துள்ளன.

இங்கு ஒரு கவிதையின் பகைப்புலனிலே அற்புதமான கதையொன்றை அளித்துள்ளார். கதையும் கவிதையும் கைகோர்த்துச் செல்லும் அழகைக் காணுங்கள்.



றைக்கு அவன் தான் படித்துக் கொண்டிருந்த கவிதையைப் படித்துக் காட்டினான்.

''நான் திருமணம் செய்து கொள்ளட்டுமா? செய்து கொண்டால் நான் நல்லவளாகி விடுவேனா? ....''

இப்பொருளில் தொடங்கும் கவிதை அது.



அதைக் கேட்டு அப் பெண் அப்படியே ஆணி யடித்தாற்போல் நின்று கொண்டிருந்தாள். அவன் கவிதையைத் தொடர்ந்தான்:

''எனக்கு வெகு அருகில் அண்டை வீட்டுப் பெண் ஒருத்தி. உணர்வைப் புணருமாறு அவளுக்கு ஒரு நாள் உபதேசிப்பேன். அவள் சிந்திக்கிறாள், இனிய சிந்திப்பு, அவ்வுணர்விலே இன்பம் காண்பாள் அவள். உணர்வின் உயர்வை உணர்வாள் அவள்! அப்புறம்...? அவள் என்னைத் தன் வீட்டுக்கு அழைப்பாள்; தன் பெற்றோர்களிடம் என்னை அறிமுகம் செய்து வைக்க. அன்று நான் நன்றாகத் தலை வாரிச் சிறப்பாக உடை உடுத்துவேன்! 'டை' கட்டிக் கண்ணியமாய் இருப்பேன்! மாற்றான் வீட்டு அறையில் பழைய சாய்மானத்தில் சென்று அமர்வேன். அவ்வளவுதான்; அந்தக் குடும்பமே என்னைப் பார்க்கும்; கருத்துரைகளைப் பரிமாறிக் கொள்ளும்.''

அவனது பாடலைக் கேட்டு அந்தப் பெண் ஏதும் பேசவில்லை; சும்மா சிரித்து வைத்தாள். அவன் கவிதையை மேலும் தொடர்ந்தான் :

''பிறகு பெண்ணைப் பெற்றவர்கள் கூறுவார்கள்: 'சரி, நீ எங்கள் பெண்ணை மணந்து கொள்! இப்படிச் செய்வதால் நாங்கள் ஒரு பெண்ணை இழக்கவில்லை, ஒரு பிள்ளையை — மாப்பிள்ளையைப் பெறுகிறோம்.' பிறகு எங்கள் இருவருக்கும் திருமணம் நிகழும்.''

''அப்புறம்?'' கவிதை கேட்டவள் இப்படி ஒரு கேள்வி கேட்டாள்.

''அப்புறம் பெரியவர்கள் கூடுவார்கள். விருந்து மேசையை நோட்டம்விடுவார்கள். இனிய இன்பண்டங்களின் நறுமணம் அவர்கள் தொண்டையில் ஏறும். புசித்து மகிழ்ந்து பின்னர், மதுவை நாடி உதடுகளிலே நாவை ஓட்டுவார்கள்!''

கவிதையைக் கேட்டுப் பெண் 'பக பக' வென்று சிரித்து விட்டாள். ''அப்புறம் ?'' அவள் சிரிப்புக் கேட்டது.

''அப்புறம் பாதிரி என்னைப் பார்ப்பார். 'இத்தனை நாட்கள் இந்த ஆள் பெண் இல்லாமல் எப்படி இருந்தான்?' என்று எண்ணுவார். பிறகு என்னைப் பார்த்து 'இந்தப் பெண்ணை உன்னிடம் ஒப்படைக்கிறார்கள்; கண்ணியமாகக் கவனமாகப் பாதுகாப்பாயா?' என்று கேட்பார்.....''

கவிதை கேட்டுக் கொண்டிருந்த பெண் ஏதும் பேசவில்லை. 'உம்' மட்டும் கொட்டினாள். அவன் மேஜைப் பக்கம் கைநீட்டிப் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு கவிதையைப் படிக்கலானான் :

''அப்புறம் நான் புது மனையாட்டியை முத்தமிட முன்னேறுவேன். எப்படித் தெரியுமா? அறையின் ஒரு மூலையில் நின்றவர்கள் என்னை நெட்டிப் பிடித்து முன்னே தள்ளி விட்டாற் போலப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.''

கவிதையின் அடுத்த வரிகளை அவனால் சட்டென்று மொழிபெயர்க்க முடியவில்லை.

எனவே, அவன் மூலத்தை அப்படியே படித்து விட்டான் :

''அண்ட் இன் தேர் ஐஸ் யூ குட் ஸீ ஸம் அப்ஸீன் ஹனிமூன் கோயிங் ஆன்...''

('அவர்கள் விழிகளிலே விரசமான தொரு தேனிலவு நிகழ்வதை நீ காண்பாய்')

கவிதையைக் கேட்டு இப்பொழுது அவளது கருத்த விழிகளில் துயரச் சாயல் படிந்தாற் போலிருந்தது. அப்புறம்தான் அவனும் இந்தக் கவிதையை இப்பெண்ணுக்கெதிரே சொல்லியிருக்கக் கூடாது என்பதை உணர்ந்தான். அவன் கையிலிருந்த புத்தகத்தை மூடி மேஜை மீது வைக்கப் போன பொழுது அந்தப் பெண் முழுக் கவிதையையும் படித்துச் சொல்லுமாறு வற்புறுத்தினாள். அவளது கருத்த கண்களில் கண்ட துயரச் சாயல், கவிதையில் வரும் ஆணின் பூனைக் கண்ணிலும் தெறிப்பதை அவன் கண்டான். அதனால் அவன் கவிதையை மேலே படிக்கலானான்:

'' பிறகு நயாகரா நீர்வீழ்ச்சிக்குச் சென்று தேனிலவு கொண்டாடுவேன். எல்லாரும் தேனிலவுக்கு அங்குதானே போகிறார்கள்! ஹோட்டல் அறைகளில் எல்லாம் காதல் ஜோடிகளும், புதுமணத் தம்பதிகளும், மலர்களும், சாக்லெட்டுகளுமாகக் காட்சி தரும். தேனிலவு கொண்டாடும் அந்த இரவில் எல்லாருமே ஒரே மாதிரி தான் பேசுவார்கள். ஹோட்டல் சிப்பந்திகளுக்குக்கூடத் தெரியும். தங்கள் தங்கள் அறைகளில் ஒவ்வொருவரும் அந்த இரவில்....''

கவிதையைக் கேட்டுக் கொண்டிருந்த பெண் கலகல வென்று வாய் விட்டுச் சிரித்தாள். ''வெகு அழகாக எழுதப்பட்ட கவிதை'' என்றான் அவன். பிறகு புத்தகத்தில் குனிந்து கவியின் பெயரைப் படித்தான்: கரெகரி கார்ஸோ. பெண்ணின் அறிவில் அவன் கொண்டிருந்த அவநம்பிக்கை சிறிது நம்பிக்கையாக ஒளிர்ந்தது. எனவே, அவன் கவிதையை மேலும் தொடர்ந்தான்:

''அப்புறம் ஹோட்டல் சர்வரின் கண்களைச் சந்திக்கும் துணிவு எனக்கு ஏற்படாது. நான் அலறி விடுவேன்: என்னால் இப்படித் தேனிலவு கொண்டாடமுடியாது. நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அடியில் இருக்கும் இருட் குகைக்குள் புகுந்து கொள்வேன். நான் ஒரு தேனிலவுப் பித்தனுமி எங்கள் திருமணப் பிணைப்பைத் துண்டித்துக் கொள்ளக்கூட வழி தேடுவேன். ஒரு வழி காணுமல் அங்கிருந்து எழுந்திருக்க மாட்டேன்.''

இளம் பெண் மிகவும் கவனமாகக் கவிதையைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவன் பெண்ணை வேடிக்கையாகச் சீண்டினான்: ''வாட் உட் யூ லைக் டு வொர்ஷிப் எ ஸெய்ண்ட் ஆப் டைவோர்ஸ்?'' (விவாகரத்து என்னும் தேவதையை நீ வணங்க விரும்புவாயா என்ன?)

பெண் சிரித்தாள்; பதிலுக்கு அரைகுறையாக ஏதோ ஒரு வாக்கியத்தையும் சொன்னாள்: ''ஐ திங் ஐ ஆம் ஆல்ரெடி...'' பிறகு தன் வாக்கியத்திலிருந்து கவனத்தைத் திருப்பிக் கவிதையில் சிந்தனையைச் செலுத்தினாள்.

''மேலே கவிதையைப் படியுங்கள், கேட்க லாம்!'' என்றான்.

அவன் கவிதையைத் தொடர்ந்தான்:

''நான் கலியாணம் செய்து கொள்ள முடியாது; முடியவே முடியாது!... ஒரு வேளை நல்ல பணக்காரப் பெண்ணைக் கிடைத்தால், மென்மையான மஞ்சள் சிவப்பு மேனியழகியாகக் கிடைத்தால்... கறுப்புக் கையுறை அணிந்து என்னுடன் நகரத்தின் மிக உயரமான கட்டிடத்தின் மேல் மாடியில் நின்றுகொண்டு அவள் சிகரெட் பிடிப்பவளாகவும் ஜன்னல் வழி யாக நகர்ப்புறத்தைக் கண்டு ரசிப்பவ ளாகவும் இருந்தால்...முடியாது, முடி யாது. கனவுகளைச் சிறைப்படுத்தும் ஜன் னல் அருகே என்னால் அவளுடன் நிற்கவே முடியாது.''

கவிதையைக் கேட்கும்பொழுது பெண் ணின் முகத்தில் என்ன களை; என்ன கம்பீரம்!

''அடேடே! நான் காதல் விவகாரத்தை மறந்தே விட்டேனே! எனக்குக் காதல் கொள்ளத் துணிவு இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் காதல் என்பதைக் கொஞ்ச காலத்துக்குப் பிறகு, அறுந்த செருப்பைப் போல் இழுத்துக்கொண்டு தூக்கிக் கொண்டு போக வேண்டியிருக் குமே!....''

கவிதையைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்ணின் முகம் சட்டென ஏனோ வெளிறி யது. அவனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு மேலே தொடர்ந்தான்:

''வாழ்நாள் முழுவதும் தன்னந் தனி யாக ஓர் அறையில் வாழ்ந்து கிழவனாகி விடுவதில்தான் என்ன சுவை? உலகம் முழு வதும் விவாகம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக வாழ்வது; நான்மட்டும் தனிக்கட்டையாக, கட்டைப் பிரம்மச்சாரி யாக முடங்கிக் கிடப்பதா? என்னைப் போல் தனிமையில் வாடிக் குமுறித் தவிக்கும் பெண்ணைத்தான் நான் விரும்பு கிறேன். அவளைத்தான் நான் மணந்து கொள்வேன். அவள் காதல் தவம் கிடந்த புராணக் கன்னி 'ஹீ' என்பவளைப் போல் இருக்க வேண்டும்; 'ஹீ' தன் எகிப்தியக் காதலனுக்காக இரண்டாயிரம் ஆண்டுகள் அல்லவா காதல் தவம் கிடந்தாளாம்!...''

கவிதை கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண் கையை நீட்டிக் கவிதைப் புத்தகத் தைக் கேட்டாள். அவனும் கொடுத்துவிட் டான். ''இந்தக் கவிதையைக் கரேகரி கார்ஸோ யாருக்காக எழுதினாரோ?'' பெண் கேட்டாள்.

''தனக்காகத்தான் எழுதிக் கொண்டிருப் பான்'' என்று அவன் பதில் சொன்னான்.

''உங்களுக்காகவும் எழுதி யிருக்கலாம் போலத் தோன்றுகிறதே!'' இப்படிக் கூறிய வள் பக்கென்று சிரித்து விட்டாள்.

அவனுக்கும் சிரிப்பு வந்தது. ''ஐ டேக் இட் ஆஸ் எ காம்ப்ளிமெண்ட்!'' (இதை எனக்குப் பெருமை சேர்ப்பதாக எடுத்துக் கொள்ளு கிறேன்)

''பெருமை சேர்ப்பதுதான். ஆனால் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?'' சற்று நிறுத்தி இடைவெளி விட்டுக் கேட்டாள் அந்தப்



நிருபர்: 'சின்ன கார்' உற்பத்தி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பிரமுகர்: அதைப் பற்றி நினைக்க எனக்கு என்ன யோக்கியதை இருக் குக்கு?

பெண்: ''கவிதையில் வரும் பிரதான பாத் திரமாகவா? அல்லது அந்த எகிப்தியக் காதல னாகவா?''

''கவிதைப் பாத்திரமாகத்தான்'' என்று அவன் பதிலிறுத்தான்.

''ஏன், அந்த எகிப்தியக் காதலனாவதற் கென்ன?'' என்று பெண் மீண்டும் கேட்டாள்.

அவன் சிரித்து மழுப்பினான்: ''நான் அந்த எகிப்தியக் காதலனாக எப்படி ஆக முடியும்? அதற்கு 'ஹீ' மாதிரி ஒரு காதலி கிடைக்க வேண்டும். அவள் ஈராயிரம் ஆண்டு காலம் காத்துக் கிடக்க வேண்டும். சாத்தியமா?''


''ஏன் சாத்தியமில்லை? நான்தான் அந்த 'ஹீ' '' முதலில் மெதுவாகக் கூறியவள் மறு படியும் அழுத்தமாகச் சொன்னாள். ''ஐ எம் தட் ஹீ!'' கேலிக்காகச் சொல்லவில்லை. எனி னும் அவன் சிரித்துவிட்டான். சிரித்து மழுப்ப வேண்டிய சமாசாரம் இது என்று நினைத் தானோ என்னவோ? இருந்தாலும் சொல்லி வைத்தான்: ''நீ அந்த 'ஹீ'யாக இருப்பா யானால் நானும் அந்த எகிப்தியக் காதலனாக இருக்க முயல்கிறேன்.''


பெண் அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்க்க விரும்பினாள். அதனால் அவன் அந்தப் புத்தகத்தை அவளிடம் கொடுத்துவிட்டான். அந்தப் புத்தகத்தை வாங்கிக்கொண்டவள் பக்கத்தில் அடுக்கி வைத்திருந்த வேறு புத்த கங்களைப் புரட்டலானாள். அதனால் அவன் தன் அறையின் மறு சாவியை அவளிடம் கொடுத்தான். ''நான் அடுத்த வாரம் ஒரு மாத விடுமுறையில் வெளியூர் போகிறேன். நீ இஷ்டப்படும்போது இந்த அறையைத் திறந்து புத்தகங்களைப் படிக்கலாம். இந்தா, சாவி!'' என்றான் அவன்.

சாவியைப் பெற்றுக் கொண்டு அவள் போன பின் அவன் மிகவும் வருந்தினான். அவனுக்குத் தான் செய்தது சரியல்ல என்று தோன்றியது. 'மறு சாவியை அவளிடம்


வேலை நேரங்களிலும், விளையாட்டு வேளைகளிலும் அணிய வசதியான சிறந்த உள்ளாடைகள்


டான்டெக்ஸ்





பனியன்கள்,
வெஸ்ட்கள்,
அண்டர்பேன்ட்கள்





அலுவல் நேரத்தில், பிரயாணத்தின்போது, விளையாடும்பொழுது, வீட்டிலிருக்கையில் டான்டெக்ஸ் உள்ளாடைகள் அணியுங்கள்.

பனியன்கள், வெஸ்ட்கள், அண்டர்பேன்ட்கள் பல சைஸ்களில் பிரீச் செய்யப்பட்டும், பிரீச் செய்யப்படாமலும் கிடைக்கின்றன.

உயர்ரக எகிப்தியப் பஞ்சாலானவை. அதிக வெண்மையானவை. கச்சிதமாகப் பொருந்துபவை. தொய்ந்து கொடுக்கும் தன்மையுடையவை. நன்றாகப் பிடிப்பவை.

ஒரு முறை டான்டெக்ஸ் அணிந்தால் எப்பொழுதும் டான்டெக்ஸ் அணிய விரும்புவீர்கள்.

இன்றே டான்டெக்ஸ் உள்ளாடைகள் வாங்குங்கள்.

எல்லாப் பிரதான ஜவுளிக்கடைகளிலும் கிடைக்கும்.

பூரண விற்பனையாளர்கள்:
T. T. கிருஷ்ணமாச்சாரி & கம்பெனி, மதராஸ்-6

கொடுத்திருக்கக் கூடாது' என்ற முடிவுக்கு வந்தான். இனி வருந்திப் பயன்?

இது நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் அவன் தன் அறையின் சாவியை இன்றுவரைக்கும் அந்தப் பெண்ணிடமிருந்து திரும்பிப் பெறவில்லை. 'நம் அறைச் சாவியை அந்தப் பெண்ணிடம் நாம் எதற்காகக் கொடுத்து வைத்திருக்கிறோம்?' இன்று இந்த எண்ணம் அவனைச் சரியாகக் கொட்டிவிட்டது.

அவன் எழுந்து ஒரு கோப்பை காப்பி தயாரிக்க விரைந்தான். ஆனால் ஒரு டம்ளர் தண்ணீரைச் சுடவைத்துக் காப்பிப் பொடி போட்டுக் கலக்கும் திராணியே அவனுக்கு இல்லை. அவன் கைகளை வீங்கி விட்டாற்போலிருந்தது. அது நள்ளிரவோ, பின்னிரவோ, எழுந்து கடற்கரைக்குப் போனால் என்ன என்று எண்ணினான். அவன் அறையிலிருந்து கடற்கரை தொலைவில் இல்லை. இருந்தாலும் அவன் கால்கள் எழும்ப மறுத்தன. இன்றையச் சிந்தனை எப்படிக் கொட்டிவிட்டது! 'எண்ணம் என்னும் தேனீ கொட்டவும் கொட்டுகிறது. இனிய தேனும் சேகரிக்கிறது' என்பது அவனுக்கு நினைவு வந்தது. அவன் தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஏற்பட்ட அறிமுக நாட்களை நினைவில் நிறுத்தினான். தேன் துளிகளையும் தேனீக்களின் கொடுக்குகளையும் தனித் தனியே பிரிக்கும் முனைப்பு அவன் நினைவில் இருந்தது.

முதன் முதலில் அந்தப் பெண்ணின் முகம் அவன் கண்களில் படவில்லை. குரல்தான் காதுகளில் பட்டது. அவன் பணி புரிந்த அலுவலகத்தில் ஆங்கிலோ இந்தியப் பெண்கள்தான் அதிகம். அடுத்தபடியாகக் குஜராத்திப் பெண்கள். பஞ்சாபிப் பெண் ஒருத்திகூட இல்லை. அவன் இங்கு பம்பாய்க்கு வந்ததிலிருந்து வேற்று மொழிகளிலேயே பேசிப் பேசி அலுத்துப் போனான். அலுவலகத்தில் ஆங்கிலமும் ஹிந்தியும் போதும். குஜராத்தியை அவன் பொழுதுபோக்காகக் கற்றுக் கொண்டான். ஆனாலும் தன் தாய்மொழி பஞ்சாபியில் பேச ஒருவராவது கிடைக்க மாட்டாரா என்று ஏங்கினான். அப்போதுதான் ஒருநாள் அவள் குரல் கேட்டது; பஞ்சாபிக் குரல். குரலைக் காணச் சென்றவன் உதட்டளவு உறவுக்கு முன்னேறி விட்டான்.

அவன் படுக்கையிலிருந்து எழுந்து ஜன்னலைத் திறந்தான். வெளியிருள்தான் அவன் கண்களில் பட்டது. வெறித்துப் பார்த்தான். ஒருவேளை கடந்த வருடங்கள் அவ்விருளில் உலாச் செல்வதைக் கண்டானோ?

''சாலைகள் இருந்த இடத்தில்தான் இருக்கின்றன; ஆனால் வழிப்போக்கர்கள்தான் போய் வந்து வண்ணம் இருக்கிறார்கள்.''

யோசித்துப் பார்த்தவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. வழிப்போக்கர்களும் நடக்கிறார்களே ஒழிய, எங்கும் போய்ச் சேருவதில்லை என்று அவனுக்குப் பட்டது.

அவனுக்குத் தன் பிள்ளைப் பிராயத்துச் சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அவன் தாயார் அடுப்படியில் உட்கார்ந்து ரொட்டி சுடும் நேரத்தில் அவன் இடுக்கியினால், தீ ஜுவாலையைப் பிடிக்க முயலுவான். 'இடுக்கியினால் எரியும் கரியைப் பிடிக்கலாம். தீயின் ஜுவாலையைப் பிடிக்க முடியாது!' என்று அவன் தாயார் சொல்லுவாள்.

ஆனால் அவன் கரித் துண்டத்தைப் பிடிக்க விரும்பியதில்லை; தீ ஜுவாலையைத்தான் பிடிக்க முனைந்தான்.

அந்தப் பெண்ணிடமும் அவன் தனது இந்த விருப்பத்தையேதான் சொன்னான்.

அவள் தன்னை அந்த அதிசயக் காதலி 'ஹீ'யாக, தன் காதலனுக்காக ஈராயிரம் ஆண்டுகள் காத்திருந்த ஹீயாகப் பறைசாற்றினாள். அதனால்தான் அவன் அந்தப் பெண்ணிடம் அப்படிச் சொல்லும்படியிருந்தது.

இந்த வார்த்தைகளை அவன் பஞ்சாபிப் பெண்ணிடம் மட்டும் அல்ல; பிறிதொரு சமயம் ஒரு ஜெர்மானியப் பெண்ணிடமும் கூடச் சொல்லியிருக்கிறான். சென்ற ஆண்டு அலுவலகத்தின் சார்பில் அவன் ஜெர்மனிக்குச் சென்றிருந்தபொழுது. அங்கே ஓராண்டு தங்கியிருந்தான். அப்பொழுதுதான் அந்த ஜெர்மன் யுவதி பழக்கமானாள்.

ஒரு நாள் இரவு அவளைத் தனிமையில் சந்தித்தான். மற்ற நாட்களைவிட அன்று அவனுக்கு அவளுடன் தனித்து இருந்ததில் தனி மகிழ்ச்சி. வெள்ளத்தில் பரிதவித்தவனுக்குக் கரை தட்டியது போல் இருந்தது. அவனுக்கு அவளுடைய பழக்கம். அவளைத் தீண்டித் தொட்டுப் பழகினான். கண்களை மூடித் தன்னை மறந்த நிலையில் அவளது செம்பழுப்பு நிறக் கூந்தல் கருமையாக மாறியதைக் கண்டான். அவன் உடல் விதிர் விதிர்த்தது. இந்த மாற்றம் எப்படி வந்தது? ஜெர்மன் தோழியுடன் உறவாடிக் கொண்டிருக்கும் போது, முன் பழகிய பஞ்சாபிப் பெண் நினைவுக்கு வந்து விட்டாளா? அவன் இங்கு வந்த போது அவள் நினைவாக ஏதும் கொண்டுவரக் கூட இல்லை. அப்படியிருந்தும் அவள் நிழல் தொடரக் காரணம்?

ஜெர்மனியிலிருந்து திரும்பி வந்த பிறகு, அங்கு நடந்ததை அந்தப் பெண்ணிடம் அவன் தெரிவிக்கவில்லை. தெரிவித்தால் பேச்சு வளரும், அதன்படி செயலும் மாறுபடும்; ஏன் இந்த வம்பு? மௌனம் அருமருந்து!

அவன் எந்தப் பெண்ணுடனும் எந்தத் தீர்மானத்துக்கும் வர ஒப்பவில்லை. வாய்த்த வரைக்கும் லாபம்.

திடீரென்று அந்த நீண்ட பாதை துண்டிக்கப்பட்டது. ஒரு நாள் அந்தப் பெண்ணே அவனிடம் சொன்னாள்: 'அவன் இல்லாத காலத்தில் மற்றொருவன் அவனைவிட இதமாக, ஒத்தவனாக இருந்தானாம்!' அவன் விக்கித்துப் போனான். கால்கள் நடுங்கின; நிலைகொள்ளவில்லை. காலடியிலிருந்த பாதை சட்டென்று விண்டுவிட்டாற் போலிருந்தது.

''ஆனால் என் அறையின் மறுசாவி...'' இந்த எண்ணம் இன்று தேனீயைப் போல் அவனைக் கொட்டத் துரத்துகிறது.

இருட்டில் ஜன்னல் பக்கம் நின்றுகொண்டு கையை வெளியே நீட்டித் துளாவினான், கெட்டுப் போன சாவியைக் கண்டுபிடித்து விடுபவன் போல.

''நான் ஏன் அந்தச் சாவியை அவளிடமிருந்து திரும்பிப் பெறக் கூடாது?'' அவன் கேள்வியே அவனைத் தேனீயாகத் துரத்தியது.

இருளையே அந்தப் பெண்ணாக உருவகப்படுத்திக் கொண்டான். துளாவிப் பார்த்

தான்; கைப்பிடிக்குள் கொண்டு வர லாவி லாவிப் பார்த்து ஏமாந்தான். எனினும் இருளோடு அவனை ஒப்பிட்டதில் அவனுக்குப் பரம திருப்தி. ஆத்திரத்தை இப்படிக் காட்டி விட்ட திருப்தி. ஏன் ஆத்திரம்? இன்னொருவனைப் பற்றி அவள் குறிப்பிட்டாளே என்பதற்காகவா? இன்னொருவன் குறுக்கிட்டால் என்ன மோசம்? அவன்தான் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்க வில்லையே!

அவனுக்குக் களைப்பு மேலிட்டாற்போல் இருந்தது. விடியும் வேளை. அடுக்களைக்குள் சென்று காஸ் அடுப்பைப் பற்ற வைத்துக் காப்பி தயாரித்தான். டிகிரிக் காப்பி. பாத்லேயர் என்பவர் காப்பியைப் பற்றிச் சிலாகித்தது நினைவு வந்தது. 'காஃபி இஸ் த ப்ளெஸிங் ஆஃப் காட்!' ஆண்டவனின் அருள் பிரசாதமாம் காப்பி!

கதவு திறக்கும் ஓசை கேட்டது.

அவன் திரும்பிப் பார்த்தான்! அந்தப் பெண் கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் வந்தாள். சாவி அவள் கையில் இருந்தது.

''இவ்வளவு விடியற்காலையில் இங்கு வருவானேன்?'' அவன் பெண்ணைப் பார்த்தான்; பிறகு ஜன்னல் வழியாக வெளிப்புறத்தைப் பார்த்தான்.

''ஐ ஆம் அஃப்ரைட்...'' பெண்ணின் குரல் தடுமாறியது: ''ஐ ஆம் அஃப்ரைட் இட் ஈஸ் டூ லேட்.'' (வெள்ளம் தலைக்குமேல் போய் விட்டதோ என அஞ்சுகிறேன் என்று பொருள்பட.)

அவள் மேலே ஏதும் பேசவில்லை. கதவுப் பக்கம் நின்று கொண்டிருந்தாள். அவனுக்கும் என்ன பேசுவதென்று புரியவில்லை. உள்ளே போய் அவளுக்குக் காப்பி தயாரித்துக் கொண்டு வர விரும்பினான். அதைத் தெரிவித்தபோது அவள் தலையசைத்து மறுத்தாள். ''நீங்கள் என்னை ஏவுவது வழக்கம். இன்றைக்கு ஏன்..?'' அவளால் பேசமுடியவில்லை.

சாவி இன்னும் அவள் கையில்தான் இருந்தது.

''இந்தச் சாவி...'' அவன் சாவியையும் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தான். ஆனால் சொல்ல நினைத்ததைச் சொல்லவில்லை.

''நான் இந்தச் சாவியை நம்பி இங்கே வரவில்லை. இந்தச் சாவிக்கு உரிய கையைப் பற்றிக்கொண்டுதான் இங்கு வந்தேன்!'' என்றாள் பெண். அவள் குரலில் அப்போது ஒரு நிதானம் இருந்தது. இனி அவள் தயங்காமல் பேசுவாள் என்பதையும் உணர்ந்தான்.

அவள் அவன் அருகில் வந்தாள். அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். வழிக் களைப்பைப் போக்கிக் கொள்ளுகிறாளோ? அவன் மேஜைப் பக்கம் கைநீட்டி சிகரெட்டை எடுத்தான். பற்ற வைத்துக் கொள்வதற்குள் அவள் அவன் கையைப் பற்றிவிட்டாள்.

இம்மாதிரி நேரங்களில், ''நிகோடினை இப்போது குடிக்கவேணுமா? என் உதடுகளிலேயேதான் நிகோடின் இருக்கிறதே!'' என்று அவள் கூறுவது வழக்கம். ஆனால் இன்று அப்படிச் சொல்லவில்லை. அந்தக் குரல் தானாகவே அவன் உள்ளத்தில் அலைமோதி ஒலித்தது. அவன் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''எனக்கு இப்போது சிகரெட்டின் நிகோடினே போதும்.''

அவள் இதயம் விம்மி அடங்கியது. ''நீங்கள் என்னை மன்னிக்கவே மாட்டீர்களா?''

''நீ எந்தத் தவறும் செய்திருப்பதாக நான் நினைக்கவில்லையே?''

''ஆனால் நீங்கள்? முன்பு மாதிரி இல்லையே. குறிப்பாக ஜெர்மனிக்குப் போவதற்கு முன்பு இருந்த மாதிரி இப்போது நீங்கள் இல்லவே இல்லை. நீங்கள் இல்லாத காலத்தில் நடந்ததைத் தெரிவிக்க வேண்டும் என்று தோன்றவே தெரிவித்து விட்டேன். ஆனால் நீங்கள்...?'' அவள் குரலில் களைப்பு மேலிட்டிருந்தது. பெருமூச்சுக்குப் பிறகு அவள் சொன்னாள்: ''உங்களுக்கு நினைவு இருக்கிறதா? கனன்று கொண்டிருக்கும் நிலக்கரி போல் நான் இருப்பதாக அடிக்கடி கூறுவீர்களே...''

''எரியும் கரித்துண்டத்தைக் காட்டிலும் தீக்கொழுந்தைப் பிடிக்க விரும்புவதாக அல்லவா நான் சொல்லுவேன்! தீக்கொழுந்து என்றுமே பிடிக்கு அகப்படுவதில்லை. வேறு யாரோ உனக்கு உவப்பாக இருந்திருக்க முடிந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம்...?''

அவன் முடிக்கவில்லை. அவள் துடித்துப் போனாள். ''நீங்கள் எதையும் விரும்பாமல் இருந்ததால்தான், விரும்பியவரைப் பற்றிச் சொன்னேன். பிறர் விரும்பி விட்டதால் எல்லாம் சரியாகி விடுமா? உங்களுடன் இருக்கும்போது நான் கனன்று கொண்டிருக்கும் நிலக்கரி; பிறரோடு பழகும்போது அணைந்து கிடக்கும் நிலக்கரி; புரிந்ததா?''

அவன் பேசவில்லை. அவள் உடலும் அசையவில்லை. ஆனால் கைகள் மட்டும் படபடத்தன; உடலோடு தொடர்பற்றவை போலத் தோன்றின. அவனை இறுகப் பற்றி அணைத்துக் கொண்ட பிறகுதான் படபடப்பு அடங்கியது.

''இனி நான் கனலும் நிலக்கரி மட்டுமல்ல; எரியும் தீக்கொழுந்துங்கூட!'' என்று சொன்னாள் அந்தப் பெண்.


அவன் இலேசாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''தீக்கொழுந்து என்றுமே பிடிக்கு அடங்காதது.''

பெண்ணுக்கு ஒரு துடிப்பு எழுந்தது: ''நீங்கள் சொல்வது சிறு பிராயத்தில். இடுக்கியைக் கொண்டு தணலைப் போலவே ஜ்வாலையையும் பிடிக்க முயன்றிருக்கிறீர்கள். ஜ்வாலையைப் பிடிக்க ஜ்வாலைதான் வேண்டும். தெரிந்ததா?...''

அவன் கால்கள் தடுமாறின. அவன் உள்ளத்திலிருந்து ஒரு தீக்கொழுந்து எழுந்தது. அவள் உள்ளத்தின் பிழம்போடு பிணைவது போலவும், அதை அவள் பற்றிக்கொண்டிருப்பதாகவும் தோன்றியது. அவனுடைய உதடுகளில் நிகோடினோ, மதுவோ ஏது இருக்கிறதென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் எது இருந்ததோ, அது அவனுக்கு மிகவும் தேவையானது என்பது மட்டும் தெரிந்தது.

அவர்களுடைய காலடிகளில் நீண்டு கிடந்த பாதை முன்பு போல் துண்டிக்கப்படாமல் இணைந்து செல்வதை இருவருமே கண்டார்கள். அதுவே அவர்களுடைய பாதை என்பதையும் உணர்ந்தார்கள்.

தமிழாக்கம்: சௌரி



குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி

அத்தியாயம் 15

‘‘நீ யாகத்தானே ரூபகுமாரை மணந்தாய்!’’ என்ற தேவகியின் கடுசொல் ரமாவைப் பாதித்து விட்டது. அவள் கண்கள் கலங்கின.

‘‘அப்படித்தான் எல்லோருக்கும் புரியும். ஆனால் உண்மையைச் சொல்லப் போனால்... நானும் வாசுவும் அன்று விவாகத்துக்குப் போகாமலே இருந்திருக்கக் கூடாதா? போகத்தான் போனோமே! விபத்தில் வாசுவுக்குக் காயம் ஏற்படாமல் எனக்கு ஏற்பட்டிருக்கக் கூடாதா?’’ விக்கி விக்கி அழுதபடி ரமா கூறிக்கொண்டே போனாள்.

‘‘...இரத்தம் செலுத்தினால் அன்றி வாசு பிழைக்க மாட்டார் என்ற கட்டம். உங்கள் முகம் என் கண் முன் நின்றது. அந்த நேரம் பார்த்து ரூபகுமார் என் எதிரே நின்றார். அந்தப் பணயத்துக்கு நான் உடன்பட்டு விட்டேனம்மா. உங்களுக்கு உங்கள் மகனின் உயிர் கிடைத்தது. எனக்கு என் காதலரின் உயிர் கிடைத்தது.’’

‘‘ரமா! இப்படி ஒரு கதை நடந்தது தெரியவே தெரியாதே அம்மா!’’

‘‘வாசு உயிர் பிழைத்தபிறகு நான் ஒப்புதலை மீறிவிடுவேனோ என்ற ஐயம் எனக்கே இருந்தது. அப்படி மீறினால் வாசுவின் உயிருக்கு மீண்டும் ஆபத்து ஏற்படக்கூடும் என்பதையும் நான் அறிவேன். அதற்காகத்தான் அம்மா நான் அத்தனை அவசரம் காட்டினேன்.’’

தேவகி ரமாவை மெள்ள அணைத்துக்கொண்டாள். அவளது கண்ணீர்த் துளிகள் ரமாவின் கன்னத்தோடு ஒட்டி விழுந்தன.

அதே நேரத்தில் இருவரும் எதிர்பாராத நிலையில் வாசலில் செருப்போசை கேட்டது.

மகன் வாசு இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி விடுவான் என்று தேவகி எதிர்பார்க்கவில்லை. எதிரில் ரமா, மறுபக்கம் வாசு! தேவகியின் நெஞ்சு துடித்தது.

ரமாவுக்கோ இது வாசுவின் வீடு, வாசு எந்த நேரத்திலும் திரும்பலாம் என்ற எண்ணமே இல்லாமலிருந்தது. வாசு வந்ததுமே ஒரு கணம் திடுக்கிட்டாள். பிறகு எழுந்து நின்று மெள்ளத் தன் பார்வையை அவன் மீது செலுத்தினாள்.

வாசுவின் முகம் ஜிவு ஜிவு எனச் சிவந்தது. கடுமை ஏறியது.

‘‘கண்ட கண்ட நாய்களை எதற்கம்மா உள்ளே விட்டாய்?’’ என்று கர்ஜித்தான் வாசு.

தேவகி பதில் கூறு முன் ரமா மெள்ள அவன் அருகில் சென்று தன் கண்களை அவன் மீது பதிய வைத்து ‘வா...சு...!’ என்று ஆர்வத்துடன் ஆரம்பித்தாள்.

பட்...பட்...

வாசுவின் விரல்கள் ரமாவின் கன்னத்தைப் பதம் பார்த்து விட்டன!
‘‘வாசுவாம்...வாசு!’’

‘‘ஐயோ அம்மா!’’ ரமாவின் தலை சுழன்றது. தேவகி ஓடிச் சென்று மகனை

நெட்டித் தள்ளி ரமாவைத் தன் கையினுள் அணைத்துக் கொண்டாள்.

''சீ! நீயும் ஆண்மகன் மாதிரி! வெட்கமாக இல்லை?'' முதன் முறையாகத் தேவகி தன் மகனையே சாடினாள்.

வாசு ஒரு கணம் திக்பிரமை பிடித்தவன் போல் நின்றான். பிறகு முகத்தைப் பொத்திக்கொண்டு அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

'மாற்றான் ஒருத்தனுக்குச் சொந்தமாகிவிட்ட பெண்ணை, அவள் சொந்தச் சகோதரியேயாயினும் தொட்டு அடிக்கும் உரிமை அண்ணனுக்கே பறிபோய் விடுகிறது. அப்படியிருக்கும் போது ரமாவை அடிக்கும் உரிமையை வாசு எவ்வாறு அடைய முடியும்?'

ரமாவின் கன்னத்தில் தனது மகனின் நான்கு விரல்களும் பதிந்திருந்ததைக் கண்ட தேவகி தவித்து விட்டாள். ''ஐயோ ரமா! நீ ஏன்தான் இந்த வேளைக்கு இங்கு வந்தாயோ?'' என்றாள்.

'' வாசுவின் கையினால் தண்டனை பெற்ற பிறகுதான் என் மனத்தில் ஓரளவு நிம்மதி பிறந்திருக்கிறது, அம்மா! நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம். நான் வருகிறேன்'' என்று கூறி எழுந்த ரமா, ''அம்மா, என் வேண்டுகோள் ஒன்றுக்குத் தயவு செய்து நீங்கள் செவிசாய்க்க வேண்டும். வாசுவை நீங்கள் கோபிக்கக் கூடாது. அவர் இன்று நடந்து கொண்ட விதத்தை நீங்கள் மறந்துவிட வேண்டும். அதோடு எந்த நிர்ப்பந்தத்தில் நான் ரூபகுமாரை மணக்க நேரிட்டது என்பது பற்றியும் நீங்கள் வாசுவிடம் கூறக் கூடாது. அவரை வஞ்சித்து நான் ரூபகுமாரை மணந்ததாகவே அவர் நினைத்துக் கொண்டிருக்கட்டும். அப்போதுதான் வெறுப்புக் காரணமாக என்னை மறந்து வேறு ஒருத்தியுடன் அவர் வாழ்க்கை தொடங்கக் கூடும்'' என்றாள்.



தேவகி பேச முடியாமல் தவித்தாள்.

* * *

விமான நிலையத்தில் ஸ்ரீகாந்தின் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும், மற்றும் பல சைத்ரிகர்களும் ஓவியர்களும் நிரம்பி இருந்தனர். விமானம் கீழே இறங்க மேலே சுற்றி வளைந்து வந்தபோது அதற்குச் சரியாகக் கூடியிருந்தோரின் கண்களும் சுழன்றன. விமானம் தளத்தில்

வந்து இறங்கி விட்டது. ''ஆ! அதோ நம் ஆனந்த்!'' என்று மகிழ்ச்சியுடன் கூவினார் ஸ்ரீகாந்த்.

ஆனந்த் தன் மீது விழுந்த மாலைகளைச் சுமக்க முடியாமல் திணறினான். பல பத்திரிகைகளிலிருந்து போட்டோ நிபுணர்கள் அவனைப்படம் பிடித்துக் கொண்டனர். வெளிநாட்டுக் கலைக் கூடத்தில் பரிசு பெற்றவன் என்ற முறையில் தாய்நாட்டுக்குப் பெருமை சேர்த்தவனாயிற்றே!

ஆனந்த் அனைவர் கேள்விக்கும் பதில் அளித்தான். ஆனால் 'எங்கே காணவில்லை, அந்தத் தடியனை?' என்று அவன் மனம் கேட்ட கேள்விக்குப் பதிலாக விளங்க வேண்டியவனைத்தான் அங்கே காணவில்லை.

ஸ்ரீ காந்தின் காரில் அவன் வீட்டுக்குப் புறப்பட்டான். வழியில், ''என் ஸார், வாசுவை நீங்கள் எப்போதாவது சந்தித்தீர்களோ?'' என்று கேட்டான்.

''போன வாரம் அவன் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருந்த போது சந்தித்தேன். ரொம்பவும் இளைத்து விட்டான். நீ வரப்போவதுபற்றிக் கூறினேன். ஏனோ அவன் முகத்தில் முன் போல் குதூகலமில்லை.''

ஆனந்துக்குத் திக்கென்றது. 'குதூகலமில்லையா? என்ன நேர்ந்து விட்டது அவனுக்கு'

''என் ஸார், அவன் விவாகம்...''

''இதுவரை எனக்கு அழைப்பிதழ் வரவில்லை!'' என்றார் ஸ்ரீகாந்த்.

மேலும் அவரிடம் அவன் ஒன்றும் கேட்கவில்லை.

வீட்டு வாசலில்....

இதென்ன அதிசயம்? யாரது, தத்தித் தத்திக் காலை இழுத்து வைத்துக் கொண்டு?

'அப்பாவா?'

''அப்பா!'' ஓடிச் சென்று தந்தையைத் தழுவிக் கொண்டவன், ''எப்படி அப்பா, நீங்கள் குணமடைந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''ரமாவின் தங்கை காந்திக்கு நாம் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறோம், ஆனந்த்!'' என்று



கூறிய சீதாபதி, அவள் சிகித்சைக்கு ஏற்பாடு செய்தது பற்றியும், அருகிலிருந்து கவனித்து வந்தது பற்றியும் விவரமாகக் கூறினார்.

ஆனந்த் கேட்டான்: ''ஆமாம், இந்த வாசுத் தடியனை எங்கே அப்பா, காணோம்? இங்கு வந்து என்னைப் பார்த்தால் அவன் மதிப்பு குறைந்து போய் விடுமோ?''

''தெரியவில்லையே! விபத்துக்குப் பிறகு வாசு இங்கே வரவே இல்லை. எழுந்து நடமாடுகிறானோ இல்லையோ, அதுகூடத் தெரியாது. கேட்டால் தேவகியும் காந்தியும் ஏதோ கூறி மழுப்புகிறார்கள்!''

''அந்தத் தடியன் ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறான். அவனை ஸ்ரீகாந்த் பார்த்தாராம். இருவருக்கும் நிறையச் சாமான்கள் வாங்கி வந்திருக்கிறேன்'' என்றபடி கையில் சிறு

பாருங்கள்...வித்தியாசத்தை!

வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது டினோபால்





விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்கு முன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள், சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!

இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள். ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.

Geigy

®டினோபால் என்ற பெயர் ஜே.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பால் ஸ்விட்ஸர்லாந்து நிறுவனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR.

Shilpi SGT-1A/52 Tam

பெட்டி ஒன்றைத் தூக்கிக் கொண்டு, வந்ததும் வராதது மாக வாசலின் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான்.

"எங்கே அந்தத் தடியன், மடையன், ராஸ்கல்..."

வாசலிலிருந்து வந்த குரலைக் கேட்டுத் தேவகி திடுக்கிட்டாள். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். அக்குரலில் அவள் அச்சம் கண்டாலும், பழக்கப்பட்ட குரலின் ஒரு நுணுக்கமும் அதில் தெரிந்தது.

தேவகி எழுந்து வாசலுக்குச் செல்லு முன்பே ஆனந்த் உள்ளே நுழைந்து விட்டான். ஆனந்த் ஊரிலிருந்து அன்று திரும்புகிறான் என்பது தேவகிக்குத் தெரியும். இருந்தாலும் அவ்வளவு சீக்கிரம் அவன் வீட்டைத் தேடி வருவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

"வாப்பா, ஆனந்த்! நல்லபடி வந்து சேர்ந்தாயா? பயணமெல்லாம் நன்றாக முடிந்ததா? பரிசு கிடைத்ததா? ஸ்ரீகாந்தின் வேலை முடிந்து விட்டதா?" தேவகி கேள்விகளை அடுக்கினாள்.

"போதும், உங்கள் வரவேற்பும், கேள்விகளும்! அரசாட்சியை ஒப்படைக்க வந்த பரதனிடம் 'இராஜ்யத்தைச் சுகமாக ஆளுகிறாயாடா?' என்று ஸ்ரீராமர் கேட்டாராமே, அது போல் இருக்கிறது உங்கள் கேள்வி! உங்கள் அழகான பிள்ளை எங்கே, சொல்லுங்கள். அவன் முதுகில் நாலு கொடுத்துப் படபடவென்று அவனைத் திட்டித் தள்ளினால்தான் என் படபடப்பு அடங்கும். அவன் எங்கே இப்போது?" என்று கேட்டான் ஆனந்த்.

"ஆனந்த்! நீ வரும்போது அவன் வீட்டில் இல்லாததே நல்லது!" தேவகி எப்படியோ மனத்தை அடக்கிக் கொண்டு கூறினாள்.

"அம்மா! அவன் என்னைப் பார்க்கக் கூடாதபடி அப்படி என்னம்மா நேர்ந்து விட்டது? நான் தவறு செய்திருந்தால் எனக்குத் தண்டனை கொடுங்கள். ஆனால் எங்கள் சிநேகத்தை எப்படியம்மா மறக்க முடியும்?"

"உங்களைப் பிரிக்க நான் முயற்சி செய்யவில்லை, அப்பா! வாசு ரமாவைப் பிரிந்ததிலிருந்து தவித்துப் போகிறான். யாருடனும் மகிழ்ச்சியாகப் பேசுவதில்லை."

அமைச்சரவை அதிசயம்!



ஏப்ரல் 5ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மயிலாப்பூர் கடற்கரைக்குச் சென்றவர்களில் பலர் ஓர் அபூர்வக் காட்சியைக் கண்டு அதிசயப்பட்டார்கள். அமைச்சர்கள் மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், மாதவன், நடராஜன் ஆகியோர் ஒரே காரிலிருந்து இறங்கிக் கடற்கரை மணலில் நிதானமாக நடந்து போகிறார்கள். சற்று ஒதுக்குப்புறமான இடத்தில் போய் அமர்ந்தார்கள். பேசினார்கள்; பேசிக் கொண்டே இருந்தார்கள்!

ஞாயிற்றுக்கிழமை — மாலை வேளை — அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டிய விழா ஏதுமில்லாமல் நால்வரும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள நேரம் கிடைத்ததே அதிசயமல்லவா?

"என்னது? ரமா வாசுவை விட்டுப் பிரிந்துவிட்டாளா? சூரியனை விட்டு ஒளி பிரிந்து விட்டது என்று நீங்கள் கூறுவது போல் இருக்கிறதே!"

"ஆமாம், ஆனந்த்! ரமாவுக்கும் ரூபகுமாருக்கும் விவாகம் முடிந்துவிட்டது. அதிலிருந்து...."

"என்ன? ரமாவுக்கும் ரூபகுமாருக்கும் விவாகம் முடிந்து விட்டதா? என்னம்மா சொல்கிறீர்கள்? எனக்குக் காது இந்த நேரம் வரை நன்றாகத் தானே இருந்தது?"

"ஆண்டவன் எப்படியெல்லாமோ திட்டமிடுகிறார். எப்படியெல்லாமோ முடிக்கிறார்."

"ஆண்டவன் பேச்சை அப்புறம் பேசிக் கொள்ளலாம். இந்த விவாகத்தின் அடிப்படை எங்கிருந்து ஆரம்பமாகிறது? முதலில் அதைக் கூறுங்கள்!"

"ஆரம்பம் உனக்குத் தெரிந்தது தானே?"

"ஆரம்பம் தெரிந்தால் உங்களை வந்து ஏன் கேட்கப் போகிறேன்? இந்த விவாகம் முடிந்து வெகு நாட்களாகி விட்டனவா?"

"மாதக் கணக்காகி விட்டது."

ஆனந்தின் முகம் விகாரமாக மாறியது. பல்லை நறநறவென்று கடித்தான். முகம் குங்குமமாகச் சிவந்தது.

விருட்டென்று எழுந்து வாசலை அடைந்தான். கிடைத்த டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு ரூபகுமாரின் வீட்டை அடைந்தான்.

அதே நேரத்தில் ரூபகுமார் உள்ளிருந்து வந்தான். ஆனந்தைக் கண்டதும் அவன் முகம் வெளிறிவிட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "உட்காருங்கள், ஆனந்த்!" என்றான்.

"நான் உட்கார வரவில்லை. எல்லாவற்றையும் தீர்த்துக் கட்டவே வந்திருக்

கிறேன்!'' என்று ஆனந்த் கூப்பாடு போட்டான்.

'' நீங்கள் இந்தியா திரும்பியதுமே என் வீட்டுக்கு வருவீர்கள் என்று தெரியும். என் விவாகத்தைப் பற்றி அலசுவீர்கள் என்றும் தெரியும். நீங்கள் கேட்பதற்கு முன்பாக நானே பதில் கூறுகிறேன். ரமாவே என்னை விரும்பி மணந்தாள்!'' என்றான் ரூபகுமார்.

''பொய்! பொய்! அத்தனையும் பொய் !''

''நீங்கள் பொய்யாக நினைத்தாலும் மெய்யாக நினைத்தாலும் எனக்கு அக்கறை இல்லை. ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பிறகு நான் ரமாவைக் கட்டாயப் படுத்தவே யில்லை. ரமாவை நேரில் வைத்துக் கொண்டே நான் இதைக் கூற முடியும்.''

''கூப்பிடுங்கள், ரமாவை! நான் கேட்கிறேன்.... ரமா...ரமா..'' எனக் கூறிக் கொண்டே அவன் உள்ளே போக முயன்ற போது ரூபகுமார் அவன் கையைப் பிடித்துத் தடுத்தான்.

''நில்லுங்கள். ரமா அங்கு டாக்டர் பரிசோதனையில் இருக்கிறாள். நீங்கள் அங்கே போகக் கூடாது.''

''டாக்டரா? பரிசோதனையா? ரமா வுக்கு என்ன?'' ஆனந்த் திடுக்கிட்டுக் கேட்ட அதே நேரத்தில் லேடி டாக் டர் உள்ளிருந்து வந்தார். இருவரும் ஆர்வத்துடன் அவளை நோக்கினர்.

அவள் சொன்ன செய்தி கேட்டு ரூபகுமார் ஆனந்தை நோக்க, ஆனந்த் முகம் வெளிறியது. அடுத்த நிமிஷம் அவன் அங்கு நிற்கவில்லை.

எவ்வளவு வேகத்தில் மகன் கிளம்பி னானோ அவ்வளவு வேகத்தில் அவன் திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டதைச் சீதாபதி கவனித்தார். ஆனால் அந்த வேகத்துக்கும் இந்த வேகத்துக்கும் வெகுவாகப் பேதமும் இருந்தது. அதில் துயரத்தை விடுத்து அத்தனை உணர்ச்சிகளும் இருந்தன. சண்டை பிடிக்க வேண்டும் என்ற வீரம் இருந்தது. ஆனால் திரும்பி வந்து விழுந்த வேகத்தில் மற்ற உணர்ச்சிகள் எதுவுமே இல்லை. துயரம் மட்டுமே எஞ்சி இருந்தது.

''வாசுவைப் பார்த்தாயா, ஆனந்த்? வாசுவும் ரமாவும் சுகமாகத்தானே இருக்கிறார்கள்?'' என்று கேட்டார் சீதாபதி.

''நீங்கள் செய்தி அறிந்தால் தவித்து விடுவீர்கள் என்பதற்காகவே தேவகி யும் காந்தியும் மறைத்திருக்கிறார்கள், அப்பா! வாசு தனித்து நின்றுவிட்டான். ரமா ஜோடி சேர்ந்து விட்டாள்' என்று முடித்தான் ஆனந்த்.

''என்னது?'' ஒரு நிமிடம் சீதா பதிக்கு மூச்சே நின்று விடும்போல் இருந்தது. ''என்ன சொல்கிறாய் நீ?''

''பிரிவுத் துயர் வாசுவை வாட்டு கிறது. அதனால்தான் அவன் உங்களைப் பார்க்க வரவில்லை.''

''நீ சொல்வதைப் பார்த்தால் ரூப குமார் இடையே புகுந்து.....''

''ஆமாம் அப்பா! ரமா தன்னை மணக்கும்படி ரூபகுமார் செய்துவிட் டிருக்கிறான்.

''ரூபகுமாருக்கே ரமா உரிமையானவ வள் என்று உலகம் அறியக் கடவுள் ஏற் பாடு செய்து விட்டார்.... ரமா... ரமா தாய்மைப் பேற்றின் படியில் காலடி வைத்து விட்டாள்!'' நெஞ்சு விரியக் குரல் அடைக்க மெள்ளக் கூறி னான் ஆனந்த்.

சீதாபதி கண்களை இறுக மூடிக் கொண்டு நாற்காலியில் முதுகைச் சாய்த்து விட்டார்.

* * *

ரூபகுமாருக்கு ஒரே குதூகலம்! இனி யாரும் எதையும் செய்ய முடி யாது. செய்தாலும் பலனில்லை. திட்ட மிட்டுச் சாதித்ததுபோல் அவனுக்குப் பலன்கள் கிட்டிக் கொண்டிருந்தன.

அவன் தந்தையாகப் போகிறான் என்ற குதூகலத்தைக் காட்டிலும் ரமா அவனுடைய உடைமையாகி விட்டாள் என்ற எண்ணம் அவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளித்தது. அந்த மகிழ்ச்சி மிதப்பில் அவன் ரமாவைக் காண அவள் அறைக்குள் சென்றான்.

அங்கு ரமா....

குப்புறப் படுத்துக் கிடந்தாள். சற்று முன், மூர்ச்சையாவதற்கு முன்பே அவளுக்கு அந்த உணர்ச்சி புரிந்து விட்டது. அது தெரிந்து மெள்ளக் கண்கள் சுழன்றபோது அவளுக்கு எல் லாம் விளங்கி விட்டது. எதை வேண் டாம் என்று அவள் நினைத்தாளோ, அது தானாகவே அவளை வந்து அடைந்து விட்டது, அவள் நடத்திக் கொண் டிருப்பது குதூகலமான குடும்ப வாழ்க் கைதான் என்பதை உலகுக்குப் பறை சாற்றுவதே போல.

வாசுவோடு ஊரைச் சுற்றியது, பேசி யது எல்லாம் மாய வாழ்க்கை. இப் போது அனுபவிப்பதுதான் உண்மை யான வாழ்க்கை.

நினைத்துப் பார்க்க அவளுக்கு எரிச்ச லாக வந்தது.



'ஸான்ஃபரைஸ்ட்' முத்திரையின் பின்னே என்ன இருக்கிறது பார்த்தீர்களா?

'ஸான்ஃபரைஸ்ட்' முத்திரையின் பின்னே பார்த்தீர்களானால் பலபேர், சோதனைகள் செய்வதையும், அளவுகள் எடுப்பதையும், அளவுகளை ஒப்பிடுவதையும், குறிப்புகள் எடுப்பதையும், அறிக்கைகள் தயாரிப்பதையும் காண்பீர்கள். இந்த ட்ரேட் மார்க்கின் சொந்தக்காரர்கள் விதித்துள்ள கடுமையான தரக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப துணிகளின் சுருங்காத்தன்மை அமைந்துள்ளதா என்பதை உறுதி செய்யும் 'ஸான்ஃபரைஸ்ட்' தொழில் நுட்பப் பிரதிநிதிகளே அவர்கள்.

இந்த முத்திரையை மீண்டும் ஒரு முறை பார்த்தீர்களானால் அதைத் தாங்கியிருக்கும் உடை எவ்வளவு முறை துவைத்தாலும் சுருங்கி அளவு மாறிப் போகாது என்று அது சொல்வதை உணர்வீர்கள்.

ஆம், 'ஸான்ஃபரைஸ்ட்' முத்திரையில் நீங்கள் பல விஷயங்களைக் காணலாம். அது உங்கள் பணத்திற்கு ஈடான மதிப்பை நீங்கள் வாங்கும் துணிகள் அமைப்பும் அளவும் மாறாமல் இருக்கும் என்பதற்கும் உறுதி அளிக்கிறது.

அடுத்த முறை, பருத்தி அல்லது பருத்தி கலந்த துணிகள் வாங்கும்போது, 'ஸான்ஃபரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று பார்க்கத் தவறாதீர்கள். அது நீங்கள் நம்பக் கூடிய ஒரு டிரேட் மார்க்.

·SANFORIZED·

'ஸான்ஃபரைஸ்ட்' என்னும் டிரேட் மார்க்கின் உரிமையாளர்களான [illegible] [illegible] அனுமதிக்கின்றனர்.

[illegible] SAN.7546 TAM.



உங்களை விட நான் வேகமாக வேலை செய்ய முடியும்

நான் பருகுவது ஓவல்டின்



ஓவல்டின் ஆரோக்கியம்

ஓவல்டின் வலிமை

ஓவல்டின் சக்தி

ரூபகுமார் அவள் அருகில் வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்து, "ரமா!" என்று அழைத்தான்.

ரமாவின் கண்களில் நீர்த் தேக்கமிட்டிருந்தது. அவள் கண்களில் நீரைக் கவனித்து விட்ட ரூபகுமாரின் மனத்தில் சுருக்கென்று ஒரு முள் தைப்பது போன்ற பிரமை தட்டியது.

"ரமா! டாக்டர் என்ன சொன்னாள், தெரியுமா? மனச் சஞ்சலமே கூடாதாம்." துணிவைத் திரட்டிக் கூறினான் ரூபகுமார்.

ரமா பதிலே கூறவில்லை.

"நான் சொல்வது புரிகிறதா, ரமா? நான் உனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. அதனால் நீ மனச் சஞ்சலத்துக்கு இடம் தரக் கூடாது." மீண்டும் தொடர்ந்தான் ரூபகுமார்.

ரமா மெள்ள அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். "உள்ளுணர்வு இருந்தும் நீங்கள் இப்படி உபசாரமாகக் கூறுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். கூண்டில் அடைத்து விட்ட பறவைக்குத் தங்கக் கூண்டும் பால் சோறும் ருசிக்கும் என்று நினைக்கிறீர்களா? மனிதனோ, பறவையோ, மிருகமோ உருவப் படைப்பில் மாறுபாடு கண்டாலும் உள்ளப் படைப்பில் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்!"

ரூபகுமார் தன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டான். ரமா அவனை மணந்து கொண்டதிலிருந்து தன் துயரத்தை மனத்தோடு அனுபவித்து உருகிக் கொண்டிருந்தாள். இப்போது பல மாதங்களுக்குப் பிறகு சொற்களை வீசிவிட்டாள். யோசித்து அச்சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கவில்லை. அவள் கூறியவை அவன் வெற்றிக்கான புகழ் மாலை இல்லை. அவனது விவாக வெற்றிக்குள் அடங்கிக் கிடக்கும் தோல்வியைப் பளிச்சென்று படம் பிடித்துக் காட்டுபவை.

சற்றுப் பொறுத்து ரூபகுமார் கூறினான்: "ரமா! பிறக்கப் போகும் குழந்தை நம் இருவருக்கும் பொதுவானது. அதாவது உன்னையும் என்னையும் தன் தோற்றத்துக்கு வழிகாட்டியாக வைத்திருப்பது. அப்படிப்பட்ட நிலையில், நீ கொடுக்கும் மூச்சுக் காற்றைச் சுவாசித்துப் பிறக்கப் போகும் நிலையில், உன்னால் அதை வெறுத்து விட முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. என்னுடையது என்று நான் பெருமை அடைவதற்கு மேலாக உன்னுடையதாகவே நீ பெருமை கொள்ளக் கூடும். ஊட்டமும் [illegible] கொடுத்து நீ வளர்ப்பதால் உனக்குத்தான் பெருமை அதிகம்.... என்னை வெறுப்பது போல் நீ அதை வெறுத்து விட முடியுமா?" ரூபகுமார் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தத்தோடு கூறி நிறுத்தினான்.

(தொடரும்)

தாய்க்கு மகிழ்ச்சி: சேய்க்குச் சத்துணவு



ஏறத்தாழ நாற்பது ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 11,000 பெண்களும் குழந்தைகளும் 'கேர்' திட்டத்தின் கீழ் ஊட்டச் சத்துமிக்க பகல் உணவு பெறுகின்றனர்.

தமிழக அரசும், ஆலைகளின் நிர்வாகத்தினரும், "கேர்" என்னும் அமெரிக்க உதவி நிறுவனமும் கூட்டாக மேற்கொண்டுள்ள மதிய உணவுத் திட்டம் இது.

"கேர்" நிறுவனத்தின் உதவியுடன் பள்ளி செல்லும் சிறுவர் சிறுமிகளுக்கும் பகல் உணவு வழங்குவதன் வாயிலாக அவர்களது உடல் நலம் பேணுவதில் தமிழ் நாடு பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால் பள்ளி செல்லும் வயது வராத சிறு குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துள்ள உணவு கிடைக்காவிடில் அவர்களது உடல், மன வளர்ச்சி சரி செய்ய முடியாதபடி ஊறுபட்டு விடுகிறது. ஆகவேதான் இப்போது ஆலைத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் நான்கரை லட்சம் பேருக்கு மேல் ஆலைகளில் வேலை பார்க்கும் ஊழியர்கள். மிகக் குறைந்த காலத்துக்குள்ளாகவே இவர்களில் பெரும்பாலோரது குடும்பங்கள் புதிய திட்டத்தினால் நன்மை அடையும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார், தொழிலாளர் நல ஆணையாளர்.

அப்போது ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அமெரிக்க உணவுப் பண்டங்கள் தேவைப்படும். 'கேர்' நிறுவனம் இவற்றைத் தந்து உதவும்.

அட்டைப் படக் கதை

பயம்

ஹிந்தி





இரு குழந்தைகள் சீதாராமின் சடலத்தின் மேல் விழுந்திருந்த காசுகளை லபக்கென்று கொத்திக் கொண்டு ஓடின. அதைக் கண்ட பொழுது அவனுக்கு மனிதனுக்கும் மிருகத்துக்கும் எவ்விதமான வேறுபாடும் கிடையாதோ என்று தோன்றியது. கண்களில் சவ்வு போல் சாம்பல் பசைபோடு ஒட்டிக் கொண்டிருந்த ரப்பைகளைத் தவிர வேறு மாற்றமே இருப்பதாக அவனுக்குப் படவில்லை.

நடந்தது எப்பொழுது என்று அவனுக்குத் தெளிவாக நினைவில்லை. கடந்த காலத்தைத் திரும்பி நோக்கும் பொழுது, பயங்கர இருள் மண்டிய காட்டில் இடையிடையே பளிச்சிடும் ஒளிக் கதிர்களெனத் தன் வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகள் மட்டுமே அவனுக்கு நினைவிருக்கின்றன. விழிகளால் மட்டுமே நின்றிய காட்சிகள் அடிக்கடி நிகழ்ச்சிகளாக உருப் பெறுவதுண்டு! உள்ளுக்குள்ளேயே தொடர்ந்து நாடகமாடுவதுண்டு என்பது அவன் சிற்றறிவுக்கு எட்டியதில்லை. அதுவும் முக்கியமாக, அருவமான அருவருப்போ அச்சமோ உருப்பெறும் நேரங்களில் இப்படி நிகழ்வதுண்டு என்பதை அவன் அறியான். அவனுக்கு ஒரு நிகழ்ச்சி நினைவிருக்கிறது. 'சவுக்'கில் காளை மாடு ஒன்று இறந்து கிடந்தது. அதன் வாயில் ஒரு வாழைப் பழத் தோலி. அதைப் பசு ஒன்று பிடித்து இழுத்துத் தின்ன முயன்று கொண்டிருந்தது.

அப்பசுவின் வாயிலிருந்து வழிந்த நீர் — அவனுக்குத் தெளிவாக நினைவிருக்கிறது.

அவன் தந்தை இறந்தபொழுது உலுக்கி எடுக்கும் அவலக் குரலில் கதறி அழுது கொண்டே அவன் தாயார் சட்டைப் பையைத் தேட்டை போட்டாள். அப்பொழுதும் அவனுக்கு இதே காட்சி நினைவு வந்தது. இப்பொழுது இரு சிறுவர்கள் சீதாராமின் சடலத்திலிருந்து எத்தனை ஜாக்கிரதையாகக் காசுகளைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்? அதை நினைத்த மாத்திரத்திலே அவனுக்குத் தன் தாயாரின் அவலக் குரல், தந்தையின் சடலம், செத்துக் கிடந்த காளை மாடு, அதன் வாயிலிருந்து வாழைப் பழத் தோலியை இழுத்துத் தின்ற பசு — எல்லாமே சேர்ந்தாற்போல் ஏககாலத்தில் நினைவுக்கு வந்தன. அந்த நினைவு மக்களுக்கும் மாக்களுக்கும் இடையே வேறுபாடு அதிகம் கிடையாது என்னும் கருத்தை வலுவுறச் செய்தது.

அவன் கண்களில் மீண்டும் காட்சி ஒப்புசப் படமாக விரிந்தது.

அந்நேரத்துக்கு நாதியற்றுக் கிடந்த சீதாராமின் சடலத்தின்மீது காசுகள் வீசப் படுவதற்கு முன்னால், அவ்விரு குழந்தைகளும் எதிர்த்தாற் போலிருந்த மொட்டைச் சுவரில் காலைத் தொங்க விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தனர். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது அவன் காதுகளில் விழவில்லை. எந்த மரத்தின் அடியில் சீதாராமின் சடலம் கிடந்ததோ, அந்த மரத்தின் கிளைகளில் காக்கைகள் கூட்டம் போட்டுக் கொண்டிருந்தன. அவை உட்கார்ந்திருந்த விதம் எல்லாமே அடித்துத் தொங்கவிடப்பட்டிருக்கின்றனவோ என்னும் பிரமையை உண்டுபண்ணியது. இமைகளைக் கொட்டாமல் அவன் எதையும் ஊன்றிக் கவனித்தான்.

☐ அல்மோராப் பகுதியில் உள்ள 'பாடேத் தீரு' என்னும் இடம் ஷைலேஷ் மடியானியின் பிறப்பிடம். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர். 1931ம் ஆண்டு பிறந்து 1956லிருந்து எழுத்தைத் தொழிலாகக் கொண்டுள்ளார். இதுவரை பதினைந்து நவீனங்களும் ஏழு கதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

ஆங்கிலமுள்ளிட்ட பாரதத்தின் பல்வேறு மொழிகளிலும் இவரது படைப்புகள் வெளி வந்துள்ளன. இவரது 'பயம்' என்னும் கதையைப் படிக்கும் பொழுது பயப்படுவதற்குப் பதிலாக எப்படி அருவமான பயத்தை உருவப் படுத்துகிறார் என்றே வியப்போம்.

இவர் 'விகல்ப' என்னும் ஒரு பத்திரிகையும் நடத்துகிறார். ஆண்டுக்கு ஒரு முறை வெளியாகும் பத்திரிகை என்றாலும், இலக்கிய வளத்தை அளவிடும் கருவியாகவும் அது விளங்குகிறது.

சிறிது நேரத்துக்கெல்லாம் இரு வழிப்போக்கர்கள் அவ்வழியே வந்தார்கள். அவர்கள் பிணத்தைப் பார்த்து விட்டார்கள். பையில் கையை விட்டுக் காசை எடுத்து அதன் மேல் விசிறி விட்டுத் தங்கள் வழியே சென்றார்கள்.

கணப் பொழுதுதான் என்றாலும் அவனைப் பொறுத்தவரை மலைப் பொழுதாக விரிந்தது. சிந்தனையில் ஆழ்த்தி மன உளைச்சலைப் பெருக்கும் நேரத்தைச் 'சிறிது பெரிது' என்று எப்படிக் கணக்கிடுவது?

மரத்துக் கிளையில் உட்கார்ந்து தருணத்தை எதிர்பார்க்கும் காக்கைகளைப்போல, இரு சிறுவர்களும் காசுகளை எடுத்துக் கொண்டு கன ஜாக்கிரதையாக ஓடிய காட்சி அவன் கண்களில் அப்படியே பதிந்து விட்டது.


தந்தையின் பிணத்தின் மீது விழுந்து கதறினதும், பணத்தைத் துழாவினளே தாயார், அந்த நிகழ்ச்சியும்தான் மறக்கக் கூடியதா?

அவன் ஒரு முறை தலையைச் சிலிர்த்து விட்டுக் கொண்டான். சிந்திக்கும் வேளையிலே அவனுக்கு ஒரு ரகசியம் விண்டாற் போலிருந்தது. தன் தாயாரிடமும் அவ்விரு குழந்தைகளிடமும் அவன் ஒரு பயத்தையும் பரபரப்பையும் கண்டானே, அத்தகைய அச்ச உணர்வை அவன் அந்தப் பசுவினிடத்தில் காணவில்லை. அவன் இவ்விஷயத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை. என்ருலும் அவன் உள்ளத்தால் உய்த்து உணர்ந்தான். 'மாக்களையும் மக்களையும் பிரித்து இனங்காட்டுவது வெறும்உணர்வுதான்' ,என்பது அவன் அநுபவ வாயிலாகக் கண்ட முடிவு. இதுபோன்ற வெறுப்பை அறிவறிந்த அச்சம் என்று கூறுவது இன்னும் பொருத்தமாயிருக்கலாமோ? ஆனால் மிருகங்கள் இத்தகைய அச்சத்தை உணர்வதில்லையே!

மாக்களை மக்களிலிருந்து பகுத்துப் பிரித்து உணரும் முயற்சியில், தானே இனந்தெரியாததோர் அச்சத்துக்கு ஆளாகி விட்டது போல் உணர்ந்தான். அவனுக்கு அது பெருத்த வியப்பை அளித்தது.

மிகவும் மனச் சங்கடமான நிலையில் அவன் இந்தப்புறத்துச் சுவரில் உட்கார்ந்திருந்தான். சீதாராமின் சடலம் அங்கிருந்து நன்ருகத் தெரிந்தது. தெருவில் போவோர் — வருவோர் கூட்டம் அவ்வளவாக இல்லை. இப்படி ஒருவர் அப்படி ஒருவராக எப்பொழுதாவது போய்க் கொண்டிருந்தார்கள், எத்தனையோ பேர் சீதாராமனின் சடலத்துக்கு அருகாக்கூடப் போனுர்கள். அவர்கள் வியப்புக் குறியோடு ஏதோ முணுமுணுப்பதையும், மிருகங்களைப் போல் மோப்பம் பிடித்துப் பின்வாங்குவதையும் அவன் கண்டான். மக்கள் நடமாட்டமோ வெகு குறைவு. நீண்ட நேரத்துக்கு நீண்ட நேரம் அத்திபூத்தாற்போல் ஓரிரு கார்கள் சென்றன. வழியோடு போகிறவர்களும் வருகிறவர்களும் சீதாராமின் சடலத்தைப் பார்த்துப் பயந்து பின்வாங்குவது, பிறகு எதையோ முணுமுணுத்துக் கொண்டு செல்வது — இதை அநுதாபம் என்றே அச்சம் என்றே ஒன்ருகக் கணக்கிட்டுவிட முடியுமா? அப்பொழுதிருந்த மன நிலையில் அவன் உடலைத் துளைத்துக் கொண்டு ஏதோ ஒன்று உள்ளத்தில் புகுவது போல உணர்ந்தான்.

ஒரு வேளை அந்த இரு குழந்தைகளும் திரும்பி வருவார்களோ? சீதாராமின் சடலத்துக்கு அருகில் அமர்ந்து அவன் அநுபவித்துக் கொண்டிருந்த அச்சத்தையும் தனிமையையும் யாராவது போக்க முடியும் என்றால் அவ்விரு குழந்தைகளால்தான் முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. உடனே அந்த



நிகழ்ச்சி மீண்டும் காட்சியாக அவன் நினைவுத் திரையில் தோன்றியது. பிணத்திலிருந்து காசை எடுத்துக் கொண்டு முன்னெச்சரிக்கையோடு ஓடும்பொழுது இரு குழந்தைகளின் கண் ரப்பைகளும் எப்படி ஒட்டிக் கொண்டிருந்தன. என்ன முயன்றாலும் பிரிக்க முடியாதது போல. இத்தகைய கண்கள் வெறுப்பை உண்டாக்குகின்றனவா அல்லது அச்சத்தை உண்டாக்குகின்றனவா என்பது தீர்மானிக்க முடியாத விஷயமாகப்பட்டது. இப்படி யோசிக்கும்பொழுதே, அவன் உள்ளத்தில் இன்னுமோர் எண்ணம் உருவெடுத்தது. குழந்தைகள் பிணத்திலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு ஓடுவதைக் கண்ட பிறகு, அவனையே ஓர் எண்ணம் கவர்ந்தது. அதை ஏற்க அவன் அடுத்தகணமே தன்னைத் தயார் செய்து கொண்டு விட்டான்.

அச்சமும் வெறுப்பும் நேருக்கு நேர் அநுபவிக்கும் பொழுது குறைவாகவும், அதுவே தொலைவிலிருந்து காணும் பொழுது அதிகமாகவும் தோன்றுகிறது. ஏன்? இதை அறிந்து உணரும் ஆற்றல் அவன் சிற்றறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம். தன் தந்தையின் சடலம் தொட்டைவிடப்பட்ட பொழுதோ, சீதாராமின் சவத்திலிருந்து காசுகள் எடுக்கப்பட்ட பொழுதோ அவன் கண்களின் ரப்பைகள் இணைந்து மூடிக் கொண்டனவே, அப்பொழுது அவன் என்ன கண்டான்? தன்னையறியாமலே தன்னிடமே தோன்றிய வெறுப்பும் பீதியும் மேலோங்குவதையேதான் கண்டான்.

அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. தந்தை இறந்த பிறகு அவன் தன் தாயாரின் பெட்டியைக் குடைந்திருக்கிறான். அந்தச் சிறுவர்கள் இருவரும் அங்கிருந்து போனபின், அவன் உள்ளம் சிந்தனை வட்டமடிக்கத் தொடங்கியது : 'நாமும் சீதாராமின் பிணத்தைக் கொண்டு பணம் சேர்க்க ஏன் முயலக்கூடாது?' கல்கத்தாவில் இருந்தபொழுது அவன் எத்தனையோ முறைகள் இத்தகைய காட்சிகளைக் கண்டிருக்கிறான்! பிணத்துக்கெதிரே அழுது புலம்பிச் சவ அடக்கத்துக்காகக் காசு கேட்கும் காட்சிதான் !

பல ஆண்டுகளுக்கு முன் இதே சீதாராமுடன் மீர்கஞ்சுப் பகுதியில் சுற்றித் திரிந்தது நினைவுக்கு வந்தது. 'ஆமாம், அந்தப் பெண் இன்னும் உயிருடன் இருப்பாளோ? அதுவும் அதே அறையில்....?'

உடனே அவனுக்குள் ஒரு கவர்ச்சி ஓங்கி வளர்ந்ததை உணர்ந்தான். இந்தப் பசியிலும் பட்டினியிலும், வருங்காலம் என்பது பாழும் வெறுமைக் தோன்றிய நிலையிலும்கூட அவளை இரண்டாம் முறை பார்க்க வேண்டும் என்று ஆசை எழுந்ததே, அதில் துளிக்கூட வெறுப்பு இழையோடவில்லை. இப்படி யோசிக்கும் பொழுதுதான் அவனுக்குத் தன்னையும் மனிதனாகப் பாவிக்கும் உணர்வு பெருகுவதாய்ப் பட்டது.

சீதாராமின் சடலத்தைக் கொண்டு எப்படியோ காசு சேர்க்க வேண்டும் என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டிருந்தான். சிந்திக்கச் சிந்திக்க விந்தையாகத்தான் இருந்தது.

நீண்ட தூரத்துக்கு நீண்ட தூரம் பரவியிருந்த சில குடிசைகளையும் பங்களாக்களையும் ஒரு முறை அவன் மேலெழுந்தவாரியாக நோட்டமிட்டான். பிறகு, தன் கால்களுக்கு ஒரு வேகம் கொடுத்து உந்தினான். அந்த வேகத்தில் அவன் அடுத்த நிமிஷம் சீதாராமன் சடலத்துக்கு அருகில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவன் முழங்கால்கள் மடிந்து எழும்பிக் குதிப்பன போல் போக்குக் காட்டினவே ஒழிய இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. தன் நரம்புகளனைத்தும் முறுக்கேற்றிக் கொண்டு விட்டாற் போல அவனுக்குத் தோன்றியது.

திடீரென்று அவன் கை தனது கந்தல் கால்சராயின் பைக்குள் போயிற்று. சுருள் கத்தியின் கைப் பிடியை உள்ளங் கையால் துழாவினான், வன விலங்கு தனது கொலைகாரப் பாதங்களை நக்கிக் கொடுப்பது போல. எந்த முடிவுக்கும் ஈடுகொடாத மன நிலையில், அவன் தன்னையும் மறந்து கைக் கட்டைவிரலினால் 'ஸ்பிரிங்'கை (வில்லை) அழுத்திவிட்டான். 'கர்'ரென்று ஒலியெழுப்பி விரிந்த கத்தி அவன் பையைக் கிழித்துக் கொண்டு வெளியே துருத்தி நின்றது.

படுவேகமாகத் தன் பழைய நாட்களை நினைவுகூர முயல்வது போன்று உணர்வில் மிதந்தான். அவன் சட்டென்று வானத்தை நோக்கினான். பசேப் பாம்பு போல் சுருண்டு கொண்டிருந்த மேகங்களைப் பார்த்த பொழுது, அவனது உள்ளுக்குள் குடிகொண்டிருந்த விந்தையான அச்சத்துக்கும் பருவத்துக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருப்பது போலத் தோன்றியது. முதன் முறையாகச் சட்டென்று அவன் வானத்தை அண்ணாந்து நோக்கியது எப்பொழுது? தனது அக்காள் கணவனைக் கொன்று போட முயன்ற பொழுது! அன்று நண்பகலில் கொளுத்திய வெய்யிலில் அவனுக்கு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. வாழ்க்கையில் தோன்றும் சில முக்கியமான தருணங்களில் மனிதனுக்குத் தன் அச்சமோ, வெறுப்போ, பருவமோ — இவற்றில் வேறுபாடு காண்பது எவ்வளவு சிரமசாத்தியமான காரியம் ஆகி விடுகிறது!

எதிரே உள்ள தன் சேரிக் குடிசைகளை நோக்கிச் செல்லும் பொழுது மீண்டும் அவ்விரு குழந்தைகளின் நினைவு அவனுக்கு வந்தது. தாயாரின் பெயர் சொல்லிப் பெரிதாகத் திட்ட வேண்டும் என்று எண்ணினான். ஆனால் அதற்கு மேல் வசவுச் சொற்கள் அவன் வாயில் நுழையவில்லை.

தன் மூன்று தோழர்களையும் — அவர்களில் ஒருவனது மனைவி — குழந்தையையும் அழைத்துக் கொண்டு திரும்பிய பொழுது, முன்பு வாயில் நுழையாத சொற்களெல்லாம் நுழைந்து புறப்பட்டுக் கொண்டிருந்தன.

அவனுக்குத் தூரத்து உறவினன் நந்து: அவன் பெண்சாதிதான் அவர்களோடு வந்தவள். சில ஐயங்களை எழுப்பினான். அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'சவ அடக்கத்துக்குக் காசு கேட்க நீ யாரடா என்று எந்தப் பயல் நாக்கில் நரம்பைப் போட்டுக் கேட்பான்? நானே கல்கத்தாவில் இப்படி ஓர் அநாதைப் பிணத்துக்கு நாலணாப் போட்டிருக்கிறேன், ஏமாந்து போவ்! அப்போ எந்தப் பயல் நினைத்தான், அந்த அம்மா

CENTURY RAYON makes YOUR HOME



SWEETER HOME!

Century Rayon provides furnishings—rich and glowing, or sober and subdued; in staid, traditional designs as well as in madly modern designs; curtains, upholstery material, bed-sheets, pillow-covers...for your family a rich assortment of Cenray fabrics—sarees, dress materials, suitings, shirtings...better in texture, better in colours and designs than any other available fabrics.

Cenray, a Division of Century Rayon, continuously devotes itself to the development of new designs, new mixings, new blends, to promote and popularise the use of rayon. It provides technical counsel and marketing facilities to manufacturers of rayon fabrics who adhere to the exacting standards laid down by Century Rayon's Research and Consumer Service Section. Century Rayon, in short, helps make life not only colourful and comfortable, but also much more exciting!

CENTURY RAYON,
Industry House,
153, Churchgate Reclamation,
Bombay 20.

SAS-CRB

SREE VISALAM CHIT FUND LTD. SVCF. H.O. TIRUNELVELI

உயர்வின் சின்னம்

ESTD: 6-1-1947

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
திருநெல்வேலி-6 போன்: 274

மத்திய அலுவலகமும், முதலீடுகள் பெற்றுக்கொள்ளுமிடமும்:
36-B, மவுண்ட் ரோடு (ஸ்பென்சர் & கம்பெனி எதிரில்)
"S. V. C. F." பில்டிங், சென்னை-2 போன்: 84244

31-3-1969ல் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5 லட்சம்

மொத்த ஆஸ்திகள் ரூ. 2.07 கோடி. சிட்டில் ஈடுபடுத்திய தொகை ரூ. 4.12 கோடி.

செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வும் 1.88 லட்சம்

கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனியின் டிபார்ட்மெண்ட் 29-10-66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC 1/ED (S) 66/- பாரா 2 (1) (f)ல் ஷெட்யூல் (x)ன் படி எமது கம்பெனியின் ஒரு 'டைரக்டரால்' கேரண்டி செய்த லோன் வாங்கப்படுகிறது

தவணை	வட்டி விகிதம் ரூ. 300லிருந்து ரூ. 5,000 வரை	ரூ. 5,000-க்கு மேல்
ஒரு வருடம்	8½% P. A.	9% P. A.
இரண்டு வருடம்	9% P. A.	9½% P. A.

6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செக்குகள் அனுப்பப்படுகின்றன. அவைகளை எங்கள் எந்தக் கிளையிலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

தொழில் விவரம்:

தமிழ்நாடு, பாண்டிச்சேரியிலும் (அந்தந்த மாநில சிட் பண்டு ஆக்ட் பிரகாரமும்) பெங்களூரில் சிட் பண்டு ஆக்டில் இல்லாத பிரதேசம், பிரதி மாதம், மாதம் மும்முறை தினசரி உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல் ரூ. 10,000 வரை மதிப்புள்ள ஏலச் சீட்டுகள் எங்கள் 35 ஆபீஸ்களிலும் நடத்தப்படுகின்றன.

அலுவலக நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர்:
ஸ்ரீ AR. ராமசாமி

டைரக்டர்கள்:
ஸ்ரீ RM. அருணாசலம்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

மத்திய அலுவலக மானேஜர்:
ஸ்ரீ K. A. ராம், B.A., B.L.

கடந்த மூன்று வருடங்களில் ஆதாயமும் டிவிடெண்டும்:

வருடம்	வரி கொடுப்பதற்குமுன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்ட் விகிதம்
1966-67	79686-41	27686-41	16%
1967-68	89468-58	28648-58	17%
1968-69	98125-26	34125-26	17%

பொறுப்புகள் 31-3-1969

செலுத்தப்பட்ட மூலதனம் & ரிசர்வ் நிதி	ரூ.	1,88,601
பிக்ஸட் டிபாசிட்	ரூ.	10,400
ஷேர் ஹோல்டர் டிபாசிட்டுகள்	ரூ.	3,41,050
காரண்டி செய்த லோன்கள்	ரூ.	24,42,278
தற்காலிகக் கடன்	ரூ.	1,30,417
சீட்டு இதர பொறுப்பு வகைகள்	ரூ.	1,76,55,324
மொத்தம்	ரூ.	2,07,68,070

புதிய M. குரூப் ரூ. 25,000 மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 12, சிலேதார் தெரு, திருச்சி (போன்: 4276) லும், 43, விஸ்வநாத ராவ் ரோடு, மாதவநகர், பெங்களூர்-1 (போன்: 75955)லும், 4-A, சண்முகம் ரோடு, தாம்பரம், சென்னை-45லும், (போன்: 89499) 13, வடக்கு வெளி வீதி, மதுரை (போன்: 4880) யிலும், 36-B, மவுண்ட் ரோடு, சென்னை-2 (போன்: 84244)லும் நடைபெறும்.

ஆடிட் செய்த பாலன்ஸ் ஷீட்டுகள் வேண்டுபவருக்கு அனுப்பப்படும்

K. A. ராம், பி.ஏ., பி.எல்.
மத்திய அலுவலக மானேஜர்
அனுமதித்த தேதி: 7-4-70

V. மல்லையா, எம்.ஏ., பி.எல்.
பொதுஜனத் தொடர்பு அதிகாரி

AR. ராமசாமி
மானேஜிங் டைரக்டர்

பொய் சொல்கிறாங்க என்று! இவள் மார்பிலே அடித்துக் கொண்டு அழுது புலம்பினால், அந்தப் பிணத்தின் பெண்சாதி என்று நினைப்பார்களா? இல்லை, நந்து அண்ணனின் பெண்சாதி நம்மோடு வந்து நாடகமாடுகிறாள் என்று நினைப்பார்கள்?'

'அட, பாவிப் பயல் மகனே! மூடடா வாயை!' நந்துவின் மனைவி கொதித்து எழுந்து திட்டத் தொடங்கினாள். அதைக் கேட்டதும் அவனுக்குக் கடகடவென்று ஓர் அதிர்வேட்டுச் சிரிப்புச் சிரித்தால் என்ன என்றுதான் தோன்றியது. நந்துவைத் திரும்பிப் பார்த்தான் அப்போது. அவன் முகத்தில் 'ஜிவு ஜிவு' என்று கடுமை ஏறுவதைக் கண்டதும் தன்னை அடக்கிக் கொண்டான். எங்கேயாவது இவர்கள் கோபித்துக் கொண்டு திரும்பி விட்டால், அவன் போட்ட திட்டம் என்ன ஆவது? ஒன்றிக்கட்டையாக அவன் என்ன புரட்டிவிட முடியும்? பிணத்தை அப்புறப்படுத்த நகரசபையாளர்கள் வண்டியைக் கொண்டு வந்து விட்டால், கெட்டது காரியம்!

உண்மையில் தன் எண்ணத்துக்கு ஈடு கொடுக்கக்கூடிய பங்குதாரர்கள் சேரவே, அவன் ஒரு விதத்தில் கவலையை விட்டொழித்திருந்தான். அவர்கள் இருக்கும் பொழுது தனக்குத் தானே மனம் விட்டுப் பேசிக் கொள்வதில் தவறில்லை என்று எண்ணியவன், அவர்கள் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமே என்பதற்காகத் தன் இயல்பை மாற்றிக் கொள்வதென்றால், எத்தனை சிரமமான காரியம்! நாவைக் கட்டிய நாகமெனப் புழுங்கினான்.

வேகமாக நடக்க முயன்றவன், அதே வேகத்தில் தன் பார்வையையும் ஓட்டினான், சவம் அங்கேயே கிடக்கிறதா, இல்லையா என்று தெரிந்து கொள்ள.

நந்துவின் பெண்சாதி பிணத்தின் அருகில் ஒப்பாரி வைக்க வேண்டும். கைக் குழந்தை அவள் அருகில் இருக்க வேண்டும். மற்ற நால்வரும் தொலைவில் உட்கார்ந்து இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று முடிவாகியது.

சீதாராம் அடிக்கடி அந்தக் குடிசைகள் பக்கம் வந்து போவதுண்டு. பல மாதங்களாக அவன் நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. இதுவரை அவன் பிணமாகாமல், நடைப்பிணமாக உயிரை வைத்துக் கொண்டு எப்படி உலாவினான் என்பதே வியப்பாயிருந்தது.

சவத்தின் அருகில் வேகமாக ஓடி நந்துவின் மனைவி சட்டென்று பழம் போர்வை ஒன்றை இழுத்துப் போர்த்தினாள். அப்புறம் 'ஐயோ முறையோ' என்று கதறலானாள். அந்தக் கதறலைக் கேட்டு அவனுக்கே பெருத்த வெறுப்பாகி விட்டது. 'கூலிக்கு மாரடிக்கும் அவளுக்கு அநாதைப் பிணத்தின் மீது அநுதாபம் ஏற்படும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?'

உள்ளுக்குள் இப்படி நினைத்துக் கொண்டவன், 'தனக்கும் இந்த நிலை பொருந்தும் தானே?' என்ற எண்ணத்தில் மிதந்தான். உடனே ஒரு முடிவுக்கு வந்தான். 'நந்துவின் பெண்சாதியைப் பற்றி ஒரு சொல் நினைக்கப் போய், அது திரும்பத் தன்னையே தாக்கக் கூடியதாக முடியக் கூடாது.'

கவரில் குதிகால்களைத் தேய்த்துக் கொண்டவனுக்கு உடல் முழுவதுமே ஒரு விசித்திர நினைவு எழுந்தாற் போலிருந்தது. கண்ணுக்கும் காதுக்கும் பதிலாக உடல் முழுவதுமே கண்ணும் காதுமாகிக் காணவும் கேட்கவும் தொடங்கி விட்டாற் போல் உணர்ந்தான் அவன். இது வரை அவன் காட்டிய கடுமையும் அச்சமின்மையும் வலுக் கட்டாயமாக வருவித்துக் கொள்ளப்பட்டவை போலத் தோன்றவே, அவன் வானத்தைப் பார்க்கலானான்.


மேகங்களைப் பார்த்தால் மழை வரும் என்று தோன்றவில்லை. சவத்தின்மீது காசு குவிந்த பிறகு பிரியாணி சாப்பிடுவது, கள் குடிப்பது இவற்றைக் காட்டிலும் மேலான செயலைச் செய்வது என்று திட்டமிட்டான் அவன். திட்டமிடும் பொழுது இவையெல்லாம் பாவச் செயல் இல்லையென்றும் முடிவு செய்தான். பிச்சை எடுத்துப் பிச்சை எடுத்து வாழ்நாளை ஓட்டினானே ஒருவன், அவனுடைய பிணத்தைக் கொண்டு ஒரு நாள் காசு சேர்ப்பது அவனுக்குத் தவறாகப்படவில்லை. அதோடு இத்தகைய இழிசெயலுக்கு அவன் ஒருவன் மட்டும் ஆளாகவில்லையே! அவன் பிணங்களைக் கண்டு பயப்படுவதில்லை என்பது மெய்தான். ஆனாலும் இழிசெயலுக்கு அஞ்சாமல் செயல்பட முனையும் பொழுது ஏதோ ஒரு விசித்திரக் குழப்பம் அவன் மனத்தை ஆட்டிப் படைக்கத்தான் செய்கிறது. உருவமற்ற வெறுப்பு உணர்வு மட்டுமல்ல; இன்னும் ஏதேதோ உணர்வுகள் அவன் நரம்புகளில் ஊர்வது போலத் தோன்றுகிறது. ஆனால் அவை என்னவென்று அவனால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை.


நந்து கூப்பிடவே அவன் கவனம் மீண்டும் சீதாராமின் பக்கம் சென்றது. ஒரு போலீஸ்காரர் நின்று கொண்டு ஏதேதோ கேட்டுக் கொண்டிருப்பதை அவன் கண்டான். அவன் அதற்காகச் சிறிதும் அச்சம் கொள்ளவில்லை. இப்படியெல்லாம் நடக்கக் கூடும் என்று அவன் முன்கூட்டியே எதிர்பார்த்ததுதான்.

அடுக்கடுக்காகப் பல கேள்விகளைக் கேட்டுத் துளைத்தெடுத்தபின், போலீஸ்காரர், 'இதோ வந்து விட்டேன், ஒன்றுக்கிருந்து விட்டு' என்று கூறிச் சாக்கடைப் பக்கம் சென்றார். இமை கொட்டு நேரத்தில் அவன் போலீஸ்காரரின் மனத்தைப் படித்துவிட்டான். நல்ல வேளையாக அந்த நேரத்தில் சவத்தின் அருகில் அதிக ஜனநடமாட்டம் இல்லை. பக்கவாட்டில் முழு உள்ளங்கையையும் பரப்பிச் சில்லறை நாணயங்களை எடுத்தான். நந்துவை ஜாடையாகக் கூப்பிட்டு அடங்கிய குரலில் ஆத்திரத்தைக் கொட்டினான்: 'அந்தப் பாவிப் பயலுக்கு இதை வாய்க் கரிசியாகப் போட்டு வா!'

போலீஸ்காரரின் கீழ்ச் செயல் காரணமாகப் பொங்கி வந்த ஆத்திரத்தில் அவனுள்ளே ஒரு அமைதிக்கல் பிறந்தது. ஆனால் பிடி சில்லறையை நந்துவின் கையில் போடும்

வாங்கக் கூடியவற்றுள் தலைசிறந்தது இதோ 4 காரணங்கள்





1

வடிவம் :

ராலி:ஃபேன் அதிநவீன பாணியில் அமைக்கப்பட்டது. நீலம், பச்சை, பேஜ் தந்தம் இந்த 4 வண்ணங்களில் கிடைக்கிறது.

2

இயக்கம் :

ராலி:ஃபேன் அதிக அளவில் குளிர்ச்சியை அளிக்கிறது. ஓசையின்றித் திறம்பட இயங்குகிறது. பக்கத்துக்குப் பக்கம் சுழல்கிறது.

3

அமைப்பு :


ராலி:ஃபேன் கச்சிதமாக அமைக்கப்பட்டது. எடுத்துச் செல்வதும் எளிது. குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படாமலிருக்க பாதுகாப்பு வலை பொருத்தப்பட்டுள்ளது. இயக்கத்தைக் கட்டுப் படுத்த புஷ்-பட்டன் அமைப்புகள்

4

விற்பனைக்குப் பிறகு ஸர்வீஸ் :

ராலி:ஃபேன் முற்றிலும் நம்பகமானது. ராலியின் அனுபவத்தின் அடிப படையில் தயாரிக்கப் பட்டது. ராலி:ஃபேனைப் பழுது பார்க்க இந்திய முழுவதிலும் 150 கேந்திரங்கள் உண்டு.





புள்ளிக் கோட்டை ஒட்டி வெட்டவும்

ராலி:பேன் பற்றிய முழு வண்ணப் பிரசுரத்தை இலவசமாகப் பெற இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து 'ராலிஸ் இந்தியா லிமிடெட் 21, ரேவலின் ஸ்ட்ரீட், பம்பாய்-1' என்னும் முகவரிக்கு தபாலில் அனுப்பவும்.

பெயர் ....

முகவரி ....

சீலிங், பெடஸ்டல், வால் மற்றும் எக்ஸாஸ்ட் வகைகளில் கூட ராலிஃபேன்கள் கிடைக்கின்றன.

தென்றலின் குளுமையை மட்டும் ஃபேன்

ராலி:பேன்

பொழுது, சில்லறை போலவே அதுவும் விழுந்து விட்டது. போலீஸ்காரரின் இழி செயலால் பொங்கி வந்த கோபத்துக்கும் தன் இழி செயலால் அடங்கிக் கிடக்கும் கோபத்துக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவே அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

அவனுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. எதிர்த்தாற்போல் ஒரு ரிக்ஷாவில் சவாரி வரவே, நந்ருவின் மனைவி உரக்கப் புலம்பினாள். குழந்தையைப் பிணத்தின் மீது படுக்க விட்டாள்.

அவன் தன் சிந்தனா சக்தியை ஒருமுகப் படுத்தி யோசிக்கலானான். 'பிணத்தின் மூலம் வருவாயும் பணத்தைப் பங்கிட்டுக்கொண்ட பின் நந்ருவின் மனைவியை என்ன சொன்னாலும் உலையில் காயவைத்த இரும்புக் கம்பியைக் கொண்டு சூடு போட்டாற் போலிருக்கும்? அதைக் கேட்டு அவள் துடிதுடித்துப் போக என்ன சொல்லலாம்?'

குற்ற உணர்வு தன்னையே வாட்டும்போது அது உள்ளுக்குள் இனந் தெரியாததொரு பயமாக உருப்பெறுகிறது. அப்பொழுது மனிதன் தன் கொடுஞ் செயலைப் பிறர்மேல் சுமத்தித் தான் தப்பித்துக் கொள்ள முயல்கிறான் என்பதை அவனால் உணரவும் முடியவில்லை; நம்பவும் முடியவில்லை.

'நீ கல்கத்தாக்காரியைக் காட்டிலும் அற்புதமாக நாடகமாடி விட்டாய்!' என்று நந்ருவின் மனைவியிடம் சொன்னாலே போதுமானது என்று அவன் முடிவுக்கு வந்தான். அதே நேரத்தில் அப்படிச் சொன்னால் பாம்பு தன் வாலையே நக்கிக் கொடுப்பதாக முடியுமே என்ற எண்ணமும் எழாமல் இல்லை.

அவள் தைரியமாகக் காசுகளை அள்ளிக் கொள்வதை அவன் கண்டான். அவள் குழந்தையும் சில காசுகளைப் பிடித்து அள்ளிக் கொண்டிருக்குமோ என்று எண்ணி அதன் கையைப் பார்த்தான். உடனே அவனுக்கு அந்த இரு குழந்தைகளின் நினைவு வந்தது. காசை எடுக்கும்பொழுது அவை எவ்வளவு கவனமாயிருந்தன? அந்தக் கவனம் தனக்கும் வேண்டும், இல்லாவிட்டால் ஏமாற வேண்டியதுதான் என்று தோன்றியது அவனுக்கு.

பிணத்தைக் கொண்டு பணம் சேர்ப்பதில் உள்ள பயம் அவனுக்கு நீங்கிவிட்டாற் போலிருந்தது. சீதாராமனின் சடலம் போயிருந்த பயங்கரப் போக்கைக் கண்டுகூட அவனுக்குப் பயம் ஏற்படவில்லை. சேரும் காசுக்கு நான்கு பங்குதாரர்களாகிவிட்டார்களே என்றுகூட அவன் வருந்தவில்லை. ஆனால் நந்ரு அவன் மனைவி இருவரையும் தவிர, இன்னும் இரண்டு 'விடுவெட்டி'களைச் சேர்த்துக்கொண்டதுதான் அவன் மனத்தை என்னவோ செய்தது; நெருஞ்சியாகக் குத்தியது.

சீதாராமனின் சடலத்திலிருந்து போர்வையை அகற்றிப் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடும்பொழுது அஞ்சி அஞ்சிச் சாக வேண்டுமோ? இந்தப் பயமே அவனுக்கு உண்டாகவில்லை. நந்ருவின் மனைவியிடம் மட்டும் அவனுக்கு ஏனோ சொல்ல முடியாத வெறுப்பு. அதே நேரத்தில் ஒரு யோசனையும் கூட. 'அவனும் அவளைப்போல் பெண்ணாக இருந்தால் அவளைக் காட்டிலும் பொல்லாத்தனமாகக் கதறி ஒருவேளை ஊரையே கூட்டியிருப்பானோ, என்னவோ?'

உண்மையில் அவனால் தன் கீழ்த்தனத்தை எத்தனையோ முயன்றும் அடக்க முடியவில்லை. தன்மீதே அவனுக்கு வெறுப்பு வேர் விட்டுக் கிளைத்துக் கொண்டிருந்தது. என்னதான் கவடு மாற்றி விட்டாலும் மனம் இதை ஒப்புக்கொள்ளவே விழைந்தது.

நந்ருவின் பெண்சாதி சீதாராமின் சடலத்திலிருந்து யாரும் பார்க்காத சமயமாகப் பார்த்துக் காசுகள் சேர்ந்த பழைய போர்வையை அப்படியே லாகவமாகச் சுற்றினாள். அதைக் காணவும் அவன் நிம்மதியாக நீண்ட மூச்சு விட்டான். அடுத்தபடியாக அவன் பார்வையில் பட்டது சடலத்தின் வெறுங் கால்கள்! மின்னல் வெட்டினாற்போல் அவன் கண்கள் இருண்டன.

அடுத்த கணம் தானே நிர்வாணமாகி விட்டது போல அவன் உணர்ந்தான். நந்ருவின் மனைவியோ அல்லது வேறு எந்தப் பெண்ணோ அந்தப் போர்வையை அவன்மேல் போர்த்தி அதேபோல அழுது புரண்டு காசு சேர்த்ததும் வெடுக்கென்று இழுப்பது போலத் தோன்றியது. அது மட்டுமா? 'டேய்! சீதாராமின் சடலத்தின் மீது பணம் சேர்ப்பதற்காக ஏன் இப்படி வருந்துகிறாய்? நீ இறந்தாலும் உன் பிணத்தின் மீதும்...'

யார் இப்படிக் கூறுகிறார்கள் அவன் மனத்தின் அடித்தளத்தில்?

கூட அழைத்துப் போவதற்காக நந்ரு அவன் தோள்பட்டையில் கை வைத்தான். சட்டென்று அவன் தாவிக் குதித்துத் தள்ளி நின்றான். இயந்திரத்தால் முடுக்கப்பட்டவன் போல் அவன் பையிலிருந்து கத்தியை எடுத்தான். வில்லை அமுக்கினான். 'கர்...கர்...கர்'

தனக்குள்ளாக முழு பலத்தையும் ஒன்று கூட்டி அவன் உரக்கக் கூச்சலிடுவதுபோல் உணர்ந்தான்: 'எந்தத் தாய்...பயல் என் பிணத்திலிருந்து...'

அவன் உதடுகள் இனம் புரியாமல் முணுமுணுத்தனவே தவிர அச்சத்தில் எந்தச் சொல்லுமே வாயிலிருந்து வரவில்லை என்பதை அவன் கண்டான்.

மறுகணம் அவன் கைப்பிடி தளர்ந்தது. இத்தனை நேரமும் எந்த உருத் தெரியாத பயத்தை அவன் உள்ளுக்குள் அநுபவித்துக் கொண்டிருந்தானோ, இனம் கண்டுகொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தானோ, அதுவே உருப் பெற்று அவன் எதிரே நிற்கிறாற் போலத் தோன்றியது. அவன் தன் மனத்துப் பலவீனம் இயலாமை அனைத்தையும் ஒன்று கூட்டி உரக்கத் தொண்டையைக் கனைத்துக் காறி உமிழ்ந்தான். நந்ரு தட்டுத் தடுமாறிச் சட்டென்று பின் நகர்ந்தான்.

'அந்தப் பாவிப் பயல் மகன் போலீஸ்காரன்தான் தோளிலே கைபோட்டுவிட்டானாக்கும் என்று நினைத்தேன்!' அலட்சியமும் அமைதியும் நிறைந்த குரலில் நந்ருவிடம் கூறினான். பிறகு கத்தியை மடக்கிப் பையில் வைத்துக் கொண்டு, அவனுக்கு முன்னால் நடந்தான், நந்ருவின் பெண்சாதியைப் பின் தொடர்ந்து! தமிழாக்கம்: ரா. வீழிநாதன்



ரகுபதி ராகவ் மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

26

பிரார்த்தனை வழிபாட்டின் சாரமும் உயிரும் ஆகும். வழிபாடு இல்லாமல் மனிதன் பிழைத்திருக்க முடியாது. ஆகவே பிரார்த்தனை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. சிலர் தங்களுடைய பகுத்தறிவை மெச்சித் தமக்குச் சமய வழிபாடு வேண்டியதில்லை என்று சொல்வார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், எனக்கு மூக்கு இருக்கிறது. ஆனால் மூக்கு இல்லை என்று சொல்வது போலாகும். பகுத்தறிவைக் கொண்டோ, இயற்கை உணர்வைக் கொண்டோ அல்லது மூட பக்தியினாலோ ஏதோ ஒருவிதத்தில் பராசக்தியின் தொடர்பை மனிதன் ஒப்புக்கொண்டே இருக்கிறான். தீவிர நாஸ்திகனும், கடவுட் தத்துவம் அறிவுக்கு எட்டாதது என்று வாதிப்பவனும் யாருமே நன்னெறி வேண்டும் என்றே சொல்லுகிறார்கள். நன்னெறியில் நடப்பது நல்லது என்றும், தவறுவது தீது என்றும் சொல்லித்தான் வருகிறார்கள். ப்ராட்லா என்பவர்-அவருடைய நாஸ்திகம் உலகம் அறிந்தது - தான் உண்மை என்று கொண்டதை மறைத்து வைக்க இயலாது, பகிரங்கமாகப் பறைசாற்றி வரவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். இதற்காகப் பல தொந்தரவுகளும் பொறுத்தார். அதிலேயே அவருக்கு மகிழ்ச்சி. உண்மையே முறையும் பயனும் என்பார். உண்மை மார்க்கத்தில் சந்தோஷத்தைக் கண்டார். கஷ்டங்களுக்கு இடையில் இந்தச் சந்தோஷம் அவருக்கு எங்கிருந்து உண்டாயிற்று? பராசக்தியின் தொடர்பினால்தான் என்று நான் சொல்லுவேன். இதனாலேதான் எந்த மதமும் எந்த சமயமும் வேண்டாம் என்பவனும்கூட ஏதோ ஒரு வித வழிபாட்டை ஒப்புக்கொண்டுதான் வாழ்கிறான் என்பேன்.

இப்போது பிரார்த்தனையைப் பற்றிப் பேசுவோம். பிரார்த்தனை என்றால் வேண்டுதல் அல்லது தியானம். ஒன்று வேண்டும் என்று இறைஞ்சுதலும் பிரார்த்தனையே. உள்ளத்தைத் தியானத்தில் நிறுத்தலும் பிரார்த்தனையே. முடிவில் இரண்டும் ஒன்றேயாகும். இறைஞ்சுதலாயினும் உள்ளத்தை மாசுநீக்கிச் சுத்தப்படுத்துதலையே வேண்டுதல் செய்ய வேண்டும். மேலே மூடிக் கிடக்கும் அறியாமையும் இருளும் அகல வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். தனக்குள்ளே இருக்கிற தெய்வப் பண்பை எழுப்பி அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்படுபவன் இறைஞ்சித்தான் தீரவேண்டும். ஆனால் பிரார்த்தனை என்பது வெறும் மந்திர உச்சாடனமோ ஜபமோ செய்வது அல்லது செய்வதைக் கேட்பது அல்ல. ராம நாமத்தை ஆயிரம் தடவை செய்தாலும் உள்ளம் கரையாமல் செய்தால் பயனில்லை. பிரார்த்தனைச் சமயத்தில் ஒருவன் வாய் திறவாமல் உள்ளத்தினால் அதில் கலந்து கொள்ளலாம். ஒருவன் வாய்க்குள் உச்சரித்துக் கொண்டே உள்ளம் சேராமல் இருக்கலாம். பேச்சின்றிப் பிரார்த்தனையில் கலந்து கொண்டவன் மேலானவன். வாயில் சொல்லும் மந்திரமோ, வாக்கியமோ உள்ளத்திலிருந்து எழுந்த ஆர்வத்தோடு ஒட்டியிருக்க வேண்டும். பசியடைந்தவன் இலை முன் உட்கார்ந்து எப்படி உணவை அனுபவிக்கிறானோ, அவ்விதம் பசி கொண்ட உள்ளம் பிரார்த்தனையினால் மகிழ்ச்சி அடையும்.

என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். என்னுடைய சகாக்களின் அனுபவத்தையும் சொல்கிறேன். பிரார்த்தனையின் அற்புத ஆனந்தத்தைக் கண்டவர் பல நாள் உணவு இல்லாமல் இருக்க முடியும். ஒரு கணமும் பிரார்த்தனை இல்லாமல் மட்டும் இருக்க முடியாது. பிரார்த்தனை இன்றி உள்ளத்தில் குழப்பம் அடங்கி அமைதி நிலவாது.

அப்படியாயின் எந்த ஒரு நிமிஷமும் இடைவிடாமல் பிரார்த்தனை செலுத்திக்கொண்டே இருக்க வேண்டுமோ என்று சிலர் கேட்பார்கள். உண்மைதான். ஆனால் ஒரு க்ஷண நேரம் முற்றிலும் ஒடுங்கித் தியானம் செய்வதே நமக்குக் கஷ்டமாக இருக்கிறதே. நாம் எப்படி எந்நேரமும் தியானத்தில் மூழ்க முடியும்? இதனாலேதான் ஒரு நேரம் குறிப்பிட்டு ஓரளவு காலம் பாசமும் பற்றும் நீக்கிக் கொண்டு தியானிக்க யத்தனம் செய்கிறோம். இந்தத் தேகத்தை விட்டுக் கொஞ்ச நேரமாவது உயிரைத் தனியே நிறுத்தப் பார்க்கிறோம். சூரதாசரின் பாடல் கேட்டிருப்பீர்களே. ஈசனோடு கலந்து போக வேண்டும் என்று புலம்புகிறார். நாம் அவரை ஒரு புனித பக்தராகப் பாவிக்கிறோம். அவருடைய கணக்கில் தன்னைத்தான் ஒரு பெரும் பாவியாகக் கருதுகிறார். நம்மைவிட வெகு தூரம் மேல் சென்றுவிட்ட அவர் ஈசனை நோக்கி, 'நீ எவ்வளவோ தூரத்தில் இருக்கிறாயே?' என்று புலம்புகிறார். அந்தத் தொலைவின் அளவு மிகப் பெருந் துன்பம் தருகிறது. அதனால் தன்னைத்தான் இகழ்ந்தும் வெறுத்தும் புலம்புகிறார். ''என்னைப் போன்ற ஒரு கொடியவன், மோசக்காரன், காமுகன் யார் உண்டு?'' என்கிறார்.

மோஸம கௌஸ ஞுடல கல காமீ


மலையாளம்

அடிவயிற்றின் வலது பக்கம் அவர் மெதுவாகத் தடவினார். அங்குதான் வலி. அங்கு ஒரு சிறு வீக்கம் இருப்பதாக ஓர் எண்ணம். குடலுக்கு ஏதாவது ஊறு விளைந்திருக்குமோ என அவர் சந்தேகப்பட்டார். ஒருவேளை சிறு நீரகத்தில் ஏதாவது கோளாறு இருக்கலாம். அப்படியானாலும் குடல் பக்கம் வீங்குமா? இல்லாவிடின் வேறு என்ன காரணம்?

அவர் நினைத்துப் பார்க்கலானார். அநேக வருஷங்களுக்கு முன்னால் அவர் மலேயாவுக்குப் போவதற்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம். ஒருதடவை அவருக்கு ஒரு நபருடன் கைகலக்க வேண்டி வந்தது. எதிரி அடிவயிற்றின் வலது பாகத்தைப் பிடித்தான். பிடித்த கையை உடனே அவர் தட்டி அப்புறப்படுத்தவும் செய்தார். ஒருவேளை அன்று குடலில் அந்தப் பகுதியில் ஏதாவது காயம் பட்டிருக்குமோ என்று அவர் ஐயப்பட்டார். இல்லாவிடில் இப்படி வலி எடுக்கக் காரணமில்லை.

குடலில் ஏதாவது காயம் பட்டிருந்தால் ஏன் பிறகு வலியெடுக்கவில்லை என்று அவருக்கு வியப்பு ஏற்பட்டது. ஒருவேளை வாலிபத்தின் தெம்பாலும், ஆரோக்கியத்தின் வலிமையினாலும் குடலில் ஏற்பட்ட ஊறு தெரியாமல் போயிருக்கலாம். இதெல்லாம் நடந்து எத்தனை ஆண்டுகள் ஆயின! வயது ஐம்பத்திரண்டு ஆகவில்லையா? காயம் பட்ட குடல் முதுமையின் காரணமாக வேலை செய்யாத நிலையை அடைந்திருக்கலாம். இந்த வலிக்கும் வீக்கத்துக்கும் இதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

அவர் மேலும் யோசிக்கலானார். குடலுக்கு ஏதாவது ஊறு விளைந்திருக்குமேயானால் டாக்டர் ஏன் அதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை? எல்லாவிதமான சோதனைகளும் நடத்தியாகி விட்டதே? எக்ஸ்ரேகூட எடுக்கவில்லையா? இருந்தும் டாக்டர் ஏன் அதைக் கண்டுபிடிக்கவில்லை? குடலுக்கு எவ்வித ஊறும் இல்லாமல் இருக்கலாம். அல்லது உணவில் ஏதோ குறைபாடாகவும் இருக்கலாம்.

வாயுவாக இருக்கவும் கூடும். வாயு உபாதை உண்டாகும்படியாக ஏதும் சாப்பிடவில்லையே! அப்படிப்பட்ட எந்த விதமான உணவும் சமைக்கக் கூடாது என்று வேலைக்காரனுக்குக் கண்டிப்பான உத்தரவு. அவன் உணவில் அப்படி ஏதாவது சேர்த்திருப்பானோ? இருக்காது. அவனுக்கு அவரைக் கண்டால் மிகவும் பயம். தன் வயிற்றுப் பிழைப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது அவர் கட்டளையை மீறி நடக்க அவன் துணியமாட்டான். இல்லை. அவன் அப்படி ஒன்றும் செய்திருக்க மாட்டான். சாதாரணமான இந்த வேலைக்கு அதிலும் ஒரே ஒரு நபருக்குப் பணிவிடை செய்ய அவனுக்குக் கிடைப்பது மாதம் ஐம்பது ரூபாய். இப்படிப்பட்ட வேலை கிடைப்பதே கடினம். அப்படி இருக்க அவன் ஏதாவது தாறுமாறாகச் செய்ய எண்ணுவானா? அவர் உத்தரவு மீறி நடந்தால், தன் வேலை போய்விடும் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்.



திரு நந்தகுமார் கேரளத்தில் கொடுங்கல்லூரில் அரச குடும்பத்தில் பிறந்தவர். மருந்துவப் பிரதிநிதியாக வாழ்க்கையை ஆரம்பித்த திரு நந்தகுமார் தற்போது 'யாத்திரை' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். சுமார் இருநூறு சிறுகதைகளும் ஒரு டஜனுக்கு அதிகமான நாவல்களும் படைத்துள்ள இவ்வாசிரியரின் 'ரக்தமில்லாத மனுஷ்யன்'' (இரத்தமில்லாத மனிதன்) தமிழ் நாட்டைப் பின்னணியில் வைத்துப் படைத்துள்ள ஓர் அரிய படைப்பு. வாழ்க்கையில் அழகைக் காணும் இவர், 'இனக் கவர்ச்சிக்காக மட்டும் ஓர் இலக்கியகர்த்தா இலக்கியம் படைப்பதில்லை' என்னும் கருத்தைக் கொண்டுள்ளார். இனக் கவர்ச்சியுள்ள இலக்கியத்தை விரும்புகிறவர்கள்தான் இனக் கவர்ச்சியை எதிலும் காண முயல்கிறார்கள் என்பது இவரது வாதம். நாவல் எழுதுவதைவிடச் சிறுகதை எழுதுவது கடினம் என்கிறார் திரு நந்தகுமார். இவருக்கு மணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றன.

படிக்கட்டுகள்

வி. டி. நந்தகுமார்



அவர் மீண்டும் அடிவயிற்றைத் தடவிப் பார்த்தார். அந்த வீக்கம் அப்படியே இருந்தது. வாசற்பக்கம் போனால் எல்லாம் சரியாகி விடும் என்று அவருக்குத் தோன்றிற்று. அங்கே வராந்தாவில் நின்றால் மேற்கிலிருந்து சிலுசிலுவென வீசும் காற்று வாங்கலாம். அப்பொழுது சற்று நிம்மதி கிடைக்கும். அவர் எழுந்து வராந்தாவை நோக்கி நடந்தார்.

மாலை மயங்கும் நேரம். அரண்மனை போன்ற அந்தப் பெரிய மாடி வீட்டின் வராந்தாவில் நின்றபடியே அவர் வெளியே பார்த்தார். அவர் பார்வை மெல்ல மெல்ல அந்தப் படிக்கட்டுகளை வந்தடைந்தது. அந்தப் படிக்கட்டுகள் கீழே போய்க் கொண்டேயிருந்தன. அவை மொத்தம் எத்தனை படிக்கட்டுகள் இருக்கக் கூடும் என்று அவர் யோசித்துப் பார்க்கலானார். அந்த வீட்டைக் கட்டும் போது எத்தனை படிக்கட்டுகள் வேண்டும் என்று மேஸ்திரி கேட்டது அவருக்கு நினைவு வந்தது. நூறோ அல்லது நூற்றி ஒன்றோ படிக்கட்டுகள் கட்டச் சொன்னதாக அவருக்கு ஞாபகம்.

இந்த நூறு படிக்கட்டுகளும் இறங்கினால் தான் முற்றத்தை அடைய முடியும் என நினைத்துப் பார்த்தபோது அவருக்குக் கஷ்டமாக இருந்தது. 'இத்தனை படிக்கட்டுகளில் எப்படி இறங்க முடியும்?' என்று அன்று யோசிக்காமல் இருந்ததில் அவருக்கு ஆச்சரியம் மேலிட்டது. அன்று இந்த வீட்டைக் கட்டுவித்த நாட்களில் நூறல்ல, ஆயிரம் படிக்கட்டுகளை ஒரே மூச்சில் ஏறி இறங்க அவருக்கு உடல் வலிமை இருந்தது.

ஆனால் அதெல்லாம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்! மலேயாவிலிருந்து மலைமலையாகப் பொன்னுடனும் மணியுடனும் வந்த அந்த நாட்களில் உடல் வலிமையும், செல்வத்தின் செல்வாக்கும் அவருக்கு நிறைய இருந்தன. அரண்மனை போன்ற ஒரு வீடும் நிறைய நிலபுலன்களும் வேண்டும் என்றுமட்டும்தான் அவர் எண்ணியிருந்தார். அந்த எண்ணத்தில் தோன்றியது அந்த வீடு — ஒரு மூன்றடுக்கு மாளிகை! அதில் மொத்தம் பதினாறு அறைகள்! ஒவ்வொரு அடுக்கிலும் படுக்கை அறை, குளிப்பதற்கும் மற்றுமான வசதிகள் வேறு இருந்தன.

இடீரென்று அவர் தமக்குத் தாமே ஒரு கேள்வி கேட்டுக் கொண்டார். ஒரு நபருக்கு வசிப்பதற்கு அரண்மனை போன்று இவ்வளவு பெரிய ஒரு வீடு தேவைதானா? நிச்சயமாகத் தேவையில்லை என்றுதான் அவருக்குத் தோன்றிற்று. 'பின் எதற்காக இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டுவித்தோம்?' என எண்ணிய போது அவருக்கு வியப்புக்கு மேல் வியப்பு ஏற்பட்டது. அன்று தமக்கு இருந்த ஆசைகளை அவர் நினைத்துப் பார்த்தார். முதுமை, நினைவின் வலிமையினைக் குன்றச் செய்திருந்தாலும், செல்வந்தராவதற்கு முன் இருந்த அந்த நாட்கள் அவர் மனத்தில் பளிச்சிட ஆரம்பித்தன. அந்த நாட்களில் அவர் எந்த விதமான சுகத்தையும் அனுபவித்தறிந்திருக்கவில்லை, கசப்பான வாழ்வின் துன்பம் நிறைந்த நாட்கள். ஒரு வேளை உண்டு உயிர் வாழ்வதற்கு எத்தனை எத்தனை போராட்டம்!


சொந்த ஊரில் வாழ்வதற்கு வழி காணாமையால் அவர் வேற்றூருக்குப் போக நிச்சயித்தார். கடைசியாக அவர் மலேயாவை அடைந்தார். இவ்வளவு பெரிய செல்வச் சீமானாக முடியும் என்று அவர் அன்று கனவு கூடக் கண்டிருக்கவில்லை. இருப்பினும் ஓர் அற்புதம் போல் அதெல்லாம் நிகழ்ந்தது. அன்றெல்லாம் அவர் மேலும் மேலும் பணம் திரட்டும் முயற்சியிலன்றோ ஈடுபட்டிருந்தார். அந்த முயற்சியின்போது வேறு எதைப் பற்றியாவது சிந்திக்கவோ, செயலாற்றவோ தோன்றவில்லை. ஆண்டுகள் பல கடந்து சென்றன. தேவைக்கும் அதிகமான பணம் குவிந்தபோது அவர் மலேயாவை விட்டு விட்டுச் சொந்த ஊரில் சென்று வசிக்கலாம் என்று நிச்சயித்தார்.

ஊருக்குத் திரும்பி வந்து, அரண்மனை போன்ற அந்த வீட்டைக் கட்டி, வசிக்க ஆரம்பித்த நாளிலிருந்து தாம் கடந்த காலத்தில் அனுபவிக்க முடியாமல் விட்டுப் போன எல்லா இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணம் ஒரு பேய் போன்று அவர் உள்ளத்தில் குடிபுகுந்தது. எந்த விதமான சுகமும் அனுபவிக்காமல் பாழாய்ப்போன வாலிபத்தை எண்ணி அவர் பெருமூச்சு விட்டார். மலேயாவுக்குப் போகு முன்னர் முகம் கொடுத்துக்கூடப் பேசாதிருந்தவர்கள் பலர் அவரை நாடி வரவும் நட்புக் கொள்ளவும் முனைந்தார்கள். தம் செல்வம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று தெரிய வந்ததால் அவர்களிடமிருந்து அவர் வேண்டுமென்றே விலகினார். அதற்குக் காரணமும் இருந்தது.

அவர்களில் யாரையுமே அவருக்கு வேண்டியிருக்கவில்லை. சிலர் அவர் தனிமையைப் பற்றிச் சூசகமாகக் குறிப்பிட்டுத் திருமணம் புரிய வேண்டியதன் அவசியத்தைப் பற்றிச் சொன்னார்கள். திருமணம் ஒரு தேவையாக அவருக்குத் தோன்றாமையால் அவர் அதையெல்லாம் செவிமடுத்துக் கேட்கவில்லை. அவர் அதன் காரணத்தைத் தம் நினைவுகளில் தேட முயன்றார். அவருடைய வாழ்க்கையே அந்த வினாவுக்கு விடையாக இருந்தது. செல்வத்தாலும் அதன் செல்வாக்காலும் சாதிக்க முடிந்ததையெல்லாம் சாதித்தார். அனுபவிக்க முடிந்ததையெல்லாம் அனுபவித்தார். அதனால் வேறு எதுவுமே தேவையற்றதாகிவிட்டிருந்தது. அப்படிப்பட்ட ஊதாரித்தனமான வாழ்க்கையில் ஆண்டுகள் பல கடந்து சென்றதை ஏன் கவனிக்கவில்லை என்று ஆச்சரியத்துடன் நினைத்துப் பார்த்தார்.

வயிற்று வலி சற்று அதிகமானது போல் அவருக்கு ஒரு பிரமை. அடிவயிற்றின் வலது பாகத்தில் மேலும் வீங்கியிருக்கிறதா? அவர் சோபாவில் போய் அமர்ந்தார். வயிற்றின் மீது வீங்கின அந்தப் பகுதியில் தடவினபோது அவருக்கு வலி சற்றுக் குறைந்தது போல் இருந்தது.

அந்தி மாயும் நேரம். இரவு நெருங்க நெருங்க வியாதி அதிகமாகும். இரவில் வியாதி மனிதனைத் தன் முழு பலத்துடன் தாக்கும், பகலில் பொறுத்துக் கொள்ளக்



டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

அருணா

பாலப்ராஸ

குழந்தைகள் டானிக்

ரக்த சோதகா

சயவனப்ராசனம்

இருமலுக்கு

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட்

மூல நோயை

முற்றவிடாமல்

நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து

நிவாரணம்

அடையுங்கள்;

—ரண

சிகிச்சையையும்

தடுங்கள்



Sunsilk cares–

with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease...gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair...revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk - more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-4[illegible]

கூடிய வலியாக இருந்தால் இரவில் அது தாங்க முடியாததாகி விடும். இதுவும் ஒரு வேளை ஒருவிதமான பிரமையாக இருக்கலாம். அந்தி மயங்க மயங்க இருள் கவ்விக் கொண்டிருந்தது. அவர் படிக்கட்டுகள் வழியாகக் கீழே பார்த்தார். அங்கிருந்து ஒரு பர்லாங்கு தூரம் போனாலும் மேற்கே கடற்கரை வரையில் உள்ள அந்தப் பரந்த வயல் அவருக்குச் சொந்தமானது.


அந்தப் படிக்கட்டுகள் இறங்கி நேரே மேற்குப் பக்கம் கடற்கரை வரை தமக்குச் சொந்தமான நிலத்தின் மீதே நடந்து போகலாம் என்று எண்ணியபோது அவருக்கு வயிற்று வலி சற்றுக் குறைந்தது போலிருந்தது. இதற்குள் அந்தி மறைந்து விட்டிருந்தது. அந்தப் பரந்த வயற்காட்டுக்கு இருள் ஒரு கறுத்த கம்பளி ஆடையை அணிவித்தது. சந்தடி ஓய்ந்து எங்கும் பயங்கரமான நிசப்தம் நிலவியது. ஒரு சில்வண்டின் சத்தம் கூட இல்லை. ஒரு மின்மினிப் பூச்சி கூட மினுமினுக்கவில்லை. எங்கும் இருளின் ஒரு பிரளயம். அந்தப் பக்கம் பார்த்தபோது அவரைச் சற்றுத் திகில் கொள்ளச் செய்யும்படியான ஓர் எண்ணம் அவர் மனத்தில் உண்டாயிற்று. அவர் மெல்லத் தம் பார்வையை அங்கிருந்து அகற்றினார். திடீரென்று அவர் பார்வை குளம் இருக்கும் அந்த இடத்தில் தங்கி நின்றது. தரையையும் குளத்தையும் வேறாக அறிவது அந்தக் காரிருளில் கடினமாக இருந்தது. இருப்பினும் கருமை ஒன்று திரண்டுள்ள அந்த இடத்தில்தான் குளம் இருக்கும் என அவர் யூகித்தார். அப்படி அந்தக் குளத்தையே பார்த்துக் கொண்டிருக்கும்போது சில சம்பவங்கள் அவரை அல்லற்படுத்தியவாறே நினைவில் வந்தன.

மலேயாவிலிருந்து திரும்பி வந்து அதிக நாட்கள் ஆகியிருக்கவில்லை. ஓர் இரவின் இன்பத்துக்காகப் பணத்தை வாரி இறைக்கத் தயாராக இருந்த காலம். ஓர் இரவு அவனை ஒருவன் கொண்டு வந்தான். தன்னுடன் இரவில் அங்கே தங்குவதற்குச் சம்மதம் தானா என்றுகூட அவனிடம் கேட்டறிய அவர் முனையவில்லை. அதையெல்லாம் தெரிந்து கொள்ளத் தேவை உண்டாகவில்லை. எல்லாம் முடிந்து பொழுது விடிந்தபோதுதான் விஷயம் எவ்வளவு சிக்கலானது என்று அவருக்குத் தெரிய வந்தது. வீட்டில் அவனைக் காணோம். விடியுமுன்னரே அவன் எழுந்து போயிருப்பான் என அவர் முதலில் நினைத்தார்.

ஆனால் நடந்தது வேறு. அதைத் தெரிந்துகொள்ள நான்கைந்து நாட்களாயின. ஐந்தாவது நாள் அவனது பிணம் குளத்தில் மிதந்தது. அந்தச் சம்பவம் வதந்திகளாக மாறி, அவர் தம் செல்வாக்கையும் பணத்தின் வலிமையையும் முழுமூச்சுடன் பயன்படுத்த அந்த வதந்திகள் அமிழ்ந்து போயின. ! இருப்பினும் அந்தக் குளத்தைப் பார்க்கும்போதெல்லாம், அவருக்கு என்னமோ போலிருந்தது.

ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் பிராட்மன் வெகு நன்றாக ஆடி ரன்களைக் குவித்துக் கொண்டிருந்தார். லார்ட்ஸ் மைதானத்துக்குள் ஆஸ்திரேலிய பன்னிரண்டாவது ஆட்டக்காரர் கையில் தந்தியுடன் ஓடி வந்தார். ஆட்டம் உடனே நின்று விட்டது. ஆட்டக்காரர்கள் அனைவரும் பிராட்மனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு 'என்ன? என்ன?' என்று கேள்விக் குறியை எழுப்பினார்கள். லார்ட்ஸ் மைதானம் திகைத்துப் போயிருந்தது. பிராட்மன் தந்தி உறையைப் பிரித்துப் படித்தார். பிராட்மனின் ரசிகர் ஒருவர் அவரது ஆட்டத்தை மெச்சி ஆயிரம் பவுன் அளித்திருப்பதாகத் தந்தியில் தெரிவித்திருந்தார்!

- குண்டுமணி



அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது வயிற்று வலியும் வலது பக்கத்து வீக்கமும் அதிகமாகிக் கொண்டே வருவது போல அவருக்குத் தோன்றிற்று. வீக்கம் அதிகமாகி ஒரு குமிழ்போல் பெரியதாகிறதா என்ன? உடனேயே அவர் தமது பார்வையை அங்கிருந்து அகற்றினார். அவர் வயலையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வயலுக்கு அருகில் இருந்த பாழடைந்த ஒரு சிறு தண்ணீர்ப் பந்தலுக்குள்ளிருந்து திடீரென்று ஒரு திவட்டி எரிய ஆரம்பித்தது. அதுதான் பைத்தியக்கார நாணுவின் பயணம் ஆரம்பிப்பதன் அறிகுறி. சென்ற முந்நூறு நாட்களாக நாணு எங்கோ சென்றிருந்தான். அந்தத் திவட்டி கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. நாணு சைக்கிளில் திவட்டியுடன் அந்தத் தண்ணீர்ப்பந்தலிலிருந்து கிளம்பி அவர் வீட்டைக் குறி வைத்துப் பாய்ந்து வந்தான். வயலினுடைய எல்லையை அடைந்ததும் சைக்கிளின் திசையை மாற்றினான். சைக்கிளை வலது பக்கம் திருப்பி வயலினுடைய வலது கோடி வரையில் அவன் சைக்கிளை வேகமாகச் செலுத்தினான். சைக்கிள் கோடியை அடைந்ததும் மறுபடியும் மேற்குப் பக்கம் திருப்பினான். இப்படியாக வயலை அவன் ஒரு தடவை வலம் வந்தான். மறுபடியும் முன்போல் பன்முறை அவன் வயலை வலம் வரலானான்.

தன் மகளின் பிணத்தைக் குளத்திலிருந்து கண்டெடுத்த நாளிலிருந்து நாணுவுக்குப் பைத்தியம் பிடித்தது. இரவில் அவன் நடத்தும் சைக்கிள் வேள்விகூட அன்றிலிருந்து ஆரம்பித்ததுதான். அதன் பிறகு அவன் சைக்கிளிலிருந்து இறங்கவில்லை என்று வேண்டுமானாலும் கூடச் சொல்லலாம். இரவானால் அந்தத் திவட்டியைக் கொளுத்தெரிய விட்டு நாணு தண்ணீர்ப்பந்தலிலிருந்து தன் பயணத்தை ஆரம்பிப்பான். பிறகு சைக்கிளில் அந்த வயற்காட்டைப் பன்முறை சுற்றி வருவான். அப்பொழுதெல்லாம் அவன் பார்வை குளத்தின்மீதோ அல்லது அவருடைய மாளிகையின் மீதோதான் இருக்கும். அவருடைய வீட்டை நெருங்கினதும் கையைத் தூக்கி என்னவெல்லாமோ உரக்கக் கத்துவான். சில நாட்களில் நாணு இரவு முழுதும் அவருடைய வீட்டை வட்டமிடுவான். அவன் செய்வதையெல்லாம் கவனித்தால் அவன் இரவில் தூங்குவதே இல்லையா என்றுகூட நினைக்கத் தோன்றும். சில நாட்களில் நாணு காலை நேரத்திலகூடச் சைக்கிளில் சுற்றுவான்.

அவர் எழுந்து உள்ளேசென்று ஒருசோபாவில் அமர்ந்தார். அந்த வரவேற்பு அறையின் சுவரில் மாட்டியிருந்த அந்தப் பெரிய கடிகாரத்தைப் பார்த்தபோது மணி எட்டேகால் ஆனது தெரியவந்தது. ஒருவேளை அவன் வரமாட்டானோ என்று அவர் சந்தேகம் கொண்டார். நான்கைந்து நாட்களுக்கு முன்னுதான் கல்யாணி அம்மாள் தன் முதல் பெண் சீமந்தினிக்கு ஒரு வேலைக்குச் சிபாரிசுக்காக அவரைப் பார்க்க வந்திருந்தாள். எஸ். எஸ். எல். ஸி. வரை படித்திருந்த சீமந்தினி டைப்ரைட்டிங்கிலும் தேர்வு பெற்றுள்ளவள்

சீமந்தினியைத் தவிரக் கல்யாணி அம்மாளுக்கு ஏழு பெண்கள். கணவன் இறந்ததிலிருந்து வீட்டைக் காப்பாற்றப் படாத பாடு படுகிறாள். சீமந்தினிக்கு ஒரு வேலை கிடைத்தால் அது அவளுடைய பளுவைச் சற்றுக் குறைக்கும். அவர் செல்வாக்கைப் பயன்படுத்தி எங்கேயாவது வேலை வாங்கிக் கொடுத்தால் அது பேருதவியாக இருக்கும் — இவ்வாறெல்லாம் கல்யாணி அம்மாள் பரிந்துரைத்தாள்.

அதெல்லாம் சொல்லி முடியுமட்டும் அந்த அம்மையார் நின்று கொண்டிருந்தாள். அவர் கல்யாணி அம்மாளை உட்காரும்படி சொன்னார். வற்புறுத்தினதின்பேரில் அந்த அம்மையார் சோபாவில் ஓர் ஓரத்தில் அமர்ந்தாள். அப்போது கல்யாணி அம்மாளிடம் சீமந்தினியை அனுப்பி வைக்கும்படி மெதுவாகச் சொன்னார். ஆனால் எங்கே, எதற்காக, எப்பொழுது அனுப்பி வைக்க வேண்டுமென்று அவர் தெளிவாகக் கூறவில்லை.

கல்யாணி அம்மாள், 'எப்பொழுது அனுப்ப வேண்டும்?' என்று கேட்டதற்கு அவர் ஒரு நாளையும் நேரத்தையும் சொன்னார். எதற்காக என்பது அவளுக்குத் தெரிந்ததாக அவளுடைய முக பாவத்திலிருந்து தெரிய வந்தது. முதலில் கல்யாணி அம்மாள் முகம் பயத்தால் வெளுத்தது. அப்பொழுது அவர் உள்ளே சென்று சிறிது பணம் கொண்டு வந்து அந்த அம்மாளிடம் கொடுத்தார்.

அந்த அம்மையார் எழுந்து ஒன்றும் முடிவு எடுக்காதவளைப் போல் சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள். கடைசியில், ''சீமந்தினிக்கு ஒன்றும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லி அவள் விடை பெற்றுச் சென்றாள். 'அது என் பொறுப்பு' என்பதுபோல் அவர் தலையை ஆட்டினார்.

இதெல்லாம் நடந்து நான்கைந்துநாட்கள்தான் ஆகியிருந்தன. கல்யாணி அம்மாள் தன் மகளை அனுப்புவாள் என்ற நிச்சயம் அப்போது அவருக்கு இருக்கவில்லை. அன்றைய தினம் எட்டு மணிக்குத்தான் அவளை அனுப்பும்படி சொல்லியிருந்தார். எட்டு மணி முடிந்ததும் அவளைக் காணாததால் அவர் மறுபடியும் எழுந்தார்.

மழைக்கான அறிகுறிகள் தெரிந்தன. ஒரு மின்னல்; அதைத் தொடர்ந்து இடி. காற்று வேகமாக வீசிற்று. கார்மேகத்தின் மணமிருந்த அந்தக் காற்று அவர் உடலைக் குளிர வைத்தது. வரவேற்பறையின் வாசலில் நின்றவாறே அவர் வானத்தை அண்ணாந்து பார்த்தார். வானத்தில் எங்குமே காரிருள் சூழ்ந்திருந்தது. அப்போதும் நாணு திவட்டியுடன் சுற்றிக் கொண்டிருந்தான். கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னலைத் தொடர்ந்து ஓர் இடி பூமியை அதிரடித்தது. திடீரென்று மழை பெய்யலாயிற்று. தனிமை ஒரு பேயென அவரை வாட்டியது.

வயிற்றின் அடிபாகத்தில் வலி திடீரென்று அதிகமாயிற்று. 'சீமந்தினி இப்போது இங்கு இருந்தால்? —' அவர் ஆசைப்பட்டார். அவர் வெளியே வந்தார். அப்பொழுது அவர் அந்தப் படிக்கட்டுக்களை உற்று நோக்கினார். அந்தக் காரிருளில் யாராவது அருகாக இருந்தால்கூடத் தெரிவது கஷ்டமாக இருந்



அளவோடு பெற்றால்
வளமோடு வாழலாம்
உன்னால் எப்படி இவ்வளவு வசதியாக வாழ முடிகிறது? எனக்கு எப்பொழுதும் பற்றாக்குறையாகவே இருக்கிறதே.
என்னுடைய குடும்பம் சிறியது—எனக்கு இரண்டே குழந்தைகள் தான்.
இரண்டு குழந்தைகள் தானு! எங்களுக்கு வருடமொரு குழந்தை பிறக்கிறதே! என்ன செய்வது?
என்ன செய்வதா? என்னைப் போல் நீயும் நிரோத் உபயோகப்படுத்து.
உங்கள் குடும்பம் பெருகாமல் தடுக்கும் சக்தி உங்களிடமே இருக்கிறது.
நிரோத்
உபயோகியுங்கள்
குடும்பத்தைக் கட்டுப்படுத்த
உதவும் உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம் 15 காசுக்கு 3
(அரசாங்க ஆதரவினால் குறைந்த விலை)
நாடு முழுதும் இப்பொழுது கிடைக்கிறது. வீட்டுச் சாமான்கள், மருந்து, வெற்றிலைபாக்கு ஆகியவை விற்கும் கடைகளில் கிடைக்கும்.



பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான்!

நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற் சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப் பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற் கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்கு கிறது. தயாரிப்பவர்கள்: கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்ப தில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடைய வர்கள்.

4 அளவுகள்:
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ்

தது. தவிர அவர் வயது வேறு பார்வையை மங்கச் செய்திருந்தது.

இருட்டில் எவ்வளவு உன்னிப்பாகப் பார்த்தாலும் தெரிவது கஷ்டமாக இருந்தது. காற்றில் கன மழையாகப் பெய்ய ஆரம்பித்திருந்தது.

நாணு கொழுந்து விட்டெரியும் தீவட்டியை ஏந்தியவாறே சைக்கிளில் வலம் வந்து கொண்டிருந்தான். சீமந்தினியை எதிர் நோக்கி அவர் மறுபடியும் படிக்கட்டுகளின் பக்கம் பார்த்தார். அவளுடைய வாலிப உருவத்தைத் தம் கற்பனையில் அவர் காண முயன்றார். ஆனால், அவளுடைய உருவம் எப்படி இருக்கும் என்று அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவளுடைய மென்மையான கை தம் வயிற்றின் மீது பட்டால் இதமாக இருக்கும் என அவருக்குத் தோன்றிற்று. சீமந்தினியை எதிர்பார்த்தபடி அவர் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். வைத்தியக்கார நாணு அப்பொழுதும் அவருடைய வீட்டை வலம் வந்து கொண்டிருந்தான்.

மழையினால் நாணுவினுடைய தீவட்டி அணைய ஆரம்பித்திருந்தாலும் அதன் ஒரு பகுதி அணையாமல் 'மினுக் மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சம் சைக்கிளினுடைய வேகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

அவர் பொறுமை இழந்து உணவறையை நோக்கி நடந்தார். அங்கே மேஜையின் மீது உணவு தயாராக வைக்கப்பட்டிருந்தது. வேலைக்காரன் அவனுடைய அறையில் சென்று படுத்திருப்பான். அந்த வீட்டில் நடப்பதையெல்லாம் காணவோ அறியவோ அவன் முயற்சி செய்யக் கூடாது என்பது அவர் கட்டளை!

மேஜை மீது வைத்திருந்த பொரித்த கோழிக் கறியைப் பார்த்தபோது அவருக்கு உணவு அருந்த வேண்டும் போலிருந்தது. அவர் நாற்காலியில் உட்கார்ந்து மெல்ல உணவு உட்கொள்ளலானார். சிறிதளவு உணவு உட்கொண்டதும் வயிறு நிரம்பினது போல் தோன்ற அவர் எழுந்து கை கழுவினார். சீமந்தினி இந்த நேரத்தில் இங்கிருப்பாளேயானால் உணவு ருசியாக இருந்திருக்குமே என்று அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

அவர் முற்றிலும் பொறுமை இழந்தவராகக் காணப்பட்டார். உணவறையிலிருந்து நடந்து வரவேற்பறையைக் கடந்து அவர் வாசலில் வந்தார். காரிருளைப் பிளந்து கொண்டு ஒரு மின்னல் மின்ன, அதைத் தொடர்ந்து காது செவிடாகும்படியாக ஓர் இடி இடித்தது. அந்த மின்னலின் ஒளியில் படிக்கட்டுகளின் கீழே ஒரு வெளுத்த உருவம் கண்ணில் பட்டது. அதைத் தவிர வேறு எதுவுமே அவரால் காண முடியவில்லை.

வெண்ணிற ஆடை அணிந்த அந்த ஓர் உருவம் படிக்கட்டுகள் வழியாக ஏறி வருவதாக அவருக்குத் தோன்றிற்று. அவரது உறைந்து போன இரத்தம் சிறிது சூடேறலாயிற்று. படிக்கட்டுகள் ஏறி வரும் அந்த உருவத்தை நன்கு காண்பதற்காக அவர் காத்து நின்றார். கடைசியில் அந்த உருவம் படிக்கட்டுகள் ஏறி வெளி வராந்தாவை அடைந்தது. சீமந்தினி! அவளுடைய உடுத்தை அவர் கூர்ந்து கவனித்தார். அவள் சொட்டச் சொட்ட நனைந்திருந்தாள். பலமான காற்று! குடை இருந்தும் அவளை இப்படி நனையச் செய்திருந்தது. இதையெல்லாம் மங்கலாகத்தான் அவரால் காண முடிந்தது.

அவளை உள்ளே வரச் சொல்லி அவர் வரவேற்பறையை நோக்கி நடந்தார். அவள் தன்னைப் பின்தொடர்ந்து வருகிறாளா என்று கவனிக்கக்கூட அவர் முனையவில்லை. வரவேற்பறையை அடைந்ததும் அவர் ஒன்றிரண்டு விளக்கைப் போட்டார். அறையினுள் எங்கும் ஒளி பரவியது. அவர் திரும்பிப் பார்த்தபோது வரவேற்பறையின் கதவருகில் தலை குனிந்தவாறே நின்று கொண்டிருந்த சீமந்தினியின் நனைந்த உருவத்தைக் கண்டார்.

அவளுடைய கையில் இருந்த குடையிலிருந்தும் நனைந்த ஆடைகளிலிருந்தும் நீர் சொட்டுச் சொட்டாக விழுவதை அவர் கவனித்தார். அவர் சைகை காட்ட அவள் ஓரடி முன்னால் வந்து நின்றாள். அப்பொழுதும் அவள் ஒன்றும் பேசவில்லை. மறுபடியும் சைகை காட்டி அவர் படுக்கையறையை நோக்கி நடந்தார். அவள் தமக்குப் பின்னால் நடந்துவருவது தெரிந்தது. படுக்கையறையை அடைந்ததும் அங்கிருந்த ஒரு கண்ணாடிப் பீரோவைத் திறந்தார். அதனுள் நிறையத் துணிகள் இருந்தன. பீரோவைத் திறந்த அவர் திரும்பிப் பார்க்கையில் அங்கே ஓர் ஓரத்தில் அவள் அசையாமல் நின்று கொண்டிருப்பதைக் கண்ணுற்றார். அவள் தலை குனிந்து நின்றிருந்தபடியால் அவளுடைய முகபாவத்தை அவரால் காண முடியவில்லை. அவளுடைய ஆடைகளிலிருந்து சொட்டின தண்ணீர் அவள் வந்த வழியை வகுத்துக் காட்டுவது போல் ஒரு பாதையை வரைந்து வைத்திருந்தது.

அவர் அவளை ஆடைகளை மாற்றச் சொன்னார். ஆனால் அவள் அந்த இடத்தை விட்டு அசையவில்லை. அவர் அவளுடைய அங்கங்களைக் கவனிக்கலானார். கறுத்திருண்ட கருட்டையான நனைந்த கூந்தல். அழகுமிகு பால் போன்ற நெற்றியில் முத்து முத்தாக நீர்த் திவலைகள். நனைந்த ஆடையை ஒட்டியிருந்த விம்மிய மார்பு. கடைந்தெடுத்த அந்தத் தந்தச் சிலையை அவர் கொள்ளை ஆசையுடன் பார்த்தார். ஆடைகளை மாற்ற அவர் அவளிடத்தில் மறுபடியும் கூறியும் குனிந்த தலை நிமிராமல் நின்றாளே தவிர அந்த இடத்தை விட்டு நகரவில்லை. ஆனால், அவள் கடைக்கண்ணால் தம்மைப் பார்ப்பதை அவர் கண்டார். அந்த முகத்தில் அச்சமும் நாணமும் இருப்பது தெரியவே, அவர் அந்த இடத்தை விட்டு வெளியே வந்தார். வெளியே வரும் போது பீரோவிலிருந்து வேறு ஆடைகளை எடுத்து உடுத்தச் சொன்னார். பிறகு வரவேற்பறையில் ஒரு சோபாவில் போய் அமர்ந்து கொண்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கலானார்.

மேலும் அரை மணி நேரம் சென்றது. சீமந்தினி அறையை விட்டு வெளியே வரக் காணாமையால் திகைப்புற்று, அவர் எழுந்து அந்த அறையினுள் சென்றார். அவள் வேறு ஆடைகள் உடுத்திக் கண்ணாடி பீரோவின் முன் நின்று தன் உருவத்தைப் பார்ப்பதை

அவர் கண்டார். அவரைக் கண்டதும் சட்டென்று அறையின் ஒரு மூலையில் சென்று நின்று முகம் குனிந்து தன் கைகளால் கண்களை மூடினாள். ஆனால் விரல்களின் இடுக்குகளின் வழியாக அவள் தம்மைப் பார்ப்பது மட்டும் அவருக்குத் தெரிந்தது.

அவர் மெல்ல அவளருகில் சென்றார். ஒரு சிலை போன்று நிற்கும் அவளுடைய மார்பு மட்டும் மூச்சு விடும்போது உயருவதும் தாழ்வதுமாக இருந்தது! அவர் அவளுடைய தோளைப் பற்றிய போது மின்சாரம் தாக்கியதைப் போன்று வெருண்டு அடங்கி மாறினாள். அவள் உடம்பிலிருந்து கிளம்பிய புது மழையின் மணம் அவர் இரத்தத்துக்கு மேலும் சூடேற்றிற்று. அவர் மேலும் அவளை நெருங்கினார். இந்தத் தடவை அவள் நகரவில்லை. அவர் அவளுடைய மென்மையான கரங்களைப் பற்றினார். அவள் தன்னை விடுவிக்க முயற்சி செய்யவில்லை. அவளுடைய கரங்களைப் பற்றியவாறே அவர் கட்டிலில் அமர்ந்தார்.

அவர் அவளைத் தம்மருகில் அமரச் செய்தார். உணவருந்தினாயா என அவர் அன்புடன் அவளிடத்தில் விசாரித்தார். 'ஆம்!' எனப் பொருள்படும்படி அவள் தன் தலையை மட்டும் அசைத்தாள். தலை குனிந்தவாறே அவள் உட்கார்ந்திருந்தாலும் அவளுடைய முகத்தை மேலும் தெளிவாக அவரால் காண முடிந்தது. அவளுக்குச் சுமார் இருபது வயது இருக்கும். அவளைப் பார்க்கும் போது அவருக்கு ஓர் ஆப்பிளின் ஞாபகம்தான் வந்தது. ஆப்பிள் நினைவு வந்ததும் அவர் எழுந்து உணவறையில் சென்று ரெப்ரிஜிரேட்டரைத் திறந்து இரண்டு குளிர்ந்த ஆப்பிள் பழங்களையும், ஒரு கத்தியையும் கொண்டு வந்தார். அந்தக் கூர்மையான கத்தியை ஆப்பிள் பழத்தில் குத்தி இறக்குவதை அவள் பேரார்வத்துடன் கவனித்தாள்.

அந்தப் பழத்திலிருந்து ஒரு துண்டை வெட்டியெடுத்து அவர் அவளிடம் நீட்டினார். புன்முறுவல் பூத்ததல்லாது அதை அவள் வாங்க முனையவில்லை. அவர் அவளுடைய உதடுகளுக்கிடையில் அந்த ஆப்பிள் துண்டை வைக்க, அவள் குனிந்த தலை நிமிராமல், 'களுக்'கெனச் சிரித்தாள். பிறகு கையில் ஆப்பிள் துண்டை எடுத்துச் சிரித்தபடியே அதைக் கடித்துத் தின்றாள். ஆப்பிள் பழத்தையும் கத்தியையும் நாற்காலியில் வைத்து அவளை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட அவர் முயன்றபோது, கலகலவெனச் சிரித்து அவரை விட்டு நகர்ந்தாள் அவள்.

அந்த இரண்டு ஆப்பிள்பழங்களையும் தின்று முடிப்பதற்குள் அச்சமும் நாணமும் அவளை விட்டு அகன்றிருந்தன. அவள் மெதுவாகச் சிரிக்கவும் அவர் கேள்விகளுக்கு ஒரு வார்த்தையில் விடை சொல்லவும் ஆரம்பித்திருந்தாள். அவர் எழுந்து சென்று அறையின் வெளிச்சத்தைப் போக்கி அவள் அருகில் அமர்ந்தார்.

அவளுடைய கட்டான மேனியைக் கட்டித் தழுவினார். அது அவரைப் போதை கொள்ளச் செய்தது. அப்பொழுதும் முன் போலவே சிணுங்கிறாப்போல் அவள் கலகலவெனச் சிரித்தாள்......

நடு நிசி. மழை மேலும் பலமாகப் பெய்து கொண்டிருந்தது. கண்ணைப் பறிக்கும் மின்னல். காதைத் துளைக்கும் இடி. புயல் வேகத்தில் வந்த காற்று மூடியிருந்த சன்னலின் இடுக்கு வழியாகச் சீட்டி அடித்தபடியே உள்ளே புகுந்தது. திடீரென்று தாள முடியாத வலியுடன் அவர் திடுக்கிட்டு எழுந்தார். அடிவயிற்றில் கத்தியால் குத்தினது போன்ற வலி. அவர் உடலில் வியர்த்துக் கொட்டியிருந்தது. அவர் கைகால்கள் தள்ளாடிப் போயிருந்தன. அவரால் எழுந்து நிற்க முடியவில்லை. தாள முடியாத வலி. அவர் கைகளையும் கால்களையும் தரையில் ஊன்றி நின்றார். வலி நெஞ்சின் இடது பக்கத்துக்குப் பரவிக் கொண்டிருந்தது.

அவருக்கு உரக்கக் கத்த வேண்டும்போல் இருந்தது. ஆனால் குரல் வெளியே வரவில்லை. முட்டிபோட்டு நடந்தபடியே அவர் அறையை விட்டு வெளியேற முயன்றார். வரவேற்பறையை அடைந்தபோது அவருக்கு மூச்சு திணறிக் கொண்டிருந்தது. வராந்தாவை அடைந்ததும் அந்தப் படிக்கட்டுகள் அவருக்கு மங்கலாகத் தெரிந்தன. அந்தப் படிக்கட்டுகள் வழியாகக் கீழே இறங்கித் தப்பிக்க வேண்டும் போல் இருக்க, அவர் படிக்கட்டுக்களை நோக்கி இழையலானார். மார்பில் வலி உச்ச நிலையை எட்டியிருந்தது. அப்பொழுது ஒரு மின்னலும் அதைத் தொடர்ந்து அண்டமே அதிரும்படியான ஓர் இடியும் முழங்கிற்று. மறுகணம் எங்கும் காரிருள் பரவ அமைதி நிலவிற்று. அந்த அமைதியின் பயங்கரத்தை எடுத்துக் காட்டுவது போல் நாயொன்று அழுவது மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. மறுகணம் அந்தப் படிக்கட்டுகளில் ஓர் உருவம் ஏறி வருவதைக் கண்டார்! வெண்ணிற ஆடையில் உடலை மூடி மறைத்த ஓர் உருவம்! மூச்சுத் திணற, சகதுக்க, தாள வலியுடன் அவர் மறுபடியும் தம் கண்களை நன்கு திறந்து பார்த்தார். ஆம், ஒரு பெண்ணுருவம்! அந்தப் பெண்ணுருவம் மெல்ல மெல்ல அந்தப் படிக்கட்டுகளில் ஏறி வந்து கொண்டிருக்கிறது. அவர் ஓரடி முன் வைத்தார். நெஞ்சைத் துளைக்கும் வலி. மூச்சு அப்படியே நின்று விடும் போலிருந்தது. அவருக்குத் தாம் ஒளி இழப்பதாகத் தோன்றிற்று. அடிவயிற்றின் வலது பக்கத்திலிருந்து ஒரு பொருள் உருண்டு திரண்டு மேலே வருவதானான ஓர் உபாதை. அவர் பயங்கரமாகக் கூக்குரலிட்டார். மறுகணம் அவர் அந்தப் படிக்கட்டுகள் மீது விழுந்தார். அவரது உடல் உருண்டு உருண்டு தரையை அடைந்தது. பேய் மழை அப்பொழுதும் பெய்து கொண்டிருந்தது. நாயின் கர்ச்சனை அப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவள் அப்பொழுதும் சைக்கிளில் சுற்றிக் கொண்டிருந்தாள்!

மறு நாள் காலையில் வேலைக்காரன் தன் முதலாளியின் உயிரற்ற சடலம் முற்றத்தில் கிடப்பதைக் கண்டான். அதன் வாயிலிருந்து உதிரம் பெருக்கெடுத்துத் தரையில் உறைந்து கிடந்தது.

அடை மழை அப்பொழுதும் நின்றிருக்கவில்லை.

தமிழாக்கம் : கே. நாராயணன்


இந்த விவசாயிகளிடையே போதுவாகக் காண்பது என்ன?



ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டும், அதன்மூலம் கிடைத்த சுபிட்ச வாழ்வும்.

நாடெங்கும் உள்ள விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்க வகை செய்வது, பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்.

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் பெஸ்ட் அளிக்கிறது. ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, பெஸ்ட்!



BEACON

பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.

(ஸ்தாபிதம் : 1879)

13/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1

தமிழ் நாட்டில் கிளைகள்:

6/434 திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

49-D, மதுரை ரோடு, திருச்சி-1

Focus.BC.191(Tam(a)

Benson 286C/3/TAM

உங்களுக்கு சுவையுள்ள, கெட்டியான, ஸ்ட்ராங்கான மற்றும் உடனே தயாராகும் காபி வேண்டுமோ...

இதோ
ப்ரூ
இருக்கிறது





ப்ரூக் பாண்ட்
ப்ரூ
இன்ஸ்டன்ட்

காபி சிக்கரி ப்ளெண்ட்

கெட்டியான, ஸ்ட்ராங்கான
காபி-சிக்கரி கலவைதான் ப்ரு.
உடனடியாக தயாராகிவிடுகிறது!
புத்துணர்ச்சியளிக்கும்
மிகச் சிறந்த பானம்.

சுவரிலக்கியம்

'நம்ம குழந்தைகள்', 'நாடோடி மன்னன்', 'எங்க மாமா', 'எங்கிருந்தோ வந்தான்' போன்ற திரைப்படச் சுவரொட்டிகள் சுவர்களை அலங்கரித்துக் கொண்டிருப்பதைப் பற்றி இங்கு இலக்கிய ஆராய்ச்சி செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் (நிஜமாகவே படிக்கும்!) மாணவர்கள் தங்கள் அறைச் சுவர்களில் எழுதி வைத்திருக்கும் -- வைத்திருந்த -- வாசகங்களை எழுதுகிறேன்.

ஒரே அறையில் தங்கிப் படித்த இரு மாணவர்கள் தங்கள் அறைச் சுவரில், 'நிசப்தமே மனிதனின் தலையான கடமை' என்ற கார்லைலின் வாசகத்தைக் கொட்டையாக எழுதி வைத்திருந்தார்கள். பாவம், கார்லைல்! அவருடைய கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட நேரமெல்லாம், வார்டன் இரவு நேரத்தில் அந்தப் பகுதிக்கு ரோந்து வரும்போதுதான்!



மற்றோர் அறையிலிருந்த மாணவர் 'நிசப்தம் தங்கத்துக்கிணையானது' என்று பொருள்பட எழுதி வைத்திருந்தார். ஆனால் அவர் மதிப்பில் எப்போதுமே வெள்ளிதான் தங்கத்தைவிட உயர்ந்திருந்தது.

இன்னொரு மாணவர் தம் அறைச் சுவரில் 'தோல்வியே வெற்றியை நோக்கிச் செல்லும் படிக்கட்டுகள்' என்று பொருள்பட எழுதியிருந்தார். அந்த மாணவர் விடுதியை விட்டு வெளியேறும் போது பரீட்சையில் வெற்றி பெறவில்லை!

இந்த ஆண்டு சுவரிலக்கியத்தைப் பற்றிக் காதில் விழுந்ததையும் சொல்லி விடுகிறேன். "நாங்கள் பகலில் மருந்து சாப்பிடுகிறோம் இரவில் ஊசி போட்டுக் கொள்கிறோம்" என்ற தூய தமிழ் வாசகம் ஒரு விடுதி அறையில் காணப்பட்டதாம்! பகலில் விடுதியில் சாப்பிடும் ருசி குறைந்த சாப்பாட்டையும், இரவில் அநுபவிக்கும் கூர்மையான கொசுக் கடியையும்தான் சுவரிலக்கிய நாயகர்களாக மாற்றியிருந்தனர் மாணவர்கள்!

கொரிக்கவும் சிரிக்கவும்


கோமதி சுவாமிநாதன்

ஸ்டாலின் ஜிந்தாபாத்!

மாஸ்கோவிலிருந்து தப்பி ஓடி எப்படியோ இரும்புத் திரையைக் கடந்து மேற்கு ஜெர்மனியிலிருந்த அமெரிக்கர்களிடம் ஒரு ரஷ்ய ஆசாமி சரணடைந்தான். அவனைச் சோதனையிட்டபோது அவனிடம் பல நிறங்களாலான மாத்திரைகளும் மடித்து வைக்கப்பட்ட ஒரு ஸ்டாலின் உருவப் படமும் இருந்தன.



"இந்த ஆரஞ்சு நிற மாத்திரை என் பல் வலிக்காக. பச்சை மாத்திரை அஜீரணத்துக்காக.... இந்தச் சிவப்பு மாத்திரை மூக்கடைப்பு வியாதிக்காக. இந்தப் படம் என் வீட்டு நினைவு எழுந்து என்னைத் துன்புறுத்தாமல் இருக்க" என்று விளக்கம் கொடுத்தான்.



அருள் வாக்கு

மேற்கு வங்காளத்தில் முன்னாளைய உதவி முதல் மந்திரி ஜோதிபாசுவிட்டுக்கு விஜயம் செய்த கவர்னர் தர்மவீர் ஸ்ரீமதி ஜோதிபாசுவை நோக்கி, "நீங்கள் தீர்க்கசுமங்கலியாக இருங்க. உங்கள் மாங்கல்யத்தை எமதர்மராஜனும் கூட அபகரிக்க முடியாது. வாழ்நாள் முழுதும் சுமங்கலியாகவே தாங்கள் விளங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

பொருள் வாக்கு



ஜோதி பாசுவைத் தாக்கியவரைக் கண்டுபிடிக்க உதவுபவருக்கு இரண்டாயிரம் ரூபாய் சன்மானம் அளிப்பதாக பீஹார் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிவித்தார்.

இருள் வாக்கு

"இரத்தம் சிந்துவதை இரத்தம் சிந்தியே சமாளிப்போம். எங்கள் கூட்டணி போராளிகளைத் தான் ஜனதா ஆட்சியைத் தூக்கி எறிவோம்" என்று கோஷம் எழுப்பி அதிரக்கூடிய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுகள் பாட்னா நகரில் ஊர்வலம் நடத்தினார்கள்.

சட்டமன்றத்தில் சங்கீதம் ஒலித்தால்...!

அருள் புரிவாய்
கருணை முதல்வா
அருங்கலை அனைத்தும் தனி
அமைச்சர் கீழ் வரவே
(அருள் புரிவாய்)

—சட்டமன்ற உறுப்பினர் திரு கே. விநாயகம்

கலைக்கொரு மந்திரி
எதற்கு - இங்கு
கலைஞரே இருக்கையில்
நமக்கு (கலைக்கொரு)

— முதலமைச்சர் மு. கருணாநிதி

(சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் திரு கே. விநாயகம் தமிழகத்தின் கலாசாரத்தைக் கவனிப்பதற்கென்று ஒரு தனி அமைச்சரை நியமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.)



செய்திப்பாடல்

முப்பது பதினைஞ்சாச்சே — முத்தம்மா
'முன்னேற்றி'ப் போனேமடி — முத்தம்மா
மூணுலிப் போனாலும் போகுமே
முழுகும் கோவிந்தாகூட ஆகுமே!

அப்போ

வரப்பெல்லாம் உழவனுக்கே — முத்தம்மா
வயலெல்லாம் சர்க்காருக்கே — முத்தம்மா
பலனிறமும் வெப்பாகவே ஆகுமே
பாரதமும் பாஞ்யா என்று மாறுமே!



பையைத் தடவும் எழுத்தாளரே, படித்துப் பாரும்

"முழுசாக எழுதக்கூட இல்லை அந்த எழுத்தாளர். நாவலின் சுருக்கத்தைத்தான் அனுப்பி வைத்தார். பிரமாதம். உடனேயே அவருக்குப் பதினைஞ்சாயிரம் பவுன் அட்வான்ஸ் கிடைக்கச் செய்தோம். நாங்கள் இருக்கும்போது நீங்கள் தயங்குவானேன். எழுதுங்கள்! எங்களிடம் அனுப்பி வையுங்கள்."

இது அமெரிக்க நாட்டில் எழுத்தாளர்களுக்கு 'ஏஜண்டாக'ப் பணிபுரியும் நிறுவனம் கொடுத்த விளம்பரம்.

பழுத்துவிடும் பெருமூச்சுவிடும்!

பட்டுமாமா-சீட்டுமாமி

மனைவி : கைத்தறிப் பொருட்காட்சிக்கு அழைத்துப் போகிறேன் போகிறேன் என்று சொல்லிக் கடைசியில்...

கணவன் : அங்கே துணி விலைக்கு ரிபேட் கொடுத்த மாதிரி பிரசங்கம் பண்ண வந்தவங்களும் தங்கள் பேச்சுக்குக் கொஞ்சம் ரிபேட் கொடுத்தால் தேவலை, போகலாம்.




மனமகிழும் காலைப் புத்துணர்வு மணிக்கணக்கில் நிலைத்திருக்க...

குளித்த பிறகு பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர் டால்க்! பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர் டால்க்கின் நீங்காத நறுமணம்... ஈரத்தை இழுக்கும் தன்மை... நாள் முழுவதும் காலைப் புத்துணர்வின் சுகம். இவை யாவரையும் உங்களிடம் ஈர்க்கும்.

கோடையானாலும் இறுக்க மாறாலும் நறுமணத்துடன் புதுமைப் பொலிவில், குளுமை உணர்வில் உங்களை திகழ வைக்கும் எக்காலத்துக்கும் ஏற்ற பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர் டால்க் இந்தியாவிலேயே அதிக விற்பனையாகும் டால்க்.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது. ஃபாமிலி, பெரியது, மத்திமம்.



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃபிளவர் டால்க்

சொகுசான சுகமளிக்கும் மிருதுவான டால்க்

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட்

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏவில் இணைக்கப்பட்டது)



கடந்த 12–3–70 அன்று நான் பாண்டு குடியிலிருந்து தேவகோட்டை செல்லுவதற்காக, – ஒரியூர் காரைக்குடி பேருந்தில் (ஆண்டவர் டிரான்ஸ்போர்ட் எம்.டி.ஆர்.: 4534) பயணம் செய்தேன். பஸ் திருவாடானை பேருந்து நிலையத்தை நெருங்கும் போது ஒரு போலீஸ்காரர் அதனை வழிமறித்துத் திருவாடானை காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் காரைக்குடிக்குச் செல்ல இருப்பதாயும் காவல் நிலையத்துக்குச் சென்று அவரை அழைத்துச் செல்லுமாறும் கூறினர். அதன்படியே பேருந்து அங்கிருந்து மூன்று பர்லாங் தொலைவில் உள்ள காவல் நிலையத்துக்குச் சென்று அவரை ஏற்றிக் கொண்டு வரும் வழியில் அவர் வீட்டு வாயிலில் நிறுத்தி அவருடைய தொப்பியை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றது. இதனால் ஏற்பட்ட பதினைந்து நிமிட தாமதத்தினால் என்னால் தேவகோட்டை – தஞ்சாவூர் பேருந்தைப் பிடிக்க முடியவில்லை. இம்மாதிரி பொறுப்புள்ள அரசாங்க ஊழியர் செய்யும் பொறுப்பற்ற செயலை அரசு கவனிக்குமா ?

பாண்டுகுடி
14–3–70 கே.எஸ். கருப்பையா

சென்ற 10–4–70 தேதியிட்ட 'இந்து' நாளிதழில், திருவனந்தபுரத்தில், கிருஷ்ணன் நம்பியார் என்ற நிலச்சுவான்தாரை நூற்றுக்கும் மேலான 'நக்ஸல் பாரிகள்' சித்திரவதை செய்து கொன்று விட்டு, பட்டாசுகளையும், வெடிகளையும் வீசிச் சென்றனர் என்றும், மேற்படி நம்பியார் ஒரு காங்கிரஸ் ஆதரவாளர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதே தேதியிட்ட, ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளிதழில், ஹைதராபாத்தில், நரசிம்மராவ் என்ற கர்ணத்தை 'நக்ஸல் பாரிகள்' ஈட்டியால் குத்திக் கொலை செய்து விட்டு, அவருடைய இரத்தத்தால் சுவரில் 'மாவின் போதனை'களை எழுதிச் சென்றதுடன் ரூபாய் ஐயாயிரம் மதிப்புள்ள சொத்துக்களையும் கொள்ளையடித்துச் சென்றனர் என்ற செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது. இவை இரண்டும் மிகப் பயங்கரமான படுகொலைகள். இராமகிருஷ்ணர், விவேகானந்த அடிகள், காந்திஜி போன்ற மகான்கள் அவதரித்த நாடாகத் தெரியவில்லை. 'கம்யூனிஸம்' என்ற கொடிய நஞ்சு நம் நாட்டை விட்டு ஒழிக்கப்படாவிடில் நமது எதிர்காலம் சூனியமாகி விடும்.

தருமபுரி
11–4–70 கமலா

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது

நாட்டிலே பலவிதமான பிரச்னைகள் எழுந்திருக்கும் இந்நேரத்திலே, தேவையில்லாத காரியங்களில் ஏன் காலத்தை வீணடித்துக் கவனத்தைச் செலுத்த வேண்டும்? தமிழக அரசாங்கமே பொறுப்பேற்று நடத்தும் கோவில்களில் ஒன்று மாயூரம் தாலுக்காவில் செம்பனார் கோவில் கிராமத்தில் உள்ள சுவர்ணபுரீஸ்வரர் ஆலயம். இங்கு முதலில் ஸ்ரீ சுவர்ணபுரீஸ்வரர், ஸ்ரீ பிர்மா, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி என்று எழுதப்பட்டிருந்த வாசகங்கள் தற்போது திரு சுவர்ணபுரீஸ்வரர், திரு பிர்மா, திரு தட்சிணாமூர்த்தி என்று மாற்றப்பட்டுள்ளன. அம்பிகை பெயரும் திரு துர்க்கை என்று காணப்படுகிறது. ஏன், திருமதி துர்க்கை என்று மாற்றியிருப்பதுதானே ?

மகாராஜபுரம்
9–4–70 வி. முருகந்தன்

நிலாவும், ரவியும் தங்கப் புத்தர் கம்யூனிஸ்டுகள் கையில் சிக்கி விடாமல் போராடி வெற்றி கண்டார்கள். (சிலையைத் தேடி) நமது பாரத நாடு கம்யூனிஸ்டுகளாலும், நக்ஸல்பாரிகளாலும் தொல்லை அடைந்துள்ளது. நமது பாரத சர்க்காரும், இளையபாரதத்தினரும் எப்போது கம்யூனிஸ்டு அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றப் போகின்றனரோ ?


காரைக்குடி – 1
5–4–70 இலத்தூர் மணி

காப்பியடித்துப் பரீட்சை எழுத அனுமதிக்க மறுத்த ஆசிரியர் ஒருவர், மாணவர்களால் கட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்துப் பெரிதும் அதிர்ச்சியடைந்தேன். எங்கோ நடந்தது என்று அலட்சியப்படுத்தக் கூடிய நிகழ்ச்சி அல்ல இது ! ஏற்கனவே அரசியல்வாதிகளின் தலையீடு, திரைப்படங்களின் செல்வாக்கு இவை காரணமாக மாணவர்களின் கவனம் படிப்பிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறது. நாடு நெடுகப் பரவியுள்ள வன்முறைகள், பதவிப் பித்தலாட்டங்கள், ஒழுங்கீனங்கள் மாணவர் உலகிலும் செல்வாக்குப் பெற்று வருகின்றன என்பதற்கு இத்தகைய நிகழ்ச்சிகளே தக்க சான்று! வருங்கால இந்தியாவை உருவாக்குகிற மாணவர் சமுதாயம் திசை மாறிச் சென்று கொண்டிருப்பது மேலும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் சற்றும் ஐயம் இல்லை.

அறிவுக் கண்களைத் திறக்கின்ற ஆசிரியர்களைத் தெய்வமாகக் கருதுகின்ற பாடத்தை, முதலில் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் ஆழப் புதைத்து விட்டுப் பட்டங்கள் பெறுவதுதான் குறிக்கோள் என்றால், இருக்கின்ற கல்லூரிகளை இழுத்து மூடிவிடலாம்.

சென்னை–34
11–4–70 இராம. கப்பையா

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப் படுத்தும்—இதர நோய்கள் பாதிக்கவும் இடமளிக்கும்.

வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்தி ஆரோக்கியமாகவும் சக்தியுடனும் திகழுங்கள்



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைப்பதால், இதர நோய்கள் உங்களைப்பாதிக்கக்கூடும். எனவே தவறாது வாடர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிட்டு வாருங்கள். பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டு, உடலுக்கு நோய்த்தடுப்புச்சக்தியை அளிக்கும் ஊட்டப்பொருட்கள் அடங்கியது வாடர்பரீஸ் காம்பவுண்ட். அதிலுள்ள க்ரியோஸோட் மற்றும் க்வயாகால் இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.

வாடர்பரீஸ் காம்பவுண்ட்—மிகவும் நம்பகமான டானிக்

வார்னர்-ஹிந்துஸ்தான் லிமி.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

